www.padippakam.com

# ஆண்டுச் சிறப்பிதழ்

உள்ளே:

## 'அதிருத்ரம்', — பிராமணர்கள்

—நா. விச்வநாதன்

## இது தலித்துகளின் காலம்

—இரா. நடராசன்

## மெல்ல உடையும் மௌனம்

அக்டோபர்-நவம்பர், 1994

விலை ரூ. 6.

படிப்பகம்

www.padippakam.com



தமிழர், இந்தியர்—
இன்னும் இன்னும் பரந்த மனப்பான்மையுடன்
மனிதர் என்கிறோம்

பிராமின், நான்பிராமின்,
பறையர், படையாச்சி என்பது
சீலைப் பேன் குத்துவது.
தெருவில் நின்று, தேனீர்க் கடையில் குந்தி,
இதைச் செய்வது நாகரிகம் ஆகாது.

அய்யர் என்பது போல்,
முதலியார் என்பது போல்
சொல்லிக் கொள்ள முடிவதில்லை சாதியைச் சிலருக்கு.
சென்னைக்குப் போய்வந்தவர் கதையைச்
சொன்னார் அரிவாசகம்:

முதலியார் என்று சொல்லிக்கொண்டு,
வீட்டில் புகுந்து,
வெள்ளை அடிக்கிறார் நம்ம ஆள்.
ஏணியில் நிற்கிறார்.
எந்த வறுமையோ எந்தக் கொடுமையோ—
அழிப்பது போல் அடித்துக்கொண்டிருக்கிறார்.

வீட்டுக்காரர் கேட்கிறார்:
"மொதலியார்,
நம்மாளுங்க தறி அடிச்சது போதும்.
வேற ஏதாவது அடிச்சாதான் முன்னேற முடியும்.
என்ன சொல்றீங்க மொதலியார்-"
அரிவாசகம் நன்றாகச் சிரிப்பார்:
"ஒங்களத்தான் மொதலியார்-"
'நம்ம மொதலியார்,'
விழித்தவர் போல் திரும்புகிறார்.
(மொதலியாரா? நம்மளத்தானா?- )

"ஆமாங்க! ஆமாங்க!"

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

தனியிதழ் விலை ரூ. 5.
ஆண்டுச் சந்தா ரூ. 60.
ஆயுள் சந்தா ரூ. 600.
சந்தாவை **M. O.** செய்க.

படைப்பிலக்கிய மாத இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரண்



முகவரி:
ஆசிரியர்,
"கவிதாசரண்",
31, டி. கே. எஸ். நகர்,
சென்னை–600 019.
தொலைபேசி எண்: 54 44 99


# அக்டோபர் 21

## காலக் கணக்கில் இதழின் நான்காம் ஆண்டுத் தொடக்கம்.

**அக்டோபர்-நவம்பர், 1994. சிறப்பிதழ் விலை ரூ.6**

சென்ற இதழுக்கான விமர்சனத்திற்கு ஈராண்டு சந்தா பெறுகிறவர் கவிஞர் பாரதிராமன் அவர்கள். விமர்சனம் அடுத்த இதழில்.

"மனித நேயப் பார்வையோடு, தமிழின் கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப் பயணம். தமிழுக்கான பரிமாணங்கள் யாவும் இதழுக்கான திசைகளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

● தி. க. சிவசங்கரன், நெல்லை–6

தங்கள் தலையங்கக் கட்டுரையைப் படித்தேன். மிக்க நன்றி. என் போன்ற 'வைதிக' எழுத்தாளர்களுடன் 'ஒன்று படுதல் — விமர்சித்தல் — ஒன்று படுதல்' என்னும் தங்களது நட்புறவு வழியை நான் மதிக்கிறேன் பாராட்டுகள்.

'வைதிகம் என்றால் என்ன?' என்னும் எனது கேள்விக்குச் சரியான மனநிறைவு தரும் விளக்கம் தாங்கள் அளிக்கவில்லை. 'பாரதி, பாரதிதாசன், வ. ரா., புதுமைப்பித்தன் பாதையில் ஒருவன் செல்வது வைதிகமா?' என்ற என் கேள்விக்குத் தாங்கள் நேரிடையாகப் பதிலளிக்கவில்லை. அது வருந்தத்தக்கது. என் பாதை தவறா? தவறு இருந்தால் கூறுங்கள்; திருத்திக்கொள்கிறேன்.

"வைதிகம் என்றால் என்ன என்பதை விட, வைதிகத்தின் ஊற்றுக் கண் ஆதிக்க மனோபாவம் என்பதும், அந்த ஆதிக்க மனோபாவத்தின் வயது - மனிதனது அச்சத்தின் வயது என்பதும் எனக்குக் கொஞ்சம் விளங்கும் படியாய் இருக்கிறது" (பக்கம் 7) என்று விவாதத்தைத் திசை திருப்புகிறீர்கள்! ...

ஆதிக்க மனோபாவம், அச்சம், மடமை, மிடிமை, ஒடுக்குமுறை, சுரண்டல் இவையெல்லாம் மனிதகுல விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பின், அவை எங்கிருந்தாலும் தகர்க்கப்பட வேண்டும் என்றுதானே மார்க்சியம் - லெனினியம் கூறுகிறது? இத்தகைய விடுதலையை நோக்கிய நெடும்பயணத்தில் தானே பொதுவுடைமைக் கட்சிகள் ஈடுபட்டுள்ளன? இதைத்தானே உலக வரலாற்று நிகழ்ச்சிகள் காட்டுகின்றன? இந்த லட்சியப் பயணத்தில் கொடிய தவறுகள் நிகழ்கின்றன என்பதும் மறுக்கமுடியாத உண்மை. சோவியத் ஒன்றியத்தின் சிதைவு அதற்கு ஒரு சான்று. இதை 'கவிதாசரணில்' இதற்கு முன்பு நான் எழுதிய தாங்கள் வெளியிட்ட கடிதம் ஒன்றில் (கவிதாசரண், நவ — டிசம்பர் 1993 இதழில்) ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தாங்கள் மறந்துவிட்டது ஏனோ? இது மிக வருந்தத் தக்கது.

"கம்யூனிஸ்டுகள் தவறுக்கு அப்பாற்பட்டவர்கள் என தாங்கள் நம்புகிறீர்கள் என்பது என் புரிதல்" (பக்கம் 8) என்று தங்கள் கட்டுரையில் கூறுகிறீர்கள். இது மிகத் தவறான புரிதல் என்பதை அன்போடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் என்பவர்களும் மனிதர்கள்; அவர்கள் தவறு செய்கிறார்கள். அதே சமயம் நியாயமான விமர்சனங்களை ஏற்று, தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ள முயலுகிறார்கள். இதை 'சித்தாந்த நெகிழ்வின்மை' என்றும், 'அரசியல் வைதிகம்' என்றும் தாங்கள் பிடிவாதமாகக் கருதினால் என்ன செய்வது? முழுமையை நோக்கிப் பொதுவுடைமை இயக்கம் இன்னும் விழிப்புடன் உழைக்க வேண்டும். தனது தவறுகளை உடனுக்குடன் களைந்து முன்னேற வேண்டும் என்பதில் உங்களுடன் ஒன்றுபடுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

பின் குறிப்பு:

''முழுமையைத் தேடும் முழுமையற்ற புள்ளியாகவே'' நான் இன்னும் இருக்கிறேன். தாங்கள் எதிலும் முழுமையை விரும்பும் லட்சியவாதி. என்னிடம் நிரம்ப எதிர்பார்க்கிறீர்கள். தங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றும் அறிவும், ஆற்றலும், பக்குவமும் எனக்கு வரவேண்டும் என்பதே என் அவா.

★ கடிதம் ஒரு கம்பீரமான உள்ளத்தின் கண்ணியமான வெளிப்பாடு. நம்மைக் கற்றுக்கொள்ளத் தூண்டும் நாகரிகம்.—ஆ- ர்.

=

● **ஷாராஜ், அனுப்பூர்**

உங்கள் தீர்க்கமான போக்கு திகைக்க வைக்கிறது. யாராயினும் அவர்களின் தவற்றைச் சுட்டுகிற - விமர்சிக்கிற போக்கு இன்றைய தமிழ்ச் சூழலில் ஆச்சரியம்தான். குழையடிப்பது என்பது இங்கே அவசியமானதும் இயல்பானதுமாகிப் போன நிலையில் உங்கள் குரலை உயர்த்திப் பேசுகிறீர்கள். பொதுவில் சிற்றிதழ்கள், இலக்கியவாதிகளிடையே குழுமனப்பான்மைகள் இருக்கும். நீங்கள் அப்படியொரு மனப்பான்மையை உண்டாக்காமலிருப்பது- உங்கள் தனித்துவத்தோடு செயல்படுவது சந்தோஷம் தருகிறது. தேவைக்கேற்றவாறு மாற்றிக் கொள்ளத்தக்க வகையிலான முகமூடிகளிடையே அசலான முகத்தைப் பார்த்த சந்தோஷம் அது!

அடேயப்பா! நவீனத்துவம் என்ற பேரில் மூளையைக் குழம்ப அடிக்கும் பேர்வழிகளில் ஜெயந்தன் எத்தனை எளிமையாக நமக்குள்ளிருக்கும், எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிற நாடகத்தனத்தைப் புரிய வைத்துவிட்டார்! இனியும் அவர் அசத்தக் கூடும் என்ற எதிர்பார்ப்பிருக்கிறது.

கரிகாலனின் கதை 'இயல்பு போல' முடிந்தாலும் எதிர்பார்த்த மாதிரியே முடிவு. என்றாலும் ஒரு கிராமத்து வாழ்வின் ஒடுக்கப்பட்டவர்களின் எளிய ஆசைகள் கூட பலிக்காமல் போவதைப் படம்பிடித்துவிட்டது அவரது பேனா துல்லியமாக.

=

● **குன்றம் மு. ராமரத்நம், கோவை- 7**

சமீபத்திய சிற்றிதழ்களின் போக்கை ஊன்றிக் கவனித்ததில் எனக்கோர் சலிப்பு: ஒன்றுக்கொன்று மோதி, அல்லது தனிநபர்களைச் சாடிக்கொண்டிருப்பதுதான் அத்தகைய உணர்வுத் தளர்ச்சியை என்னுள் உண்டாக்கியுள்ளது.

இதுபற்றி 'நிகழ்' சிற்றிதழாளர் ஞானியிடமும், 'நிறப்பிரிகை' சிற்றிதழ்க் குழு அ. மார்க்ஸிடமும், சமூக நீதியார் திருப்பூர் கருணா மனோகரனிடமும்: '''கவிதாசரண்' நேருக்கு நேர் மோதுகிறது; 'நிகழ்' ஆள் வைத்து அடிக்கிறது; 'நிறப்பிரிகை'யோ கும்

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

பலாக மோதுகிறது,'' என்று குறிப்பிட்டு, அவர்கள் எதிர்வினையை எதிர்பார்த்தேன். மழுப்பல்தான் பதிலானது. இப்போது உங்கள் கவனத்திற்கும் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த மூன்று இதழ்களுமே மிகச் சிறப்பான சிற்றிதழ்கள்.

உங்கள் நியாயம் குறித்த ஆதங்கம், குற்றம் கண்டு குமுறும் இயல்பு பாராட்டுக்குரியது. பாராட்டுகிறோம்.

நான் இந்த இடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் இதுதான்: மோதலில் வேண்டாத சில கற்பித பிம்பங்கள் உடையும் - உண்மைகள் வெளிச்சப்படும் - வாசகர்கள் விழிப்பெய்துவர் என்பன உண்மையாயினும் அந்த மோதல் இலக்கிய வரம்புக்குள் நாகரிகமாக இருக்கட்டும். வசைக்கு வசை என்னும் நிலைக்குத் தாழ்ந்து போக வேண்டாம் என்பதுதான்.

தமிழ் இலக்கிய வரலாற்றை இன்றுள்ள சில கிழங்கள் தங்கள் வரலாறாக - தங்கள் தமர்கள் வரலாறாக மாற்றும் முனைவில் முழு மூச்சாக- பலர் இலக்கியக் கொடையை மறைப்பதில் முழு முயற்சியோடு இயங்கும் வெறித்தனங்கள் நியாய உணர்வு கொண்டோர் மனதைப் புண்ணாக்குகின்றது. இதற்கோர் முடிவு தேவைதான். ஆனால் அதை எப்படி தமிழ்ப் பண்பாட்டுக்கு ஊறு விளையாமல் செய்வது என்பதுதான் கவனத்துக்குரியது.

தமிழ், தமிழர் கருத்தியல் - பண்பாட்டுத் தளங்களை உலகளவில் மேலெடுத்துச் செல்லும் தங்கள் ஆர்வம் - அர்ப்பணிப்பு யாரும் அறிந்து கொள்ளக் கூடியது. அதற்காக தங்களைப் போற்றுகிறேன்; வாழ்த்துகிறேன்.

★ இக் கடிதத்தின் ஆலோசனைகளைக் கட்டளைகளாக நினைவில் இருத்துவோம். —ஆ- ர்.

=

● **த. உ.தயசேனன், சென்னை– 61**

---

''இலக்கியச் சிற்றிதழாக இது முத்திரை குத்தப்பட்டது.(யாரால் என்று தெரியவில்லை.) ஆனால் இன்று சிற்றிதழிலும் சேர்க்க முடியாது. பெரிய பத்திரிகையும் இல்லை,'' என்று கூறி தன் அலித்தனத்தை ஆதங்கிக்கும் 'கணையாழி' ஆசிரியரை கவிதாசரணுடன் ஒப்பிட்டபோது சில கேள்விகள் எழுந்தன. என்ன துணிவில் இப்படிப்பட்ட விமர்சன வெளிப்பாடுகள் அனுமதிக்கப்படுகின்றன?

முத்திரைகளைக் குத்தக் காத்து நிற்கும் கைகளுக்குத் தப்பி, தவண்டு வளர்ந்துவிட ஆசையில்லையா?

யாரையும் பகைக்காமல் மேடையேறி சுயம் பாட விருப்பமில்லையா?

பலர் ஒரே குரலில் சொல்லக் கூடியது வைதீக எதிர்ப்பு ஆனால், அதற்கு உள்ளே இருப்பது? தற்காப்பு! ஆமாம். வைதீ

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

கத்திடமிருந்து தமிழையும் இலக்கியத்தையும் பாதுகாப்பது. அது தான் கவிதாசரணில் சிறப்பாகத் தெரிகிறது. 'இலக்கியத்துக்காக' என்று சொல்லிக்கொண்டு முன்னுக்கு நிற்கும் பத்திரிகைகளின் படைப்புத் தேர்வுகளை உற்று நோக்கிய போது இதை நான் ஆழ உணர்ந்தேன்.

'தேவ்டியா' என்பது ஒரு சந்தர்ப்பத்தில் 'அன்பே - டார்லிங்' ஆகிப்போவதை சிறப்பாகச் சொல்கிறார் ஜெயந்தன்.

'இலக்கியம் மயிரு' என்னும் டி. வி. பாலசுப்பிரமணியம் நிர்வாகப் பொறுப்பு என்றால் என்ன என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கிப் போகிறார் என்று தெரியவில்லை.

சுஜாதாவைவிட அவரின் புகழில் நம்பிக்கை கொண்ட ஞானக் கூத்தன், தான் தரமான இலக்கிய இதழாகக் கருதும் கணையாழி கவிதைக் கூட்டத்தில் அதைப் பலமாக புரிந்து கொண்டவர்.

இப்போதெல்லாம் சுஜாதா பாதையில் தன் பாதம் வைக்க காரணங்களை வலிந்து கண்டு பிடிக்கிறார்.

"கா நா. சு பலரையும் 'பொருட்படுத்த வேண்டியவர் அல்லர்' என்று தள்ளியது - காலம் சரி என்று ஒப்புக் கொண்டுவிட்டது," என்று அவர் எழுதியது, மற்றவர் விஷயத்தில் எப்படி இருப்பினும் அவர் விஷயத்தில் உண்மையாய் போச்சு.

=

● **பாட்டாளி, திருச்சி**

நல்ல இதழின் அடையாளம் ஒரே மூச்சில் படித்து முடித்து விடுவதுதான் என்று சொல்வார்கள். ஆனால், 'கவிதாசரண்' என்னைப் பொறுத்தவரை ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாகத் தெரியவில்லை. நின்று நிதானித்து, நன்கு உள்வாங்கிக் கொள்ள வேண்டிய சாரத்தை உடையது. அதிலும் சில இடங்கள், சில கட்டுரைகள் மீண்டும் மீண்டும் ஆழமான தேடலுடன் கூடிய வாசிப்பில் இறங்க வேண்டியிருக்கிறது.

'நெஞ்சு பொறுக்குதில்லையே' பகுதியில் குமுதத்தின் தரத்தையும் எழில் முதல்வன் அவர்களின் அதீத உணர்ச்சி வசப்படலையும் பதிவு செய்திருக்கிறீர்கள். படிக்கும்போது சங்க இலக்கியத்தை விடவும்... என்பதையும் கரந்தின் சரியான கேள்வியும்... இரட்டை நிலைகளை அம்பலப் படுத்தியுள்ளீர்கள்.

குமுதத்தில் கவிதை வந்தவுடன் அது இலக்கியப் பத்திரிகை ஆகிவிடுமா? இலக்கியத் தரம் வாய்ந்ததாக ஆகுமா?

எழில் முதல்வன் அவர்கள் யோசிக்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு உபரித் தகவல். நண்பர்களுடனான இலக்கியப் பேச்சின் போது குமுதம் பற்றி பேச்சு வந்த போது, ஒரு விஷயத்தை நண்பர் சொன்னார். "யாராவது ரெண்டே கால் ரூபாய் கொடுத்து

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

'மலத்தை' வீட்டுக்கு வாங்கிட்டுப் போவாங்களா?'' என்று சொன்ன போது நமக்கே கொஞ்சம் உமட்டலாக இருந்தாலும், சற்று மிகை யாகத் தெரிந்தாலும் உண்மையில்லாமல் இல்லை. குமுதம் மீதான எத்தனை கடுமையான விமர்சனங்கள்! கம்ப்யூட்டர்க்காரர் யோசிப் பாரா? யோசித்து மாற்ற வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

நானும் நாடகமும் ஜெயந்தன் அருமையாய் எழுதுகிறார். நான் பொதுவாக நாடகம் குறித்த சொல்லாடலை அவர் கூறிய திசையில் இதுவரை விளங்கிக் கொள்ளவில்லை; விளக்கப்பட்டதும் இல்லை. எதிர்பார்ப்புகளோடு, தொடரோடு இணைந்து செல்ல ஆவல் ஏற்படுத்தியது. கவிதாசரணுக்கு வாழ்த்துக்கள்.

=

● **ஸ்ரீமுஷ்ணம் சத்யன், மூரார்பாளையம்**

---

தலையங்கத்துக்கு முன்பு வாசகர் கடிதங்களைப் பிரசுரிப்பது நல்ல உத்தி; வாசகர்களுக்கு கவிதாசரண் தரும் இடத்தை இது பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்.

'குமுதம்' — இலக்கியம் இரண்டையும் ஒருசேர நினைத்துப் பார்ப்பதே இயலாத காரியம்தான். அதனால், குமுதத்திற்கு இலக் கியத் தரம் என்று ஒன்று இருப்பதாக யார் சொன்னாலும் நெஞ்சு பொறுக்காதுதான். மொழி பெயர்ப்பு மூலத்தைவிட உயர்ந்தது என்று உளறுவதும் நெஞ்சு பொறுக்காத விஷயம்தான்.

பிராமண எதிர்ப்புக்கென்றே பத்திரிகைகள் இருக்கின்றன. கவிதாசரண் அந்தப் பட்டியலில் சேர வேண்டாம். சேர்ந்தால் அதன் முதற்பக்கத்தில் காணப்படும் 'மனித நேயப் பார்வை' என்ற சொற்றொடருக்குப் பொருள் குன்றிப் போய்விடும். கவிதா சரண் முழுக்க முழுக்க இலக்கியப் பத்திரிகையாகவே இருக்கட்டும்.

நூற்றாண்டு விழா கொண்டாடியதோடு பாரதியை மறந்து விட்ட தமிழ் நாட்டில் 'காற்று' வீசியது இதமாக இருந்தது; பாராட்டுக்கள்.

=

● **வல்லிக்கண்ணன், சென்னை – 5**

---

புதிதாக சில எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இடம் பெற்றி ருப்பது மகிழ்ச்சி தருகிறது. களந்தை பீர்முகம்மது கதை நன்று. ஒரு நுண்மையான பிரச்னையை சொல்கிறது. 'ஜெயந்தனின்' 'நானும் நாடகமும்' நன்கு அமைந்துள்ளது. விஷயங்களை விரிவா கவும் விளக்கமாகவும் தெளிவுபடுத்துகிறார் நண்பர்.

மா. அரங்கநாதனின் ஆழ்ந்த ஆய்வு நல்ல சிந்தனைகளைக் கூறிவந்தது. இத்துடன் நிறைவு பெறுவதை அறிந்தேன். நமக்கு 'தாய்மொழி - தந்தை மொழி எல்லாம் தமிழ்'தான் என்ற முடிப்பு மிகச் சரியான கருத்து.

படிப்பகம்

www.padippakam.com



வரவர 'கவிதாசரண்' இலக்கிய வம்புகளிலும் அக்கப்போர்களிலும் ஈடுபட்டு உற்சாகம் காண்பது உருப்படியான இலக்கியப் பணி தானா? 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என ஏற்றுக்கொண்ட அண்ணாதுரையின் மனப்பண்பும் நோக்கும் இலக்கிய விஷயத்தில் 'கவிதாசரணு'க்கு ஏன் இருக்கக் கூடாது? சுஜாதாவின் எழுத்துக்கள் எல்லாமே மட்டமானவைதானா? அருமையான சிறுகதைகள் சுஜாதாவால் எழுதப்பட்டிருக்கின்றன.

நாவல்கள் சுலப கவனிப்புக்காகச் செய்யப்பட்ட - செய்யப்படுகிற கிளுகிளுப்பு சமாச்சாரங்கள்தான். சுஜாதாவின் ரசனைத் திறம் குறைந்தது என்றே வைத்துக் கொள்வோம். அவர், தான் நல்லது என்று கருதுகிற கவிதைகளை 'கணையாழி' மூலமும் 'குமுதம்' வாயிலாகவும் பரப்புவதில் என்ன தவறு இருக்கிறது? 'கவிதாசரண்', மற்றும் இலக்கிய இதழ்கள்- சீரிய, சிறந்த, நல்ல நிஜமான கவிதைகளைத் தேர்ந்து வாசகர்களுக்கு இனம் காட்டும் முயற்சியில் ஈடு பட்டதுண்டா? நல்ல சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகம் செய்ய முன்வந்தது உண்டா?

தி. க. சி. யை அவர் ஒன்று சொன்னதுக்கு நீங்கள் அவசியம் இல்லாமலே ஒன்பது சொல்லி சீண்டுகிறீர்கள்; அல்லது காயப்படுத்துகிறீர்கள். இது எதற்காக? (தி. க. சி. யின் போக்கை நான் ஆதரிக்கவில்லை.)

இப்படி எல்லாம் வீணடிக்கப்படுகிற அருமையான வெள்ளைத்தாளை நல்ல நல்ல படைப்புகளைப் பிரசுரிப்பதிலும், உண்மையான விமர்சனக் கட்டுரைகளை வெளியிடுவதிலும் செலவிட்டால் நல்லது. (கி. ரா. எழுத்து பற்றி ராஜ்கவுதமன் விமர்சனம் வரவேற்புக்குரியது.

இது என் நினைப்பு. 'கவிதாசரண்' இப்போது செய்து கொண்டிருப்பதுதான் நற்பணி, தேவையான பணி என்று நீங்கள் எண்ணலாம். அது சரியாகவும் இருக்கலாம். ஆனால் எனக்கு ஏற்புடையது இல்லை.

மனிதர்கள் பலவிதம். நோக்குகள் ரகம் ரகம்.

★ 'கவிதாசரண்' இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட புதிய கவிஞர்களை அறிமுகம் செய்திருக்கிறது. பதினைந்துக்கு மேற்பட்ட புதியவர்களின் கதைகளை வெளியிட்டுள்ளது. இதை சுஜாதா போல ஆரவாரமாய்ச் செய்யவில்லை. சொந்தச் செலவில் ஒரு சிற்றிதழ் இவ்வளவுதான் 'நற்பணி' செய்ய முடிகிறது.

'சரோஜா தேவி' எழுதிய பாலீனக் கதைகளிலும் 'இன்னின்ன நல்ல நூல்கள்' என்று சலித்தெடுக்கிற சுஜாதாவின் சாமர்த்தியம் நமக்கில்லாதது ஒரு குறைதான். என்ன பண்ண?

தி.மு.க., தேர்தலில் வென்றபோது, 'தமிழ்நாட்டில் விஷக்கிருமி பரவி விட்டது' என்று பளிச்செனச் சொன்ன பக்தவத்சலம் போல, சுஜாதாவின் முதல் தொடர்கதை பத்திரிகையில் வரத் தொடங்கியவுடனே, 'தமிழ் இலக்கிய உலகில் விஷக்கிருமியின்

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

ஊடுருவல்' என்று இராம. கண்ணப்பன் சொன்னார். பாவம், அவருக்கென்ன தெரியும். சமூக-அரசியல் தளத்தில் தி.மு.க. சாதிக்கவில்லை என்றோ, சுஜாதா கதைக்கவில்லை என்றோ யாரால் அறுதிட்டுச் சொல்லிவிட முடியும்? தி.மு.க. இந்தத் தமிழினத்தைச் சொந்த அடையாளம் தேடத் திருப்பிவிட்டதும், சுஜாதா அறிவியல் தமிழை அற்புதப் படுத்த முயன்றதும் என் சாமான்ய மூளைக்குச் சாதனையாகத்தான் படுகின்றன.

திருடுகிறவனுக்குத்தான் 'இது மாற்றான் தோட்டத்து மல்லிகை இது நம் தோட்டத்து மல்லிகை' என்னும் பாகுபாடெல்லாம். முகர்கிறவனுக்கேது? மூச்சில் வந்து மோதும் காற்றுக்கென்ன வேலி? நமக்கு மல்லிகை மணம் ரொம்பப் பிடிக்கும். நம்மை, நம் அடையாளத்தை, நம் அடிமாட்டுத் தனத்தையெல்லம் மறக்கும் அளவுக்குப் பிடிக்கும்.

சுஜாதா பற்றிய சகோதரரின் கீர்த்தி வாசகங்களுக்கு சுஜாதா தான் நன்றி சொல்ல வேண்டும். ஆனால் பாவம், 'டி. வி. உலகம்' என்னும் சின்ன மீனை 'குமுதம்' என்னும் சுறா விழுங்குவதை, அடிமைகள் விளையாட்டை கிரேக்கப் பிரபுக்கள் ரசிக்கிற மாதிரி சுஜாதா இப்போது ரசித்துக்கொண்டிருப்பார். இலக்கியப் புண்ணாக்கு வியாபாரமெல்லாம் அதற்கப்பால்தான். களம் அமைத்துக் கொடுத்தால் இவர்களின் 'வூடு கட்டி ஆடும்' ராஜக்கிரீடைகளுக்கு எல்லையிருக்காது என்பது— ராஜராஜ சோழன், கோயிலுக்கென்று அழகுக் குமருகளைப் பொட்டு கட்டி விட்டு, எள்ளுந் தண்ணீர் இறைத்து, நிவந்தம் பண்ணி வைத்தானே, அப்போதிருந்தே பிரசித்தம்.

சகோதரர் வ. க. அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே 13 பெயர்களில் பதின்மூன்று விதமாக எழுதிப் புகழ் பெற்றவர்.

'வல்லிக்கண்ணனின் போராட்டங்கள்' நூல் தரும் வரிகள் இவை:

> ''வெவ்வேறு சமயங்களில் பலவிதமான உபதேசங்களும் போதனைகளும் பல பேரிடமிருந்து எனக்குக் கிடைக்கலாயின. —எதுக்காக இவ்வளவு அதிகம் எழுதுகிறீர்கள்? ஏன் பலரையும் தாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நையாண்டி பண்ணுவது நல்லதல்ல. எழுத்தில் ரெஸ்ட்ரெய்ன்ட் (தன்னடக்கம், கட்டுப்பாடு) வேண்டும்.
>
> ''இவ்விதம் சட்டாம்பிள்ளைத்தனம் பண்ணுகிறவர்கள் அவ்வப்போது எதிர்ப்பட்டவாறு இருந்தார்கள். நான் என் போக்கில் எழுதிக்கொண்டே இருந்தேன்.
>
> ''உலகம் பலவிதம்! மனிதர்கள் ரகம்ரகம்!''

எவையெல்லாம் எம் அடையாளங்களை உறுதிப்படுத்துமோ அவற்றில் மட்டுமே வெள்ளைத் தாள் 'வீணடிக்கப்' படுகிறது. விவரமற்ற விரயங்களுக்கு நானே பொறுப்பு.

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

● **வை. வைத்திலிங்கம், பிச்சினிக்காடு**

இன்னாரென்று இல்லாமல் எல்லா முகங்களும் கிழிக்கப்படுகின்றன. எல்லாவற்றைப் பற்றியும் சந்தேகப்படுதல், எல்லாவற்றையும் மறுபரிசீலனைக்குட்படுத்தல் என்பதில் காட்டப்படும் தீவிரத்தனம் சிலநேரம் உண்மை முகத்தின் மீதும் பிறாண்டலாய், இரத்வடியச் செய்யுமோ?

'என்பதாய் இருக்கிறது' பற்றி இதன் தொடர்பாகவே என்று குறிப்பிட்டு ஞானக் கூத்தன் - சுஜாதா 'படுசுகம்' நினைத்து தொடர்பு படுத்தி குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை. அது ஒரு மோசமான பார்வை. ஞானதிரவியத்திற்கும் இந்த இருவருக்கும், இந்தக் குழுவுக்கும் எவ்வித பரிச்சயமும் அந்த விழா நடக்கும் வரை ஏற்பட்டதில்லை.

வேலையும் கிடைக்காமல், பெற்றோரும் இல்லாமல், பற்றாக் குறை வருமானத்தில், கவிதைக்காய் நசிந்து போனவனின் நடைமுறை சிக்கலைத் தாங்கள் உணர வாய்ப்பில்லை.

ஞானதிரவியம் சுஜாதா என்ற தனிமனிதனின் சுவைக்காகப் பாடும் (சுஜாதாவின்) அவைப் புலவன் அல்ல.

பிரபல்யம் ஆகிவிடவேண்டும் என்பதற்காக சமூக பிரக்ஞையில்லாமல் எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய பிரபல்ய சபலங்களுக்கு இடையில், இவன் நீர்த்துப் போகாமல் சமூக பிரக்ஞையுள்ள வீரியத்துடன் கனன்று இயங்குபவன். ஜீவகவிஞனாக நிமிர்ந்து, சத்தியப் பிடிப்புகளோடு வாழ முற்பட்டதால், இன்று பொருள் குறைவால் கஷ்ட ஜீவனத்தில் இருப்பவன்.

அவன் நடப்பில் நடந்ததை, இழந்ததை, இணைந்ததை, வாழும் இடத்தை, களத்தை, தளத்தை, சூழ்ந்து கிடக்கும் கேலியை, எள்ளலை, பண வரவு இல்லாத காகிதச் செலவுகளாக, இவன் கவிதைப் பணியை, இன்னமும் இடித்துக் கொண்டிருக்கும் சுற்றத்தை எழுதுகிறான். அவன் மூச்சுத் திணறல்களை முன்னுரையில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவை உண்மை அல்லவா!

=

● தனிமனித குறைபாடுகளையெல்லாம் (சுந்தரராமசாமி) பெரிது படுத்தி, உங்கள் காழ்ப்புணர்வை வெளிப்படுத்திக் கொண்டீர்கள். சமீப கால சிற்றிதழ்களில் இது மாதிரியான தாக்குதல்களே எங்கும் நான் பார்க்கிறேன். இப்போதெல்லாம் சிற்றிதழ் தொடங்குவதே யாரையாவது பழி வாங்கத்தான் என்றாகிவிட்டது.

ஒரு விஷயத்தின் மேல் எப்படி வேண்டுமானாலும் குற்றம் சுமத்த முடியும். அந்த சாதுர்யம் இயல்பாகவே உங்களுக்கு கைகூடி வருகிறது. அந்த ரீதியில்தான் சுந்தரராமசாமி பற்றியும் எழுதியிருக்கின்றீர்.

**சிவா, பூசப்பாடி**

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

● 'உண்மையான வைதீகமும், உண்மையான சீர்திருத்தமும் ஒன்று என்பது பாரதியின் கொள்கை. காந்தியின் கொள்கையும் அஃதே' - பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் இவை. (காண்க: புதுவைக் கல்லறையில் புதுமலர்கள் —முருகுசுந்தரம்) இந்நோக்கில் தி. க. சி. யுடையதும் உங்களது கருத்தும் ஒரே அலைவரிசையில் ஒலிக்கின்றதே! ஏன் தேவையற்ற நிழல் யுத்தம்?

தி. க. சி. செய்யும் இலக்கியத் தொண்டினையும் தங்கள் இனப்பற்றை மலர்விக்கும் தமிழ் ஆர்வத்தோடு சேர்த்து பன்னீர் தெளித்து வரவேற்போம்.

கி. ரா. செய்வது அநியாயம் என்று வண்ணநிலவன் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டால், ராஜ்கௌதமனின் கி. ரா. தெளிவுரை கால விரயம். அவ்வளவே.

ஜெயந்தன் தொடர் Iodinisedsalt ஆக, பளிச் பளிச் வெள்ளை! உண்மையான எழுத்துப் படைப்புகள். 'அப்படியா, பலே, பலே!' என்று சொல்ல வைக்கிறது. முகமதுவின் கதைக்கு கை குலுக்கல்!

ஞா. கூத்தன் கவிதை உரைக்கு முதல் ஆசனம் சுஜாதாவுக்கு. ஏனெனில் சுஜாதா Crowd puller என்பதே. இது 100க்கு 101 விழுக்காடு உண்மை. ஏனெனில், Computerised வசிட்டர் வாயால், Major (பிரும்ம) கவியாகிவிட வேண்டும் என்னும் சில இளைஞர்களின் அணுக்கத் தொண்டர் ஆலோசகர் - சுஜாதா.

ஆயினும், அவரின் பல்துறைக் கட்டுரைகள் இருட்டு இளைஞர்களுக்கு உதவும் 'Eveready Torch.'

=

● ஜெயந்தன் எழுதுகிறார்:

சென்ற மாத (9—94) கவிதாசரண், பக்கம் 10, பத்தி 2இல் எனது பெயர் சம்பந்தமாகியிருக்கிறது.

Casualஆன பேச்சுகள் ஒன்றின் போது, பொதுவாகவே மனிதர்களுக்கு பணம், புகழ், அந்தஸ்து போன்றவற்றின் மேலுள்ள Complex பூர்வமான பற்றுதலைக் குறித்துச் சொல்லும் போது, தங்களை கம்யூனிஸ்ட்டுகள் என்று வரித்துக் கொண்ட தோழர்கள் கூட, இலக்கிய கூட்டங்களுக்கு வரும் டாக்டர், வசதிபடைத்தவர், செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள் முதலானவர்க்குத் தங்களை அறியாமலேயே ஒரு தனிமரியாதை அளிக்க முற்பட்டுவிடுவதைச் சொல்லியிருந்தேன். அப்போது நீங்களும் கூட, இலக்கியக் கூட்டங்களில் மட்டுமல்ல, அரசியல் கூட்டங்களிலும், அரசியல் தலைவர்கள் சிலர் போக்கும்கூட அவ்விதமாகவே இருப்பதாகத் தகவல் உண்டு என்று சொன்னீர்கள்.

ஆனால் மேற்படி பத்தியில் எல்லாவற்றையும் என் தலையில் போட்டிருக்கிறீர்கள். அரசியல் தலைவர்கள் குறித்த அந்தச் செய்திகளுக்கு நான் பொறுப்பல்ல. நான் எந்த கம்யூனிஸ்ட் கட்சியின்

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

எந்த அரசியல் மேடையிலும் இருந்தவன் அல்ல. அவைகளின் இலக்கிய அணிகளில் மட்டுமே இருந்தவன். தயவு செய்து இதைப் பிரசுரம் செய்யுங்கள்.

★ இட நெருக்கடியில் செய்திகள் சுருக்கப்பட்டபோது, இணைப்பு வாக்கியமும் எடுக்கப்பட்டு விட்டதில் இவ்வாறு நேர்ந்து விட்டது. வருந்துகிறோம். ஆ—ர்.

=

● கவிதாசரண், தான் திட்டமிட்ட பணியின் நுழைவாசலில் நுழைந்து, உள்ளே சென்றுவிட்டது என எண்ணுகிறேன். ஏனெனில், அதன் 'வீச்சுக்கு' இலக்காகி, பேனா அசைக்கும் பலரையும் என்னால் காணமுடிகிறது. இது ஒரு தரமான தன்மையே. இது உங்களின் துணிச்சலினாலும், இடைவிடாத பயணிப்பாலும், இலக்கைவிட்டு நழுவி ஓடாத நல்ல தன்மையினாலும் சாத்தியமாகிறது.

பொள்ளாச்சி நசன், பொள்ளாச்சி-6

=

## இரா. நடராசன்: 'இது தலித்துகளின் காலம்'

இப்போதெல்லாம் 'கவிதாசரணில்' அனல் கொதிக்கிறது. எப்போதும் இப்படித்தான் என்றாலும், இப்போது சூடு பறக்கிறது, தோழர். "வையம் ஆண்ட வண்டமிழ் மரபே — உன் கையிருப்பை காட்ட எழுந்திரு; மக்களை ஒன்று சேர்! வாழ்வை உயர்த்துக! நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு," என்ற புரட்சிக் கவிஞனின் குரலிலே தெரியுமே- உடலிலுள்ள நாளங்களினுள்ளே சென்று ரத்தத்தையும் அதன் அடையாளத்தையும் குடைகின்ற உணர்ச்சி! அதைக் கவிதாசரணில் இப்போது உணரமுடிகிறது. பெரியாரியப் பட்டறையில் கூர் தீட்டிய மானுட விடுதலைக் கணைகள் யாரை நோக்கிப் பாய வேண்டுமோ அவர்களை நோக்கி, சற்றும் அச்சமின்றி, பாசாங்கு இன்றி எய்யப்படுகின்றன. அவ்வகையில் எத்தனையோ நாட்களாக, தமிழ்- தமிழன் தேடிய களமாய், போர் முனையாய்ப் புறப்படும் நமது இதழின் பக்கங்களை புரட்டும் என இரவுகள் கனக்கின்றன.

இம்முறை பெரியவர் தி. க. சி. அவர்களுக்கு நீங்கள் எழுதியுள்ள உணர்ச்சி பூர்வமான பதிலில் என் தலையணை நனைய நேர்ந்தது தோழர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு, உரிமைகள் இவையெனும் உணர்வுமின்றி, "நம்ப பாண்ட பொளப்புக்கு பாவம் அய்யரு என்ன பண்ணுவாரு," என்று வாய்க்கு வாய் அறியாமை உதிர்த்து, "பன்னி வளக்குறத பத்தியெல்லா கதை பண்ணப்படாதப்பா..." என்று தங்கள் வாழ்வை இலக்கியமாக்குவதைப் பெரிய குற்றமாக எண்ணியிருந்த தலித்துகள், இட ஒதுக்கீட்டு முறையில் கல்வி கற்கத் தொடங்கி, ஒரு அரை

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

நூற்றாண்டு கழித்துதான் எழுதவே வந்திருக்கிறார்கள். அவர்களை, "பாவம் அவர்களும் எழுதிட்டுப் போவட்டும்ப்பா..." என்கிற பாணியில் விளிக்கும் இந்த அசால்ட் நமக்கு ஏற்படுத்தும் எரிச்சலை வெளிப்படுத்தி, "இதோ பார், உனது உண்மையான முகம்" என்று காட்டியிருக்கும் உங்கள் எழுத்து ஒருபுறம். "சுடுகாட்டுக்கு போறதுக்குள்ள ஒரு அர கிலோ ஆட்டுக்கறி சாப்பிடனும்னு ஆசை படுற" நாய்ப் பொழுப்பைப் படம் பிடித்துக் காட்டிய கரிகாலனின் 'கவுச்சி ஆசை' மறுபுறம். எல்லாமாகச் சேர்ந்து இந்த நடுசாமத்தில் என்னைத் தனியே கிடந்து எழுத்தில் புலம்ப வைத்திருக்கின்றன.

"ஏழை பிராமணன் 'தலித்' இல்லையா..." என்றும், "சுதந்திரப் போராட்டத்தில் தலித்" என்றும் யோசிக்காமல் பேசியவர்கள் பற்றி யோசித்து, சிலது என் மனதிற்குப் பட்டதை எழுத விரும்புகிறேன்.

இந்த நாட்டில், அதிலும் குறிப்பாக தமிழ்ச் சூழலில் பல ஆண்டுகளாக இருந்து வருகிற ஒரு பெரிய கருத்து மோதல் (என்று சொல்லலாமா?) மார்க்சிய வாதிகளுக்கும் பெரியார் வாதிகளுக்கும் இடையிலானது. 'வர்க்கப் போராட்டமா? சாதீய விடுதலைப் போராட்டமா? யார் எதிரி? பார்ப்பனீயமா? முதலாளியமா?' என்றெல்லாம் குழப்பமான சர்ச்சைகள். இந்த சர்ச்சைகளுக்குக் காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள்— நான் ஏன் மறைமுகமாகச் சொல்ல வேண்டும். நேரடியாகவே சொல்கிறேன்.— ஈ. எம். எஸ். ஸூம் அவரது தொண்டரடிப்பொடிகளாகிய பார்ப்பன மார்க்சிஸ்டுகளும். இந்த நாட்டில் வர்க்கம், மற்றும் சாதீய போராட்டம் இரண்டும் நடந்து விடாமல் பார்த்துக் கொள்வதில் வெற்றியடைந்ததுதான் மிச்சம். மார்க்சியமும் பெரியாரியமும் பற்றி இரண்டறக் கலந்து யோசித்து, சமூக விழிப்புணர்வை உருவாக்குவதற்கு முயலும் சிந்தனையாளர்களாகிய அ. மார்க்ஸ் போன்றவர்கள் கூறும் கருத்துகளை பெரியாரியவாதிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த நாட்டில் மார்க்சிய சிந்தனையை குத்தகைக்கு எடுத்துள்ளதாக நினைப்பவர்கள் ஏற்று கொள்ள மறுக்கிறார்கள்.

காரல் மார்க்சு இந்திய வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்துவிட்டு, பின் அது குறித்து நூலெதுவும் எழுதுவதற்குள் இறந்து போய்விட்டார். ஆனால், இந்தியா குறித்து இரு கட்டுரைகளுண்டு. பிரிட்டிஷாரின் ஆட்சி இந்தியாவில் ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள் குறித்தவை அவை. அடிக்கடி கருத்து ரீதியில் என்னோடு மோதுகிற கம்யூனிஸ்ட் தோழர்கள், அவ்வளவு தெரிந்து வைத்திருந்த மார்க்ஸ், இந்து மதம் - சாதி பற்றித் தெரிந்து வைக்காமலா இருந்திருப்பார்? இந்தியாவுக்கென்று தனியாக பாட்டாளியெல்லாம் இல்லப்பா," என்று கூறி, அவ்விதத்தில் நிலைகொள்வது வழக்கம். மார்க்ஸ் இந்து மதம் பற்றி மட்டுமல்ல, அதன் காட்டுமிராண்டித்தனம் பற்றியும் எழுதாமலில்லை. இந்துஸ்தானத்தின் மதம் மனித

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

அறிவுக்கு எத்தனையோ படி கீழேயுள்ள குரங்கைக் கடவுளாக்கிய மதம் எனவும், சக மனிதர்களுக்குள் வேற்றுமைகளைப் புகுத்தி, பெண்களை உயிரோடு பலியிடுவதைப் புனிதச் சடங்காக்கிய மதம் எனவும் குறிப்பிடுகிறார். நாகரிகக் கூறுகளின் உச்சங்களை அடைந்துள்ள பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியக் குடுமி நாகரீகத்தின் குரல்வலையை நெரிக்கும் என்று கருதினார்.

எந்த ஒரு தேசத்திலும் ஆக்கிரமிப்பாளனைப் பொது எதிரியாக்கிய பின்னர், அவனை எதிர்த்து நடத்தப்படுகிற சுதந்திரப் போராட்டம் பிற வேற்றுமைகளைக் களைந்து எறிந்துவிடும். ஒரு வேளை இதை வைத்தும் மார்க்ஸ் மதக் காட்டுமிராண்டித்தனமும் 'மனிதனுக்கு மனிதன் வேற்றுமை' என்ற விஷயமும் தானாக உதிரும் என்று கருதியிருக்கலாம். காந்தியம் எனும் அகிம்சா யுக்தி பற்றி அதற்கு ஒரு நூற்றாண்டு முன் வாழ்ந்த மார்க்சு அறிய வாய்ப்பில்லை.

"இந்த நாட்டின் இலக்கியம்- சாதி காப்பாற்றும் இலக்கியம், உனது கடவுள்- சாதி காப்பாற்றும் கடவுள், உனது மதம்- சாதி காப்பாற்றும் மதம்," என்று தந்தை பெரியார் கூறுயதுபோல இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டமும் சாதி காப்பாற்றும் சுதந்திரப் போராட்டம் என்பது என் கருத்து. குடுமியைக் கிராப்பாகவும், பஞ்சகச்சத்தை கால் சராயாகவும் மாற்ற முடிந்த வெள்ளையர்களால் பூணூலையும் அதன் அதிகாரத்தையும் பறிக்க முடியாமல் போனதின் காரணத்தை ஆராய்ந்து பலரும் கூறியுள்ளனர். அகிம்சா மார்க்சியம் இவ்விஷயத்தை யோசித்ததேயில்லை. காந்தியாரின் போராட்டம் என்பது வெள்ளையர்களை எதிர்த்துப் போராடி அவர்களை வெளியேற்றுவது என்கிற லட்சியத்தை மட்டுமே கொண்டதாக இருந்ததா என்பதில் எனக்கு சந்தேகம். அது வெள்ளையர்களை விரட்டுவதைக் காட்டிலும், இந்து மதத்தைக் காப்பாற்றுவதை—அதன் மூலம் சாதியைக் காப்பாற்றுவதை — பெரும் பணியாகக் கொண்டது என்கிறேன் நான்.

காந்தியார் அகிம்சைப் போராட்டத்தைக் கையிலெடுத்தது என்பதே சனாதனத்தைக் காப்பாற்றும் யுக்திதான். 1920 இல் கல்கத்தா காங்கிரசு மாநாட்டில் காந்தியார் முதல் முதலில் (அதற்கு முன்பே பேசியிருப்பினும் பிடிவாதமாக) அகிம்சை முறையில் மட்டுமே போரிடுவது என அறிவிக்கும் வரலாற்றுப் பின்னணி என்ன? சாந்த ஸ்வரூப மூர்த்தியாக அரிதாரம் பூசிக்கொண்டதின் ரகசியம் என்ன? 1920இல் கிளாபத் இயக்கம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்த போது, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைமை முஸ்லிம்களுக்குப் போனது. அலி சகோதரர்கள் அகில இந்திய கதாநாயகர்களானார்கள். காந்தியார் ஆரம்பத்தில் இயக்கத்தை ஆதரித்துவிட்டு, ஆயுதப் போராட்டம் என்றதும் பல்டி அடித்தார். அகிம்சைப் போராட்டத்தை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டால்தான் கவர்னரிடம் பேசி, அலி சகோதரர்தம் விடுதலைக்கு ஏற்பாடு

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்:

செய்வதாகவும் நிபந்தனை போட்டார். இதெல்லாம் ஏன்? முஸ் லிம்களிடமிருந்து சுதந்திரப் போராட்டத்தின் தலைமையை பார்ப் பனியம் கைப்பற்றிய கதையல்லவா இது?

ஆயுதப் போராட்டத்தை காந்தியார் ஏன் நிராகரிக்க வேண் டும்? ஆயுத மேந்தி போராடி, வெள்ளையரை எதிர்த்து, நாடு நின் றிருக்குமானால், போராட்டத் தலைமை பார்ப்பனர்களிடமிருந்து பறிபோயிருக்கும். உடல் ரீதியில் பார்ப்பனர்களை விட பலம் வாய்ந்த சூத்திரர்களும் பஞ்சமர்களும் இந்திய சுதந்திரப் போராட் டத்திற்குத் தலைமை வகித்திருப்பார்கள். தவிர தங்களது உடல் பார்ப்பனர்களுக்கு முக்கியம். தங்களது சொந்த ரத்தத்தைச் சிந் தவோ அவர்கள் ஒருபோதும் சம்மதியார். இன்னொரு விஷயம்: ஆயுத அரசியலில் வெள்ளையர் போன பிறகு, சூத்திரர்களும் பஞ்சமர்களும் ஆயுதத்தை பார்ப்பனர்களை நோக்கி திருப்ப மாட் டார்கள் என்பது என்ன நிச்சயம்? சூத்திரர்களையும் தலித்களை யும் முன்னிருத்தி, பின்னால் செல்ல வேண்டியிருக்குமே என்பதா லும், ஆயுதம் தன் பக்கமே திருப்பப்படும் — அதன் தொழில் நுட் பத்தை சூத்திரன் அறிவது பாதுகாப்பு இல்லை அல்லவா? — என்ப தாலும் 'அகிம்சையை கையில் எடு. அவன் வாயை மூடிக்கொண்டு நம் பின்னே வருவான்,' என்று தீர்மானித்தார். அதனால்தான் சுதந்திரப் போராட்டம் எப்போதெல்லாம் ஆயுதப் போராட்டமாக மாறியதோ, அப்போதெல்லாம் வெள்ளையர்களை எதிர்த்ததை விட அதிக உக்கிரத்தோடு அதை எதிர்த்தார் காந்தியார். சூத்திரர்களும் தலித்துகளும் (சீக்கியமாரும் கூட) தங்களது உடல் பலத்தைக் காட்டிய போதெல்லாம் போராட்ட குணம் காயடிக்கப்பட்டதை நாடறியும்.

சாதியைக் காப்பாற்ற வேண்டுமென நினைத்திருந்தால் காந் தியார் தீண்டாமை பற்றி ஏன் பேச வேண்டும்? அடுத்த பிறவி யில் அரிசனனாகப் பிறக்க விருப்பம் என்றெல்லாம் கூறியதேன்? என்று விவாதிக்க, சிலரென்ன- பலரும் தயாராக இருப்பார்கள். ஆனால் எந்தச் சூழலில் அப்படி அவர் பேச நேர்ந்தது? 1930 களுக்கு முன் காந்தியார் தீண்டாமை பேசியதற்கும் பிறகு பேசி யதற்கும் எக்கச்சக்கமான வேறுபாடுகள் உள்ளன. தீண்டாமை ஒழிப்பு சங்கம் அரிசன சேவா சமிதியாக மாற்றப்பட்டதின் பின்ன ணி என்ன? 1930இல் மெக்டொனால்ட் என்பாரின் தாழ்த்தப் பட்டோர் சிபாரிசு பற்றி நம்மில் எத்தனை பேர் கேள்விப்பட்டி ருக்கிறோம்? டாக்டர் அம்பேத்கரும் ரெட்டைமலை சீனிவாசனா ரும் வட்டமேசை மாநாட்டில் 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்துக்க ளில்லை' என்றும் 'அவர்களுக்குத் தொகுதிகள் ஒதுக்க Communal Award அறிமுகப்படுத்தப்பட வேண்டும்' எனவும் கேட்டபோது அது அறிமுகப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து காந்தியார் மேற்கொண்ட உண்ணாவிரதமிருக்கிறதே, ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து அவரிருந்த உண்ணா விரதத்தைவிட நீளமான- உக்கிர

படிப்பகம்

www.padippakam.com



# கடிதங்கள்:

மான அதன்மூலம் பூனா ஒப்பந்தத்திற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அறிவு ஜீவிகளாகிய அம்பேத்கரையும் பிறரையும் அவர் பணிய வைத்தது எத்துணைப் பெரிய துரோக வரலாறு! கஸ்தூரி பாய் தாலியைக் காட்டித் தனக்கு மாங்கல்யப் பிச்சை வழங்குமாறு அம்பேத்கரை வேண்டுகிறார், உண்ணாவிரதத்தால் உயிர் துறக்கத் தயாராயிருந்த தன் கணவரைக் காப்பாற்ற. அம்பேத்கர் அப்போது கொடுத்த உயிர்ப் பிச்சை காந்தியாருக்குக் கொடுக்கப்பட்டதா? இந்து மத சனாதன தருமத்திற்குக் கொடுக்கப்பட்டதா?

தாழ்த்தப்பட்டோரை இந்துக்களாக்குவதன் மூலம் சங்கராச்சாரியும் மத்வாச்சாரியும் செய்ததை விடவும் அதிகமானதொரு நன்மையை இந்து மதத்திற்கு காந்தியார் செய்துவிடவில்லையா?

மெக்டொனால்ட் சலுகை என்பதன் மூலம், ஆங்கில அரசு இந்திய நாட்டின் தாழ்த்தப்பட்டோர் - தீட்டுகளுக்கு ஆட்பட்டோர் பட்டியலை வெளியிட்டதின் மூலம் மக்கள் தொகையில் அவர்களது எண்ணிக்கை தெரிய வருகிறது. 'யார் விழித்தெழுந்தால் இந்து சனாதனம் பொடிப்பொடியாகி புதைந்து போகுமோ, அவன் விழிக்கிறான். அவனைத் தொடு. உன் கோவிலுக்குள் (உண்டியல்வரை) அழைத்துப் போ. முதலில் அவனை இந்துவாக்கு. ராமனின் பிள்ளைகள் என்று புதிய பெயரிடு. எல்லாரும் ராம ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டால் பார்ப்பனியத்திற்கு பாதுகாப்பு அல்லவா?...' இதெல்லாம் தந்தை பெரியாரும் அம்பேத்கரும் புட்டுப்புட்டு வைத்ததுதான்.

இப்போது மீண்டும் மார்க்சுக்கு வருகிறேன். ஆங்கிலேயரை எதிர்த்து நடக்கும் சுதந்திரப் போராட்டமும் வெள்ளையர் அறிமுகம் செய்யும் தொழிற் புரட்சியும், புகைவண்டி, தொலைபேசி முதலான இயந்திரமயமாக்கலும், இந்தியக் காட்டுமிராண்டித்தனமான கலாச்சாரத்தை ஒழித்துவிடும் என்று மார்க்சு கருதியது நடக்கவில்லை. காரணம், சுதந்திரப்போராட்டமும் இங்கே சாதியைக் காப்பாற்றும் நோக்கத்தை — மத வெறியைத் தன் தலையாய இயல்பாகக் கொண்டிருந்தது.

'பிராமண ஏழை தலித்தா? தலித்தில் லட்சாதிபதியில்லையா?' எனும் வர்க்க அரசியல் பேசப்படும் தளம் இதுவல்ல. பிற நாடுகளில் ஏழை என்று ஒரு வர்க்கம் உள்ளது. இங்கோ தீண்டத் தகுந்த ஏழை — தீண்டத்தகாத ஏழை என்று இரண்டுவகை. தீண்டத் தகுந்த லட்சாதிபதி — தீண்டத்தகாத லட்சாதிபதி என்று இரண்டுவகை. தீண்டத் தகுந்த ஏழை தீண்டத்தகாத ஏழையை விட பல நூறு மடங்கு பலத்தோடு இருக்கிறான். ஏன்? ஒரு பார்வையில் தீண்டத் தகுந்த ஏழை தீண்டத்தகாத லட்சாதிபதியை விடவும் பலமானவன் இல்லையா என்பதுதான் கேள்வி.

தலித் இலக்கியமும் தலித் அரசியலும் வெளிப்படத் தொடங்கியுள்ள இன்று பிராமண தலித் என்றெல்லாம் சப்பைக் கட்டுவது

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்

எவ்விதத்திலும் எடுபடாது.

மத்திய வர்க்கத்தினனை வைத்தும், நகரமயமாதலை வைத்தும் நுகர்வு அமைப்பை வைத்தும் தீட்டு அழிந்து ஒழிந்துவிட்டது என்று வாதாடுவோர் இருக்கிறார்கள். உடல் ரீதியிலான தீட்டு ஓர ளவு ஒழிந்திருக்கலாம். (கரிகாலன்: உங்க ஊர்ல அலுமினிய குவள மாறிடிச்சா... எங்க ஊர்ல இன்னும் மாறல.) ஆனால் இன்று பொது மேடையிலும் நாலு நண்பர்கள் கூடுமிடத்திலும் கருத்தியல் ரீதியிலான தீட்டாகத் தலித்தியம் இருக்கிறது. தந்தை பெரியாரின் பெயரைச் சொன்னால் ஒடுக்கப்படுகிறோம் அண்ணல் அம்பேத்கர் என்றால் எள்ளி நகையாடப் படுகிறோம். தலித் என் றால் தள்ளிப் போகிறார்கள். இதெல்லாம் என்ன? இந்த ஜனநா யக நாட்டின் ஜனாதிபதி 'இட ஒதுக்கீட்டின் மூலம் எங்கள் வேலை கள் பறிக்கப்பட்டிருக்கலாம். எங்கள் மூளையை நீங்கள் பறிக் கவே முடியாது'' என்று தனது ஆதிக்க சாதியின் தன்மையை வெளிப்படுத்துகிறார். இது மார்க்சியர்களுக்குத் தெரியாத விஷயமா?

ஒரு நூற்றாண்டு காலக் கல்வி. அரை நூற்றாண்டு காலமாக அலுவலகம். அதற்குள் ஒரு தலித் சந்திக்கும் சவால்கள்தான் எத் தனை! ஒரு முப்பது ஆண்டுகள் பார்ப்பன சாதிப் பையன்கள் அப்படி என்ன இழந்துவிட்டார்கள்? ஒன்றிரண்டு அரசு வேலை. நூற்றிலொரு மேல் படிப்பு. (அதுகூட மொத்தம் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களோடு ஒப்பிட்டால் படு சொற்பம்.) Sales Rep. வேலையும், சுய வேலை வாய்ப்பும், தனியார் துறையி லும் எத்தனை தலித்துகள் அல்லது பிற்பட்டவன் வேலை செய்ய முடிகிறது? அதற்குள் எப்படி கூச்சல் போடுகிறார்கள். மூலை முடுக்கெல்லாம், 'ச்சுச்சு' என்று பரிதாபப்பட வைக்கிறார்கள். இது மார்க்சிய நண்பர்கள் அறியாததா!

ஒரு பத்து கதைகள் முழுசாக தலித்துகள் எழுதி அச்சேற் றுவதற்குள், 'அய்யய்யோ... தலித் இலக்கியத்தை மற்றவர்கள் எழு தினால் என்ன தப்பு' என்று கூப்பாடு போடுகிறார்கள். கதைப் பதிலும், பிரதி எழுத்துகளை உருவாக்குவதிலும் கைதேர்ந்த மேல் சாதி எழுத்தாளர்கள் ''பாரு உன் இலக்கியத்த. உன்னைவிட நல்லா எழுதியிருக்கேன்,'' என்று வெவ்வெவ்வே காட்டி, அதன் இயல்பை மழுங்கடித்து, புகழை வேட்டையாடத் துடிக்கிறார்கள். ஏனென்றால் தமிழ் தலித் இலக்கியம்- முன்னிருந்து வரும் அத் தனை இலக்கியப் போக்குகளின் முகத்திலும் துப்பி, அவற்றைக் கிழித்து, பாசாங்குகளைத் தோலுரித்துக் காட்டும். தனது ஜான கிராமன்களையும் கல்கிகளையும் காப்பாற்ற பார்ப்பனியம் எது வும் செய்யலாம். அதையும் மீறி தலித்தியம் எழும்... ஏனென்றால் இது பறையனின் தலித்துகளின் காலம்!

இரா. நடராசன், கடலூர்

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்

மலர் மூன்று அக்டோபர் - நவம்பர், 1994 இதழ் 10 & 11

# மெல்ல உடையும் மௌனம்

வாசக நண்பர்களுக்கு என் வணக்கம்.

சென்ற இதழ், நிறைய பேரைச் சற்று ஆழமாகவே பாதித்திருக்கிறது; உணர்வு சார்ந்தும், அறிவு சார்ந்துமான பாதிப்பு அது. நமக்கு வந்துள்ள கடிதங்கள் (74) முழுதும் அச்சிட்டால் 150 பக்கங்களுக்கு மேல் வரலாம். அவை நமக்கு நிறைய சொல்லித் தந்தன; சிந்திக்க வைத்தன.

பாராட்டுகளைவிட, குறை காணும் வரிகளையே அதிகம் வெளியிட முனைந்தோம். அந்த நண்பர்கள் அதிகம் யோசித்தவர்கள்; நம்மை யோசிக்க வைத்தவர்கள். பாராட்டியவர்களுக்கென் நன்றி.

இக்கடிதங்கள் யாவும் பொதுவில் ஓர் உண்மையை மெய்ப்பிக்கின்றன. மனிதர்கள், அவரவர் அளவில் ஒரு 'முழு.' இதற்கான 'வனை'தலில் அவரவர்தம் சுற்றம், சொந்தம், சூழல், கல்வி, கலாச்சாரம், வழுவழியாய்ப் புகட்டப்படும் நலம் பேணும் குணம், யாவும் தாக்கம் பெறுகின்றன. ஆகவே இவர்கள் எந்த வெளிப்பாட்டிலும் தங்கள் படிமத்தையே தேடிக்காண முயல்கிறார்கள்: கண்டுவிட்டால் சொந்தம் கொண்டு பாராட்டுகிறார்கள். எதிர் மறையாய் இருந்துவிட்டால் முரண்பேசி மகிழ்கிறார்கள். இவ்விரு நிலைகளுக்கும் அப்பாற்பட்டவற்றைத் தவிர்க்கிறார்கள்; அல்லது தர்க்கப்படுத்தாமல் விடுகிறார்கள். உண்மையில் இந்தக் கொசுறுகளுக்கான சிறு கவனம்தான் அவர்களின் மேல் வளர்ச்சிக்கான ரசாயணம்.

'நமக்கு அறிவு இருக்கிறது' என்று சுரணைப்படுகிறவர்கள் மட்டுமே, தங்களுக்குப் பிடிக்காதவற்றிலும் நியாயம் தேடுகிறார்கள்; பிடித்தவற்றிலும் முரண் படுகிறார்கள். தங்கள் ஒவ்வா

படிப்பகம்

www.padippakam.com



மையை விமர்சனத்திற்கு அப்பால் நிறுத்துகிறார்கள். ஆனால், இவர்கள் கொஞ்சம் பேர். இலக்கியவாதிகளிடையேகூட வெகு அபூர்வமாய்த்தான் காணக் கிடைக்கிறார்கள்.

இந்தப் பொதுப் பண்பு காரணமாகத்தான் நாம் எழுத்தில் வெளிப்படும்போது, எதை முதன்மைப் படுத்த முயலுகிறோமோ, அது நுகர்வோருக்கு இரண்டாம் பட்சமாகிவிடுகிறது. நாம் பொருட்படுத்தாதது, அவர்களிடம் முதன்மைப்பட்டு விடுகிறது. நம் கவனத்திலேயே உறைக்காதது, சில சமயம் மிகப் பெரிய பாராட்டையோ பிரளயத்தையோ தோற்றுவித்து விடுகிறது.

ஒன்றுமட்டும் உண்மை: கூட்டமாய் இருக்கும்போது மனிதர்கள் வெறும் சராசரிகளாய்க் கரைந்து, உணர்ச்சிகளால் ஆளப்படுகிறார்கள். இப்படிக் கரையாமல் காக்கத்தான் இராமலிங்க அடிகள் "தனித்திரு; விழித்திரு; பசித்திரு," என்று ஓதியிருப்பாரோ?

இந்தக் கடிதங்கள் தமிழில் நிலவும் இலக்கியத் தளம் பற்றிய ஒரு தெளிவான காட்சியைப் பிசிறில்லாமல் என் கவனத்தில் பதிய வைத்தன. இலக்கியத்தை, காற்றுப் புகாத பௌதிகத் தராசில் போட்டு, ஆயிரத்தில் ஒரு புள்ளிக்குத் துல்லியமாக (கோடியில் ஒரு புள்ளிக்குத் துல்லியமாக நிறுக்கும் கணினி அவர்களை அப்புறப் படுத்திவிடலாம் என்பதால் அனுமதிக்க மாட்டார்கள்.) நிறுத்து, தரம் பிரித்து, முத்திரை குத்துகிறவர்களால் மெய்யே போன்றதொரு பாவனை வண்ணத்தால் தீட்டப்பட்ட காட்சி இது. இலக்கியவாதிகள்- படைப்பாளிகளாக, வாசகர்களாக, விமர்சகர்களாக- இயங்கப் பழகிய தளம் பற்றிய காட்சி. முதன் முறையாகப் புதிய கோணத்தில் கவனப்பட்டதால் கொஞ்சம் அதிர்ச்சியும்கூட.

'இலக்கியம் அது தரும் சுகத்துக்காகவே' என்பதே அக்காட்சி.

அதாவது, எழுதும் சுகத்துக்காக எழுதப்படுகிறது.

படிக்கும் சுகத்துக்காகப் படிக்கப்படுகிறது.

விமர்சிக்கும் சுகத்துக்காக விமர்சிக்கப்படுகிறது.

இதில் சுகம் என்றால் என்ன என்பது கேள்வி. அது சொல்லில் பிடிபடாதது என்று இப்போதைக்குச் சொல்லி வைக்கலாம்.

இது மிக உயர்ந்த, நேர்த்தியான காட்சிதான். சந்தேகமே இல்லை. 'அழகு' நம் விவரணைக்கு அடங்காவிடினும், எவ்வளவு உயர்ந்த அனுபவமோ, அனுமானமோ, பாவனையோ, பரவசமோ, அவ்வளவு உயர்வானது இந்த சுகம் இழையும் காட்சி. சமூக உறவில் சமச் சீர்மை நிலவும் மேலை இலக்கியத்தின் உயர்ந்தபட்ச வளர்ச்சி அது. பல இனக் கலப்பில் தோலின் நிறம் ஒரு ராட்சச மேன்மையாய் உணர்த்தப்பட்டாலும், மனிதச் சீர்மையைக் குலைக்கும் பிழைகள் இன்னும் விலக்கப் பட்டவையாகத்தான் உள்ளன அங்கே. மேலும், அந்தக் காட்சி பற்றிய பிரக்ஞையை உண்டாக்கும் அடிப்படைக் கல்வியறிவும் அவர்களுக்குண்டு. ஆனால் நம்மூரில் சமூகமே பிழையின் மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதைப் புரிந்துகொள்ளக் கூடாதபடி மௌடிகத்தால் விலங்கிடப்பட்டிருக்

படிப்பகம்

www.padippakam.com



கிறார்கள் மக்கள். சமத்துவம் கோருகிறவன் மேலைக் கருத்தையும், இருப்பதைப் பராமரிக்கிறவன் வேதத்தையும் கீதையையுமாக மேற்கோள் காட்டி யுத்தம் புரிகிற நிலைமை இங்கே. ஆனால் இலக்கியவாதிகளோ, 'இதுக்கும் நமக்கும் என்ன இருக்கிறது? நாமெல்லாம் நவீனக் கொழுந்துகள்' என்பதான ஒரு பாசாங்குப் போர்வை விரித்து, அதில் நடுநாயகமாய் அமர்ந்துகொண்டார்கள். இவர்களுக்கு நெக்குருகிப் பீறிடுவதெல்லாம் இலக்கியமே அல்ல. உட்கார்ந்து செதுக்கினால்தான் இலக்கியம். பின்னப்பட்டுக் கிடக்கும் இந்த மண்ணின் குணத்துக்கு அது இறக்குமதி சரக்கு. மூலத்தில் திருட்டுச் சரக்கும்கூட.

இச் சூழலில் இங்கே அந்தச் சுகம் எப்படி அனுபவமாகிறது?

தின்று இளைப்பாறத் திண்ணை கட்டிப் போட்டு, தெருவோடு போகிறவரைக் கைதட்டி அழைத்து, தின்றது செரிக்க உன்னதம் பேசி, திண்ணை வேதாந்தத்தில் பண்ணையே விளைந்து வீட்டுக் குதிர்களை நிரப்பிவிடுகிற சுகம் அது.

சரி, இதற்கும் சமூகச் சராசரிக்கும் உள்ள உறவு என்ன? சேற்றில் சிதறிய சோற்றுப் பருக்கைகளை அந்தச் சேற்று நீரிலேயே கழுவி விழுங்கி, உண்ட கையைக் கோவணத்தில் துடைத்துக்கொண்டு, பரம்படித்து பயிர் வளர்க்கிறவனோடு இந்த இலக்கியம் எந்த வகையில் சொந்தம் கொள்ளுகிறது? இலக்கியவாதியின் சுகம் தேடும் வீரத் திணவை இந்தக் கோவணாண்டி, சிரங்கின் அரிப்பென்று சொல்லி நகுவானா? நகைத்தால், அது அவன் அறியாமை; அசட்டுத்தனம்.

சரி. இலக்கியவாதி அவனை அறிந்து கொள்ள முனையாதது என்ன வகை அறியாமை? அல்லது அறிவு?

'இந்த அறியாமையே என் அறிவின் மேன்மை' என்னும் அகந்தையால் பற்றப்பட்டுக் கிடந்தவன்தான் ஒரு காலத்தில் நானும்.

நான் எதைத் தின்றால் பசியடங்குமோ, அதை எனக்களித்து தன் பசியை அடக்குகிறவனுக்கு என் இலக்கியத்தில் என்ன இடம்? இடம் தந்திருக்கிறேன் என்பதை அறியச் செய்ய என் முயற்சி என்ன? 'சுகத்துக்காக இலக்கியம்' இந்தக் கேள்வியைச் சகிப்பதில்லை ஆயினும் இந்த 'அராஜகம்' இலக்கியத்தில் புகுந்து விட்டதென்னவோ உண்மை.

அறிவழகன் எழுதிய 'கழிசடை' என்னும் நாவலைத் தேடிப் பிடித்துப் படித்ததும் நண்பர் என்னைத் தொடர்பு கொண்டார்.

"என்னால் நான்கு நாட்கள் சாப்பிடவே முடியவில்லை. உணவுத் தட்டின் முன் உட்கார்ந்தால் ஒரே குமட்டல். ரொம்ப சிரமப் பட்டுவிட்டேன்," என்றார்.

"ஏன் அப்படி?"

"மலம் அள்ளுகிறவர்களின் கதை. மலத்தின் நாற்றம்தான்."

"என்ன விமர்சனம் இது?"

படிப்பகம்

www.padippakam.com



"நல்ல விமர்சனம் நண்பரே. அதுதான் அந்த நாவலின் வெற்றி. என்னைச் சாப்பிட முடியாமல் ஆக்கி, சில காட்சிகளை வாழ்நாள் முழுதும் மலத்தோடு சம்பந்தப்படுத்தி மறக்கமுடியாமல் காயப்படுத்துகிறதே, அதுதான் அதன் மகத்தான வெற்றி. இந்த அவலத்தை அனுபவித்தவனைத் தவிர வேறு எவனாலும் அதை எழுதிவிட முடியாது," என்று விம்மிதத்தோடு கூறினார்.

"உங்களை அதிகம் பாதித்திருக்கிறது என்று நினைக்கிறேன். அது ஒரு சிறந்த நாவலாயிருக்க அதற்கான கலையம்சம் வேண்டும். புதுப்புது அர்த்தம் தோற்றுவிக்கும் பூடகம் வேண்டும். எப்படி?"

"'அம்மா வந்தாள்' அலங்காரத்தம்மாள் கொழுப்பெடுத்த தேவடியாளாக, பலரறியப் புணரலாம் போலத் தெரிந்தாள். ஆனால், இந்தக் 'கழிசடை' நாயகியை ரகசியமாய்ப் புணரக்கூட ஆசை வராத தேவடியாளாக இருக்கிறாள்!"

என்ன இப்படி? என்ன வந்தது உங்களுக்கு?"

"எனக்கொன்றும் வரவில்லை. 'எழுதுவதில் எனக்கு ஒரு சுகம் இருக்கிறது. புணருகிற சுகம் இருக்கிறது. அதிலும் அடுத்தவன் பெண்டாட்டியைப் புணருகிற சுகம் இருக்கிறது' என்று பேட்டியளித்தவர் திரு. ஜானகிராமன். உங்களைக் கொள்ளை கொண்ட எழுத்தாளராயிற்றே. அவர் படைப்பில் இந்தப் புணர்ச்சி இருக்கத்தான் செய்யும். ஆனால் 'கழிசடை'யில் அவலம்தான் இருக்கிறது."

"கலை நேர்த்தி பற்றிக் கேட்டேன்."

"கழிசடை என்பதுதான் அதன் கலை நேர்த்தி. தொட்டாற் சிணுங்கி போல மென்மையாய் இருப்பதுதான் மேன்மை என்று எண்ணிக் கொண்டு நமக்கு நாமே ரொம்பவும் அன்னியமாகிவிட்டோம்; நம்மை அடகு வைத்துவிட்டோம்.

"'எழுத்தாளர்களுக்கு, குறிப்பாகத் தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு போதிய அனுபவம் இல்லை. அதனால் எழுத்தில் வீரியமில்லை' என்று சொல்கிறார்கள். இந்தச் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளும் முரண்களும் மூன்று பெரிய யுத்தங்களில் பங்கெடுத்த அனுபவத்தைத் தரும், நண்பரே. பாதிக்கப்பட்டவன் இலக்கியத்தில் அது பதிவாகும். நீங்களோ, சுந்தர ராமசாமி போன்றவர்கள் எழுதினால், இடைவிடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது மாதிரி நூல்கள் பற்றி யார் சொல்வது?"

"நான் அந்த நாவலை இன்னும் படிக்கவில்லை. அதன் விமர்சனம் படித்த நினைவு. ஜோசஃப் ஜேம்ஸ் என்ற பெயரே ஜே. ஜே. சில குறிப்புகளை எழுத வைத்துவிட்டதாக சுந்தரராமசாமி சொல்வார். இந்த அறிவழகனை என்ன எழுத வைத்திருக்கும்? மலத்தின் நாற்றமும் தோற்றமும்தானே?

இலக்கியத்தில் படைப்பாளிகள், விமர்சகர்கள், வாசகர்கள் யாவரும் மேல் மட்டக்காரர்களாகவே இருக்க ஆசைப்படுகிறார்கள்

படிப்பகம்

www.padippakam.com



என்பது கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. 'கவுச்சி ஆசை' என்ற கதை பற்றி அபிப்பிராயம் சொன்ன கடிதங்கள் வெறும் நான்கு மட்டுமே. கதை மிகச் சாதாரணமாகப்பட்டாலும் "சுடு காட்டுக்கு போறதுக்குள்ள முழுசா அர கிலோ ஆட்டுகறி சாப்பிட முடியுமாங்கறது அவனுக்கு சந்தேகமாகவே இருந்தது" என்னும் ஒற்றை வாக்கியம்தான் அதைப் போட வைத்தது. ஒரு மனிதப் பிறவியின் இலட்சியம், அரை கிலோ ஆட்டுக்கறிதான் என்பது எவ்வளவு பெரிய பயங்கரம்! இதற்கவனை ஆளாக்கியது எது? யார்?

இதுபற்றி யாருக்கும் உறுத்தல் வரவில்லை என்பது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

சகோதரர் வல்லிக்கண்ணன் போன்றவர்களுக்கு முதலில் அதன் மொழியே பிடித்திருக்காது. 'கதைகளில் பாத்திரங்களின் வாய்மொழி அவர்கள் பேச்சு வழக்கில் இருந்தாலும் கதை முழுதும் அப்படி எழுதப்படுவது எனக்கு உடன்பாடில்லை' என்று அவர் ஒரு பேட்டியில் சொன்னதாக நினைவு.

எனக்குக் கூடத்தான் அந்த மொழி பிடிக்கவில்லை. தமிழையே கொலை பண்ணுவதுபோல ஒரு விதிர்ப்பு. நம்மை நாமே குறைப்படுத்திக் கொள்வதைப் போன்ற ஒரு வதை.

ஆனாலும் ஒரு கேள்வி எழுகிறது. எனக்குப் பிடிக்காதவையெல்லாம் நியாயமற்றதாகத்தான் இருக்குமா? பிடிக்கும் - பிடிக்காதென்பது பழக்கத்தினால் வருவதுதானே. இவ்விதழில் நா. விச்வநாதனின் 'அதிருத்ரம்' பிராமண மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது எவ்வளவோ தேவலை. கடந்த 50, 60 ஆண்டுகளாக எத்தனை கரடுமுரடான, மணிப் பிரவாளமான, பிராமணக் கார்வைகளோடான ஒரு மொழியை சகித்திருக்கிறோம்? டி. வி., ரேடியோவில் இன்றளவும் கேட்டுச் சகிக்கிறோம்? நமக்கெந்த அருவெறுப்பும் பதைபதைப்பும் வரவில்லை. (புதுமைப்பித்தனும் ஆர். சண்முக சுந்தரமும் அந்தந்த வட்டார மொழியை பயன்படுத்தியபோது அது நம்மொழி என்று பற்றுதலோடு சிக்கெனப் பிடித்துக் கொண்டோம்; சுகம் கண்டோமே என்பதையும் மறக்கக் கூடாது.)

அதைப்போலவே இந்த அடித்தள மக்களின் இழுப்புப் பேச்சும் அங்கீகரிக்கப்பட வேண்டியதுதானே. ஒருவேளை நம்மினும் மேலோர் பேசும் மொழி நன்மொழி, நம்மைவிடத் தாழ்ந்தோர் மொழி 'பறைமொழி' என்பதாக இருக்குமோ?

இலக்கியம் நம்மை இந்த வேறுபாடுகளிலிருந்து மீட்கவில்லை என்பதோடு நம்மை ஒன்றும் உயர்த்தியும் விடவில்லையே?

'இல்லைதான்' என்பதற்கு இன்னும் ஒரு சான்று: சென்ற இதழில் தலித்துகள் பற்றி சில கேள்விகள் கேட்டிருந்தேன். 74 கடிதங்களில் (இரா. நடராசன் தவிர - அவர் ஒரு தலித்தியவாதி) ஒருவர்கூடத் தொடவில்லை.

இது போன்ற திகைப்பை நான் இதற்கு முன்னும் ஒருமுறை அனுபவித்ததுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



வெங்கடராமனுக்குப் பிறகு இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு தாழ்த்தப்பட்டவர்தான் வரவேண்டும் என்று சிலர் கோரிக்கை விடுத்தபோது, அவ்வளவு மாண்பு மிக்க பதவிக்குப் புத்திசாலிகள் தான் வரவேண்டும் என்று வெகு அலட்சியமாகச் சொல்லப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவ்வளவாகப் புத்தி (ஹர்ஷத் மேத்தா புத்தி?) போதாது என்று சொல்லாமல் சொல்லப்பட்டது. அதைக் கேட்டு, கோரிக்கை விடுத்தவர்களுக்கோ (வெறும் அரசியல்வாதிகள்) அம்பேத்கர் தொண்டர்களுக்கோ கோபமே வரவில்லை. 'ரௌத்திரம் பழகு' என்பது இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்குத்தான். குடியரசுத் தலைவருக்குப் புத்தி தேடி முடித்தவர்கள், துணைத்தலைவராக நாராயணனை (தனக்கு புத்தியுண்டு என்பதை சீனத் தூதுவராக முன்பே நிரூபித்தவர்) ஒரு மனதாகக் கொண்டு வந்தார்கள். இன்னமும் தலித்துகளுக்குச் செய்யப்படும் பரிந்துரைகள் யாவும் ஒருவகை பிச்சை மாதிரிதான் வழங்கப்படுகின்றன. சரி, புத்தியுள்ள சர்மா இதுவரை சாதித்தது என்ன? ஹர்ஷத் மேத்தாவின் பல்லாயிரங் கோடி கொள்ளையைக் கஜானாவில் சேர்த்தாக வேண்டும் என்று கலகமா செய்துவிட்டார்? குறைந்தபட்சம் இதுபோன்ற பிழைகளுக்கு சமூகம் காய்த்துப் போய்விடாமல், சுரணையோடு திரண்டெழ வேண்டும் என்று வாய்முத்தா உதிர்த்துவிட்டார்? ஒரு மண்ணுமில்லை. திகட்டத் திகட்டத் திருப்பதிக்குப் போய் வருகிறார். இதை நாராயணன் செய்ய மாட்டாரா? ஒரு வேளை நாராயணன் செய்தால், "இவருக்கெல்லாம் பூரண கும்ப மரியாதை செய்ய வேண்டியுள்ளதே," என்று குருக்கள்கள் நொந்துபோயிருப்பார்கள். அது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஏதோ, இந்து தர்ம பரிபாலனத்திற்கு அவர்களாலான உதவி.

இந்தத் தீட்டு - தொடக் கூசுகிற தீட்டு யாருடைய சொத்து? வர்ணாசிரமத்தை வகுத்தவன் சொத்தா? சாதியை வளர்த்தெடுத்தவன் சொத்தா? உடைமைகள் ஆளை மாற்றும்போது சாதிகளும் மாறும் என்பதற்குப் பல முதுமொழிகளைச் சான்றுகளாகக் கொண்டவர்கள் தமிழர்கள். ஆனாலும் மாறுவது அவ்வளவு எளிதாக நடந்துவிடுவதில்லை, அல்லது நடக்க விட்டுவிடுவதில்லை என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும்.

அக்பர் தொடங்கிய 'தீன் இலாகி', அவனுக்குப் பின்னால் ஆதரவின்றி மறைந்தது. அது போலவே ஆரியக் கொடையான வர்ணாசிரமும் தென்னாட்டில் மன்னர்கள் மடிந்தபோதே மடிந்திருக்க வேண்டாமா? மாறாக, அது வேரூன்றிப் போயிற்று. சத்திரிய, வைசியப் பாகுபாடுகளையெல்லாம் உதிர்த்துவிட்டுச் சகட்டு மேனிக்கு சூத்திரர்களாகவே அனைத்துத் தமிழர்களும் அடங்கிப் போனார்கள். தங்களுக்குச் சூத்திரர்களாய் இருக்க இந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கும் மிதப்பிலேயே தங்களைச் சூத்திரர்களாக பிராமணப் பட்டியலுக்குத் தாரை வார்த்துவிட்டார்கள்.

ஆனாலும் பிராமணர்கள் விவரமானவர்கள். நடப்புச் செலா

தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

முரசொலிக்கு ஒரு கேள்வி:

# கேளிர் என்பது பகைவரா?

—தமிழப்பன்

முரசொலியில் இப்படி ஒரு கேள்வியும் பதிலும் வந்துள்ளன:

கேள்வி:— அக்னி அமைப்பு இலக்கிய நிகழ்ச்சியில் கணியன் பூங்குன்றன் என்பதைக் கலைஞர் முதலில் மாற்றி 'கணியூர்ப் பூங்குன்றன்' என்று குறிப்பிட்டார் என்பதாகவும் பூங்குன்றன் கணியூரைச் சேர்ந்தவன் என்பதற்கு எந்தச் சான்றையும் கலைஞர் சொல்லவில்லை என்றும் 'ஒருவர்' 'தினமலரில்' தீட்டியுள்ளாரே?

பதில்:— கலைஞர் அந்த நிகழ்ச்சியில் கணியன் பூங்குன்றனை கணியூர்ப் பூங்குன்றன் என்று குறிப்பிடவில்லை. கட்டுரை தீட்டியவருக்குச் சரியாகக் காதில் விழவில்லை போலும். கணியன் என்பது அச்சில் இறுதியாக ஓரிடத்தில் மட்டும் கணியூர் எனப் பிழையாக வந்துள்ளது. கலைஞர் பேச்சில் அப்படி வரவில்லை.'

கேட்டவர் பெயரோ, பதில் கூறியவர் பெயரோ காணோம்.

கணியூர் எனக் கேட்ட என் காதுதான் அதிர் வேட்டுச் செவிடென்றாலும் நேரில் கேட்ட, தொலைக் காட்சிகளில் கேட்டவர்களது காதுகளாவது நல்ல காதுகளாக இருந்திருக்குமே!

முரசொலிக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்று: காது மருத்துவர் ஒருவரை நான் காணச் செல்ல விருக்கிறேன்.

முரசொலியில் வந்தது அச்சுப்பிழை என்று அவர்களே சொல்லிவிட்ட பின் அதற்கு மேல் கேள்வி கேட்பது அறமாகாது.

ஆனால் ஒன்று: கலைஞரே எழுதி வெளியிட்ட 'சங்கத்தமிழ்' நூல் பக்கம் 6இல் உள்ள 'கணியூர்ப் பூங்குன்றனும்' அச்சுப் பிழை தானா?

'கேளிர்' என்ற சொல்லுக்கு உறவினர் என்றும் பகைவர் என்றும் 'அக்னியில்' குறிப்பிடப்பட்டது. இதற்கும், முரசொலி- கட்டுரை தீட்டியவருக்குக் காதில் சரியாக விழவில்லை என்று கூறுமோ? அச்சுப் பிழையென்குமோ? அவ்வாறு கூறமுடியாதபடி அச்சு அச்சான எழுத்துக்களில் முரசொலியில்,

"இதுதான் சங்க காலத் தமிழில் ஒரு சங்கடம். கேளிர் என்றால் இது போன்ற ஒரு இடத்தில் உறவினர் என்று பொருள். இன்னொரு இடத்தில் பகைவர் என்று பொருள். கேளிருக்கே இரண்டு பொருள் இருக்கிறது," என்று கலைஞர் கூறியதாக அச்சாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



சங்க இலக்கியங்களில் கேளிர் என்ற சொல்லுக்கு உறவினர் என்ற பொருள் உண்டே தவிர பகைவர் என்ற பொருள் அறவே இல்லை.

1. எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர். —குறுந்தொகை40.
2. இடிக்குங் கேளிர். —குறுந்தொகை 58.
3. கேளிர் வாழியோ கேளிர் நாளுமென். —குறுந். 280.
4. கள்ளிற் கேளிர். குறுந். 293.
5. மேனின்று மெய்கூறும் கேளிர்போ னீசெல்லுங்.—க.தொகை 3.
6. அல்லல் களைதக்க கேளிருழைக் சென்று. —கலிதொகை 61.
7. புல்லிய கேளிர். —கலி. 144.
8. வாழிய கேளிர். —கலி. 147.
9. கேளிர்கள் நெஞ்சமுழுங்க —கலி. 149.
10. செழுங் கேளிர் நிழல் சேர் —மது. 168.
11. மற்றோரும்மிலர் கேளிரு மிலரெனும். —பரிபாடல் 4.
12. கேளிர் மணலின் —பரி பா. 8.
13. தெரி கோதை நல்லார்தங் கேளிர்த் திளைக்கும். —பரிபா.11.
14. கெழீஇக் கேளிர் —பரிபா. 14.
15. கேளல் கேளிர் — அகநானூறு.93.
16. அம்ம வாழி கேளிர்முன் நின்று —அக நா.130.
17. இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ —அக நா. 151.
18. கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும் —அக நா. 173.
19. நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும் —அகநா. 279.
20. பெறலருங் கேளிர் பின் வரிது விருப்ப —அக நா. 351.
21. வன்புலக் கேளிர்க்கு வருவிருந்தமரும் —புறநானூறு 42.
22. கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த —புறநானூறு 71.
23. கேளல் கேளிர் —புற நா. 74.
24. யாது மூரே யாவரும் கேளிர் —புற நா. 192.

மேற் கண்ட இடங்களில் எல்லாம் நட்பு, உறவு, சுற்றம் நண்பர், உறவினர் முதலான பொருள்கள் உள்ளனவே யன்றிப் பகைவர் என்ற பொருள் வரவே இல்லை. இதற்கென்ன சொல்லுமோ முரசொலி? இன்னொரு கேள்வி பதிலை எழுதுமோ?

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி:

# கி.ரா. என்ற கதை சொல்லியும் கதை சொல்லியின் அரசியலும்

—ராஜ்கௌதமன்

கதைகள்- தாத்தா, சிறுவர்கள் ஆகியோரிடையே வயதை ஒரு வரம்பாகக் கொள்ளாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் பதிப்பகம்- புத்தகம்- வெளியீடு- வாசகர்கள் என்ற நிறுவன வடிவங்களுக்கு வருகிறபோது 'வயது' வரம்பு புதிதாக நுழைகிறது. இந்த முரண்பாடு எதனால்? ஒருபக்கம் இப்படி 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற தலைப்பு, ஆசிரிய - வெளியீட்டாரின் தந்திர உபாயமாக ( Strategy ) இருப்பதோடு, மறுபக்கம் இது சமகாலத்தில் இருந்து கொண்டிருக்கிற வெகுமக்கள் தொடர்பு சாதனப் பண்பாட்டைக் குறிப்பால் உணர்த்தி அதனைப் பயன்படுத்தவும் செய்கிறது. 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' (A) என்ற சான்றிதழ் வெகுமக்கள் பண்பாட்டின் ரசிகர்களிடையே தைரியமான- ஒவரான - விகாரமான பாலியல் பற்றிய கட்டாயமானதும், 'குதுகுது'ப்பானதுமான ஓர் எதிர்பார்ப்பினை ஏற்படுத்துவதை இந்த நூலுக்கும் நீட்டிக்கொள்ளலாம். (கி.ரா.விடம் நேரில் கேட்டபோது, அது தமது தேர்வு அல்ல; தமக்குப் பிடிக்கவில்லை; தாம் தந்த பெயர் 'பாலியல் கதைகள்'தான்; வெளியிட்டவர்களே, 'பாலியல் கதைகள்' என்றால் வாசக சந்தையில் எடுபடாது என்று அவர்களாகவே இதற்குக் 'கவர்ச்சிகரமான' தலைப்பைத் தேர்வு செய்தார்கள் என்று கூறினார்.)

'பாலியல் கதைகள்' என்றால் சாதா வாசகனுக்குப் புரியாது என்பது அவர்கள் மறுத்ததற்கான காரணம் என்பது ஒருபுறம் இருக்கட்டும். 'பாலியல் கதைகள்' என்பதே திசை திருப்பிவிடக் கூடிய சக்தி பெற்றதாகும். அதற்கென்றே பூர்ஷ்வா சந்தையில் தனிரகம் இருக்கிறது. அது வக்கிர ரகமாகும்.

### 4. கல்விச் சொல்லாடல்:

நாட்டுப்புறப் பாலியல் கதைகளை வெகுமக்கள் பண்பாட்டிற்குள் கொண்டு வருகிறபோது, நுகர்வோராகவும், நிலவுடைமைத் தமிழ்ப் பண்பாட்டாளராகவும் இருக்கிற தமிழ் வாசகர்களை ஏற்கச் செய்வதற்காக, கி. ரா. வேறொரு உத்தியை அல்லது தந்திர உபாயத்தைச் செய்துள்ளார். இங்கே புதிதாக அரங்கேறுகிற எவ்விதச் சொல்லாடலும் கல்வி வட்ட அங்கீகாரம் பெறும் போதே கௌரவமானதாகக் கருதப்படுகிறது. புதுவைப் பல்கலைக் கழக உயர் ஆய்வுப் பொருளாக டாக்டர்கள் பலர் கூடி விருப்பு வெறுப்பின்றி ஆயத்தக்க உயர்ந்த விசயமாகப் பாலியல் கதைகள் இருக்கின்றன. பேராசிரியர்கள், கவிஞர்கள், கலைப்பட இயக்குநர்கள் விவாதிக்கின்ற அளவிற்கு இவை முக்கியத்துவம் பெற்றிருக்கின்

படிப்பகம்

www.padippakam.com



றன. 'பால்வினைக் காரியங்களைக் கேட்டுச் சிரித்துவிட்டு யோசிக்கவும் வேண்டியதிருக்கிறது''(பக்-39) என்று கி. ரா. எழுதும் போது அறிவார்ந்த பணியோடு இக்கதைகள் இணைக்கப்படுவதையும் காண முடிகிறது. பதினெட்டாவது கதையின் ஊடே கி. ரா. புகுந்து தாம் இப்படிப் பாலியல் கதைகளைத் தேர்வு செய்து வெளியிடுவதற்கான நோக்கம், பாலியல் பற்றிய அறியாமையை நீக்குவதே ( Sex Education) என்கிறார். நூலில் பல இடங்களிலும் இதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

இதோடு மட்டுமின்றி மற்றொரு முக்கிய விசயத்தை இதனோடு தொடர்புறுத்திப் பார்க்கலாம். ஆசிரியர் பல சந்தர்ப்பங்களில் கதைத் தொடக்கத்திலும், முடிவிலும் பண்பாட்டு மானுடவியல் கூற்றுகளைச் செந்தரப்பட்ட தமிழில் பொன்மொழிகளைப் போல எழுதிச் செல்லுகிறார். கதைப் பிரதி பேச்சுத் தமிழில் இருக்க, இக்கூற்றுகள் யாவையும் உயர்தமிழ் நடையில் அமைந்துள்ளன. பேச்சுத்தமிழைக் காத்து அரண் செய்வது போல, அதற்குச் சிபாரிசு செய்வது போல, எழுத்துத் தமிழ் நடை அமைந்துள்ளது. இப்படி ஆசிரியர் குறுக்கும் நெடுக்குமாக ஓரப்பகுதி சொல்லாடலுக்கு மேலாதிக்கச் சொல்லாடல்களை வரப்புகளாகப் போட்டிருக்கிறார்.

ஒரு கதையை முடிக்கிற போது, அந்தக் கதையின் பாடபேதங்கள் பற்றிய தகவலையும், அந்தக் கதையைத் தாம் பல்கலைக் கழக உயர் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையிலிருந்த கதையிலிருந்து உருவாக்கிக் கொண்ட தகவலையும் குறிப்பிடுகிறார். ஆய்வு நெறி முறையோடு, நாட்டுப்புறப் பாலியல் கதைகளை இணைத்துக் காட்டுவதன் வழியாக, இத்தகைய கதைகளும் இவற்றை வெளியிடுவதும் அசாதாரணமான விசயம், சாமான்யமானதல்ல என்பது நிலை நாட்டப்படுகிறது.

கி. ரா. ஆங்காங்கே பண்பாட்டு மானுடவியல் கூற்றுகளைத் தந்து, பாலியல் கதைகளை அவற்றின் வழியில் நோக்கச் சொல்லியிருப்பதில் சில திரிபுகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக நான்காவது கதைத் தொடக்கத்தில், கதையில் வரப்போகிற அண்ணன் தங்கைக் கிடையிலான விலக்கப்பட்ட பாலுறவு நாட்டத்திற்கான மானுடவியல் கண்டுபிடிப்பை ஒரு முன் எச்சரிக்கை போல எடுத்தெழுதுகிறார்.

அது பின்வருமாறு:

> ''திருமணம் என்று ஒன்று ஏற்படாத கால கட்டத்தில் நிலவிய வரைமுறையற்ற பால் உறவுகள் பற்றியும், திருமணம் எனும் உறவை ஏற்படுத்தி அதைச் சரியாக ஆரம்பத்தில் அமுல்படுத்த முடியாமல் நிகழ்ந்த நடப்புகளைப் பற்றியெல்லாம் கதைகள் பேசும்.'' (பக்-23)

இந்தப் பொத்தாம் பொதுவான, பொதுப்புத்திப் பாங்கான கூற்று மிக எளியதொரு அபிப்பிராயம் என்ற அளவோடு முடிந்து

படிப்பகம்

www.padippakam.com



விடுகிறது. எளிமைப் படுத்துதல் என்பதற்கு ஆழ அகலத்தைக் காட்டக்கூடாது என்பது பொருளாக இருக்க முடியாது. இக்கதையில் சுட்டப்படுகின்ற மிகத் தொன்மை வாய்ந்த நாகரிகத்தால் விலக்கப்பட்ட தகாப் புணர்ச்சிக்கான உறவு நாட்டமானது, இயற்கை இயக்கம் சார்ந்தவற்றோடு தொன்மங்களாக பலத்த உருவகக் குறியீடுகளாகப் பொதியப்பட்டுள்ளது. பால் அழுக்கம், குற்றவுணர்வு உருவகப் பாங்கான மடைமாற்று ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகளைக் காண வேண்டியதிருக்கிறது. ஆண் - பெண் அலைகள் என்று மனிதமயப் படுத்தப்பட்ட இயற்கைப் பொருட்கள், அண்ணன் - தங்கை என்ற மானிடச் சங்கேதப் பொருளைப் பெற்றுவிடுகின்றன. முன் அலையைப் பின் அலையால் ஒரு போதும் தொடமுடியாது என்ற இயற்கையின் நிர்ணயமானது, அண்ணனும் தங்கையும் இணையவே முடியாது என்ற செயற்கையான சமூக நிர்ணயத்திற்கான இயற்கைத்தனத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. உடைமைச் சமூகத்தின் செயற்கையான ஒழுங்கு முறை இங்கே இயற்கை மயமாக்கப்படுகிறது. இவ்வாறு இயற்கை, செயற்கையான பண்பாடு, தொன்மம், குறியீட்டுப்பாங்கான குறிப்பீடு, உளவியல் முதலானவற்றோடு பின்னிப் பிணைந்துள்ள மாபெரும் வரலாற்று அறிவைப்பற்றி ஆசிரியர் தரும் எளிய கூற்று மௌனம் சாதிக்கிறது. ஏக காலத்தில் கி. ரா. தம்மைக் கதை சொல்லியாகவும், நடுநிலையாளராகவும், மானுடவியல் புலமையாளராகவும் நிர்மாணிக்கிறபோது, இந்த எண்ணங்களுக்காக மூலக் கதைகளை விட்டுக் கொடுக்க வேண்டியதிருப்பதை நம்மால் உணர முடிகிறது.

'திருவாளர் அத்தை கொண்டான்' கதையைத் தொடங்கும் போது "திருவாளர் அத்தை கொண்டான் பற்றித் தெரியுமா?" (பக். 26) என்று ஆசிரியர் நூதனமாகவும், எழுத்துத் தமிழ் நடையிலும் தொடங்குகிறார். 'திருவாளர்' என்ற மரியாதை அடைமொழியும், உயர்தமிழ் நடையும், இங்கே இப்படிப்பட்ட மரியாதையும் உயர்வும் இல்லாத ஒருவனுக்கு இடுவதன் வழியாக அவனை ஆசிரியர் பகடி செய்வது புரியும். எல்லாக் கதைகளையும், 'ஓர் ஊர்ல' என்று தொடங்குவது சலிப்பைத் தரும் என்பதால், இந்தக் கதையைச் சிறுகதைப் பாணியில் ஒரு வினாவுடன் தொடங்குகிறார். ஒரு அதிர்ச்சி, ஒரு எதிர்பார்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகிறார். இவையெல்லாம் நடையியல் (Stylistics) சார்ந்தவை. வேறொரு குணாம்சம் பொருந்திய நாட்டுப்புறக் கதையை, நவீன மீடியாவுக்கு ஏற்ப, நவீன இலக்கிய வகைக்குச் சம்பந்தப் படுகிறமாதிரி, நடையியல் கூறுகளுக்கு உட்படுத்துகிறார் என்று கூறலாம்.

இக்கதையை வாசிப்பவர்களைக் கி. ரா. முன்கூட்டியே உசார்ப் படுத்துகிறார் கதையில் வருகிற ஆண், இறுதியில் அத்தையுடன் உறவு கொள்ளுகிற உச்ச கட்டத்திற்காக இப்படி உசார்ப்படுத்துகிறார். இதனால்தான் கதை முடிந்ததும், "ஒரு காலத்தில் வரை

படிப்பகம்

www.padippakam.com



முறையற்ற பாலுறவு மக்களிடையே ஏற்பட்டிருந்த காலத்தில் கவனத்தோடு அது ஒழுங்குபடுத்தப் பட்டது'' (பக். 29) என அருள் வாக்குப் போல ஒரு கூற்றைக் கி. ரா. தந்திருக்கிறார். முறையற்ற பாலுறவு, நாகரிகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது என்ற நியாயத்தை வேலியாக இடுகிறார். ஆனால் கதையின் போக்கு வேறாக உள்ளது. ஆண் தனது குறியைப் பிய்த்துத் தானே உண்டு குறியில்லாமல் போவதாகவும், வேறு குறி செய்து மாட்டப் போவதாகவும் அதற்கு மனைவியும் அத்தையும் பணம் தருவதாகவும், மாட்டி வந்த குறி சரியாக இருக்கிறதா என்று அத்தை சோதிப்பதாகவும், வெள்ளோட்டம் நடத்துவதாகவும் கதை நகர்கிறபோது, ஒர்மையற்ற நிலையின் கனவுப் பாங்கில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. நாகரிக உடைமைச் சமுதாயத்தின் பல விசயங்கள் இங்கே நாட்டுப்புற மக்களிடையே மாபெரும் சிரிப்பாக உருமாற்றப்பட்டிருக்கின்றன. 'வரைமுறையற்ற பாலுறவு' என்ற கல்வி வட்டார ஒற்றைப் பரிமாணத்தை மட்டுமே மேற்படி wild fantasy jokeற்குத் தந்துள்ளார் கி. ரா.

**5. பாலியல் பசி, காமம்:**

கி. ரா. பல சந்தர்ப்பங்களில் பாலியல் பசி, காமம், பால் பட்டினிக்குப் பெரிதும் ஆளானவள் பெண், இப்பசிக்குத் தக்க உணவில்லாவிடில் ஒழுங்கை மீறுவாள், அவளுக்கு ஆணைவிட அதீதப் பாலியல்பு உண்டு, பாலியல் கதைகள் பலர் நினைப்பது போலக் காமத்தைக் கிளப்பாது (பக். 77) என்று திரும்பத் திரும்பக் கூறி, இதில் வாசகரின் கவனத்தைக் குவிக்கிறார். பாலியல் கதைகள் சிரிப்பைத்தான் மூட்டும் என்று கூறுவதோடு நில்லாமல், காமத்தைக் கிளப்பாது என்ற இல்லாத ஒன்றை ஏன் வருவித்துக் கொள்ள வேண்டும்? இது யாருடைய பிரச்சினை? போலி ஒழுக்கமும், கபட முகமும், தணிக்கை அதிகாரமும் கொண்ட மேலாதிக்க ஒழுக்கவியலின் பிரச்சினை இது. வாசக ஏற்பு, போலிப் பண்பாட்டின் அடக்குமுறை ஆகியவை கூட்டாக இருந்து பறிமாறப் படுகிற நாட்டுப்புறக் கதையை, நகர்ப்புற தமிழ்ப் பண்பாட்டிற்கு இடம் பெயர்க்கிறபோது எழும் பிரச்சினையாகும். இக்கதைகளில் தெரிகிற 'ஒழுங்கு மீறல்' சமாச்சாரங்கள் எல்லாம் ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினை போல ஆதிக்கப் பண்பாடு நோக்கினாலும், உண்மையில் இக்கதைகள் நிகழ்த்தப்படும் கூட்டுச் சூழலை ஒட்டி நோக்கும் போது, இவை ஒர்மை மனதின் நாகரீக வேடங்களைப் பார்த்து ஒர்மையற்ற மனங்களின் தொன்மை வாய்ந்த சிரிப்பாக, பகடியாகத் தோன்றவில்லையா? ஆசிரியர் இந்தக் கோணத்தில் கதைகளை அணிவகுக்கவில்லை எனத் தோன்றுகிறது.

பெண்ணுக்கு அதீதப் பால் இயல்பு இருக்கும் போது சமுதாயத்தில் பிரச்சினை எழுகிறது. அதிலும் அவள் திருமணத்தில் மாட்டிக் கொண்டால் வேறு வழியின்றி இருக்கிற ஒழுங்கை ரகசியமாக மீறுவாள் என்ற பொருளில் ஆசிரியர் விளக்கம் தருகிறார். பெண் பாலியல் துரோகம் புரிவதற்கு அவளுடைய அதீதப் பால்

படிப்பகம்

www.padippakam.com



இயல்பும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. ''எப்போதும் திடகாத்திரமான பெண் எதிர்மறையாகவே நோக்கப்படுகிறாள். எப்போதும் பெண்கள்தான் பாலியல் துரோகம் புரிகிறார்கள்'' என்று நாட்டுப்புறக் கதைகளை ஆய்ந்த பிளாக் பர்ன்[2] எழுதுகிறார்.

இவர்கள் சொல்லுகிற பெண்ணின் அதீதப் பால் இயல்பு பற்றிப் பார்க்க வேண்டும். இது ஆண் ஆதிக்கம் கட்டி எழுப்பியதொரு தொன்மந்தான் என்பதைக் காணலாம். பெண் அதீதப் பாலியல் புடையவள், அவளுடைய இயற்கையே அதுதான்; அது எப்போதும் மீறவே பார்க்கும்; அதனால் அவளை எப்போதும் ஓய்வு ஒழிவின்றி வீட்டு வேலைகளில் போட்டு வசக்க வேண்டும் என்று மனுநீதி முதல் இன்றுவரைக்கும் ஒரு ஆண் ஆதிக்கப் பண்பாட்டுத் தொன்மம் செயல்பட்டு வந்துள்ளது. பெரும்பாலும் மணமானபின் தான் பெண்ணின் பாலியல் அவளைக் கட்டியவனுக்கு அதீதமாகப் படுகிறது. இப்படிப் படுவதற்குப் பெண்ணின் இயற்கை காரணமாகக் கூறப்படுகிறது. ஆனால் இதற்கு உடற்கூற்றியலோடு பண்பாட்டுக் காரணங்கள் உள்ளன. முதலாவதாக உடற்கூற்றியலின் படி பார்த்தால் ஆணின் பாலியல் சுகம் அடர்த்தி மிக்கதாக (intensive), குறுகிய காலப் பரிமாணத்தில் நிரம்பிய சுகமாகவும், பெண்ணுக்கு இது நீண்ட காலப் பரிமாணத்தின் நெடுகவும் பரவியதாகவும் இருக்கிறது. இந்த வேறுபாடு காலப் பரிமாணத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. இந்த வேறுபட்ட காலப் பரிமாணங்களுக்குத் தக்கபடி சேர்க்கைச் செயலின் தொழில்நுட்பம் அமைய வேண்டியதுள்ளது. பால் உந்துதல் கற்று வருவதாக இன்றி இயல்பானதாக இருக்க, இதனைக் காரிய சாத்தியப்படுத்திச் சுகம் பெறுவதற்கான தொழில் நுட்பமானது கற்று அறிவதாக ஆண் - பெண்ணின் பரஸ்பர அனுசரிப்புகளாக இருக்கின்றன.

இரண்டாவதாக, ஆணாதிக்கப் பண்பாட்டில், பெண், ஆணின் உடைமை; உடைமையை மறு உற்பத்தி செய்பவள்; உடைமைக்கு உரியவர்களைப் பெறுபவள் எனச் செயற்கையான பொறுப்புக்களில் திணிக்கப்பட்டிருப்பதால், அவனுடைய பாலியல், அவளுக்குரியதாக இன்றி, ஆணுக்குரியதாக, அவனால் கையாளத்தக்க ஒரு உபகரணமாக ஆகிவிட்டது. இந்நிலையில் தனிச் சொத்துடைமை இணைகிறபோது, அவன் அதனை விழிப்போடு கண்காணிக்க வேண்டியவனானான். பெண்ணும் கற்பு, அடக்கம், வெட்கம், நளினம், கூச்சம் பார்த்துத் தன் பாலியல் நாட்டத்தை, ஒத்துழைப்பை அடங்கிய தொனியில் வெளிப்படுத்த வேண்டியதிருக்கிறது. ஆண் தங்கு தடையின்றித் தீர்த்துக் கொள்ளலாம். அது தான் இயல்பு என்று ஆகிவிட்டது. அவளோ கட்டுபடுத்திக் கட்டுப்பாட்டோடு நடந்தால்தான் மரியாதை. இதனால் திருமண அமைப்பின் அடிப்படையிலேயே, பெண்ணுடைய பாலியல் அடக்கப்பட்டே இருக்க வேண்டியது ஆதிக்கப் பண்பாடு விதித்த நியதியாக இருக்கிறது. அவள் சற்றுத் திமிரப் பார்த்தாலே அவளுக்கு வேறு மதிப்பீடுகள் கிடைத்துவிடும். எனவே பெண்ணுக்கு அதீதப் பால் இயல்பு உண்டு என்பது ஆண்கள் கட்டிவிட்ட கதை; மாயை.

படிப்பகம்

www.padippakam.com



கி. ரா. எட்டாவது கதையில் சில துணுக்குக் கதைகளைத் தரும் முன்பு, பெரும்பாலும் பெண்களே பாலியல் கதைகளில் இழிவு படுத்தப் படுவதாக ஒரு முடிவை எடுத்து எழுதுகிறார். இந்த முடிவைப் புலப்படுத்துவதாக ராஜா - ராணிக் கதைகளைக் குறிப்பிடுகிறார். இக்கதைகளில் ராஜாக்களை மணந்துகொண்ட ராணிகள் அரண்மனையிலுள்ள வேலைக்கார ஆண்களோடு சேர்ந்து குழந்தை பெறுகிறார்கள். ஒடுக்கப்பட்ட பெண்கள், வேலைக்கார ஆண்கள் பார்வையில் இக்கதைகள் உரத்த சிரிப்புகளாக இருக்கின்றன. ராணிகள் ஏளனத்துக்கு உள்ளாகவில்லை; ராஜாக்களே நகைப்பிற்கு இலக்காகிறார்கள். ராணியால், ராஜாவிடம் சுதந்திரமாக உறவாடிச் சுகம் பெறமுடியாது. ராஜா மனசு வைத்தால் உண்டு. வேலைக்காரனால் ராஜாவைத் தண்டிக்க முடியாது. எனவே ஒடுக்கப்பட்ட ராணியும் (பாலியல்) வேலைக்காரனும் வெவ்வேறு காரணங்களுக்காக ஒருவரை ஒருவர் பயன்படுத்துகிறார்கள். ஒருவர் இடத்தை மற்றவர் பிடிக்கிறார். ஒடுக்கப்பட்ட தங்கள் நிலைமைகளைப் பகிர்ந்து கொண்டு தீர்க்கிறார்கள். ராணி என்பதால் வேலைக்கார ஆணைப் பயன்படுத்த முடிகிறது. வேலைக்காரன் ராணியைச் சேர்வதால், அது ராஜாவை, அவனை ஆதிக்கம் செய்ததைப் புணர்ந்த திருப்தி அவனுக்கு ஏற்படுகிறது. 'புணர்தல்' என்பது ஆணுக்கு அதிகாரம், தண்டித்தல், ஒறுத்தல் என்ற மனப்பதிவுகளை, குறியீடுகளை உணர்த்துகிறது. இங்கே பெண்ணை ஏளனப்படுத்துதல் என்பது எங்கே இருக்கிறது? தற்போது செலாவணியாகிக் கொண்டிருக்கிற தமிழ்ப் பண்பாட்டுப் பெண்ணியச் சொல்லாடலின் ஓர் ஓர்மையற்ற தாக்கத்தினால்தான் கி. ரா. இப்படி ஒரு கருத்தை உதிர்த்திருக்கிறார்.

### 6. சமய, புனிதச் சொல்லாடல்:

பாலியல் கதைகளை, மேலாதிக்க இந்துப் பண்பாட்டில் ஊறிய வாசகர்களை ஏற்கச் செய்வதற்காக அந்தப் பண்பாட்டின் சமய வகைச் சொல்லாடல்களைக் கி. ரா. தந்த உபரிச் சொல்லாடலில் காணலாம். பாலியல் சமாச்சாரங்களை மூடி வைக்கலாகாது; அது பாலியல் பற்றிய அறியாமையில் போய் முடியும். இதனால்தான் முன்னோர்கள் (அதனால் மேன்மையானவர்கள்) மேன்மக்கள் நுழைந்து வழிபடும் கோயில் தலங்களில் பெண் நிர்வாணத்தையும் ஆண் - பெண் பாலியல் சேர்க்கைகளையும் சிலைகளாக வடித்துள்ளார்கள் என்று தொடக்கத்திலும், பிறகு பதினோராவது கதை முடிவிலும் கி. ரா. கூறுகிறார்.

கடவுளின் நிர்வாணம், குறி பற்றிய கலாபூர்வ வருணனைகள் பெண் கடவுளின் பால் உறுப்பு விவரணை (பக்.76) எல்லாம் முன்னோர் தந்த இந்துப் பண்பாட்டில் அசிங்கம் என்று இல்லாத போது, அதேபோல நாட்டுப்புறப் பாலியல் கதைகளிலும் அசிங்கம் இல்லை என்றொரு தர்க்கத்தைக் கி. ரா. முன்வைக்கிறார். ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது- நாட்டுப்புற மக்களிடையே, மேற்படி 'அசிங்கங்கள்' இவர்கள் நினைப்பதைப் போல, ஒழுக்கவியல் சார்ந்

படிப்பகம்

www.padippakam.com



தலையாக இல்லை. உடைமை அமைப்பின் நாகரிக வேசம் அணிந்த கபட ஒழுக்கவியலை, தங்களிடம் எஞ்சியிருந்த பாலியல் வாழ்வையும் கூடப் பறித்து, குற்றங்களாக வரிசைப் படுத்திய மேலாதிக்கத்தை, 'மேலானவற்றை', பாலியல் பாங்கில் கிண்டலுக்கு உட்படுத்தும் சமூக- உளவியல் செயல்பாட்டின் அப்பட்டமான வெளிப்பாடாகும்.

தனி உடைமை உறவுகளும், உணர்வுகளும், அவற்றுக்கான ஒழுங்குகளும் விதிகளும் அரிதாக இருந்த ஒரு கால கட்டத்தில் இருந்திருக்க முடியாத பாலியல் ஒழுங்கு - முறை எல்லாம், படிப் படியாக ஓரப்பகுதி மக்கள் சாதி முறைக்குள், அதன் வழியே தனி உடைமை உறவுகளுக்குள் செரிக்கப்பட்ட காலங்களில், நூதன மாகத் தோன்றியிருக்கக் கூடிய பாலியல் தணிக்கை முறைகள் அம்மக்களுக்கு சிரிப்பாக வேடிக்கையாகப் பட்டிருக்கலாம். இவற் றின் பதிவுகளை அவர்கள் பகிர்ந்து கொண்ட பாலியல் பகடிக் கதைகளில் திருகலாகக் காணமுடிகிறது.

மேலாதிக்க இந்துப் பண்பாட்டில், கோவிலில் முன்னோர்கள் இன்று 'அசிங்கம்' என்று முகஞ் சுளிக்கும் படியான சிலைகளை வைத்ததற்கும் தொன்று தொட்டு வருகிற நாட்டுப்புறப் பாலியல் பக டிக் கதைகளின் 'அசிங்கத்'திற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. இந்துப் பண்பாட்டில் பெண்ணை, அவள் பாலியலை ஆண் எதிர் கொண்டு அவளைத் தனது ஆன்ம சக்தி விரிப்புக்குரிய யோக அப்பியாசப் பொருளாக உபாசனை செய்வது வலியுறுத்தப்பட் டது. பெண்ணின் பாலியல் ஆண் மனதில் 'கீழான' குறு குறுப்பை ஏற்படுத்தாதவாறு ஆண் விடுபட்டு உந்நதத்தை நோக்கி எழுவதற்காக ஒரு சடங்குப் பாங்காகக் கோவிலில் சிற்பங்கள் வைக்கப்பட்டன. தாந்திரீக வகைப்பட்ட பாலியல் யோகம் நினை வுறுத்தப்பட்டது. இவையெல்லாம் மேட்டுக்குடி ஆண், பொருள் இகந்த முறையில் (Metaphysical) ஈடேற்றம், விடுதலை பெறுவதற் காக அமைந்தன. இங்கே ஆணின் விடுதலை என்ற நோக்கு நிலையிலிருந்தே பெண்ணின் பாலியல் நோக்கப்படுவது தெரிகிறது. பெண்ணின் சதையிலிருந்து விடுபட்டு, ஆன்மீக விடுதலையை ஆண் எவ்வாறு பெறுவது என்ற சிக்கலே மையமாக உள்ளது.

ஆனால் நாட்டுப்புறப் பாலியல் பகடிக் கதைகளில் 'பாலியல்' என்பது வேறு திசையில் செயல்படுகிறது. இங்கே ஆண்களும் பெண்களும் அவரவர் குழுக்களாக அமர்ந்து சற்றும் மனசாட்சி உறுத்தாதப்படிக்கு, இயல்பாக பால் உறுப்புக்கள் உறவுகள் கோமாளித்தனங்கள், விளையாட்டுக்கள், தந்திரங்கள், பாலியல் சவால்கள், சாகசங்கள் மூடத்தனங்கள், விலக்கான சேர்க்கைகள் தடைகள் குறித்து நக்கல் செய்து சிரிக்கிறார்கள். உடைமையும் அதன் காரணமாகச் சவலையாகிப் போன மாந்த உளவியலும் பெருமளவிற்கு ஏற்படாத ஓரப்பகுதி மக்களிடம் இந்தச் சிரிப்பும் கும்மாளமும் வெகு இயல்பாகவும் தாராளமாகவும் காணப்படுகின் றன. பல காலத்துக்கு முன்பிருந்தே படிப்படியாக ஆணாதிக்கத்

படிப்பகம்

www.padippakam.com



தனி உடைமைப் பண்பாட்டு மதிப்பீடுகளால் தாக்கம் பெற்று இம் மக்கள் அவற்றை உட்செறித்தபோது, பாலியல் கூச்சங்களும் அழுக் கங்களும், குற்றவுணர்வும் குடியேறிவிட்டன. இவற்றை ரகசியமாக வும் கூட்டமாகவும் இருந்து தோண்டி எறிகின்ற புராதனமான உடைமையற்ற காலத்து வேட்கைதான் இவ்விதப் பாலியல் பகடி யாக, கேலியாக, [illegible] வெளிப்படுகின்றன. இது இன்பக் கொள்கையின் களியாட்டம் தொடர்பானது; தடைகளை மீறி, விலக்கி, அங்கீகரிக்கப்பட்ட - படாத எல்லைகளில் தாராளமயமாக் கும் பணியைச் செய்கிறது. மேலாதிக்கப் பண்பாட்டு சமூகத்தில் ஒழுங்கமைவை ( Regulation ) உண்டாக்க எப்போதுமே தடை, தணிக்கை முறைகளைக் கையாளுகிறது. ஆனால் ஓரப்பகுதியின் உடைமைகள் அதிகமற்ற பண்பாடானது நெகிழ்ச்சியும், விளை யாட்டும், களிப்பும் கலந்த முறைகளைக் கையாளும். ஆதிக்கப் பண்பாடு, குறிப்பாக ஆணை பாலியலை கட்டுப்படுத்தவும், புலனை அடக்கவும், பெண்ணை மறுக்கவும் சொல்லி, அதுவே ஆணின் விடுதலை; அதுவே அவனுக்குச் சக்தி - பவர் என்று கூறு கிறது. ஆனால் இங்குள்ள நாட்டுப்புறப் பாலியல் பகடிக் கதைகளில் பெண்ணை ஆண் சரிவரக் கட்டியாளச் சொல்லுகிறது. பெண் ணின் ஒழுக்கத்தோடு ஆணின் சரியான பாலியல் செயல்பாடு இணைக்கப்படுகிறது; பெண்ணை விடச் சொல்லவில்லை.

பத்தொன்பதாவது கதையை ஆட்பட்ட பண்பாட்டின் பார்வை யின்படி பார்க்கும் போது கி. ரா. மெய்ம்மறந்தோ அல்லது இது தான் இயல்பு என்ற மனநிலையிலோ வெளிப்படுத்திய ஒரு விசயத் தைப் பார்க்கலாம். மூலப் பிரதியில் இது எப்படி இருந்திருக் குமோ தெரியவில்லை. இக்கதையைப் பேச்சு நடையில் கூறிவரு கிற கி. ரா., பொன்னரசி என்ற உழைக்கும் சாதிப்பெண்ணைப் (சாதிப் பெயர்களைத் தவிர்க்கிறார் ) பற்றிக் குறிப்பிடும் போது எழுத்து நடைக்கு மாறி, “கிராமத்தில் ஒரு வழக்கம் இப்பவுங் கூட நிலவிவருகிறது. அடுத்த சாதிக்காரர்களோடு கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொள்ளமாட்டார்கள். என்றாலும் கூட முறைவைத்துக் கூப்பிட்டுக் கொள்வார்கள்” (பக்.78) என்று உள்ளே புகுந்து எழுதுகிறார். பெரிய முதலாளியை, உயர்சாதி ஆணை, உழைக்கும் சாதிப் பெண் ‘கொழுந்தன்’ என்றும், இவளை, அவன் ‘மதினி’ என்றும் முறைவைத்துக் கூப்பிடுகிறார் கள். இதில் உணர்த்தப்படுவது என்ன? உயர்சாதி, உழைக்கும் சாதிகளுக்கிடையில் மணம் நடக்காது; ஆனால் கொழுந்தன் மதனி என உறவுமுறை பாராட்டுவார்கள். கொழுந்தன், மதனி என்ற முறைப்பெயர்கள் பொதுவாகப் பாலியல் பாங்கில் பரிகாசம் பண்ணும் உரிமையை அனுமதிக்கின்றன. கூடவே பால் சேர்க் கையையும் மறைவாகச் சகித்துக் கொள்ளவும் அனுமதிக்கின்றன. மேல் - கீழ் சாதிகளுக்கிடையில் ஆண் - பெண் மணம் தடையாகி றது. ஆனால் மணத்துக்கு அப்பால் மேல்சாதி ஆண் உழைப்புச் சாதிப் பெண்ணுக் கிடையில் பாலுறவு தடையாகிறதில்லை. பாலி யல் குறிப்புணர்த்தும் முறை கொண்டாடப்படுவதால் இரண்டு வர்க்க

படிப்பகம்

www.padippakam.com



சாதிகளுக்கிடையிலான அடிப்படை மோதல் முரண்பாடு மேவப் பட்டு, மேலோட்டமான சமதளம் நிரவப்படுகிறதல்லவா? இதில் ஒரு விசயம் மௌனமாக்கப்பட்டுள்ளது. மேலே குறித்ததற்கு மாறாக, உயர் சாதிப் பெண் உழைப்புச்சாதி ஆண் ஆகியோருக் கிடையில் இப்படி சகஜமான, பாலியல் குறிப்புணர்த்தும் முறை கொண்டாடப்படுகிறதா என்பது பற்றிய மௌனம் நிலவுகிறது.

இந்த மௌனத்தின் பின்னால் சாதிப் பண்பாட்டின் கொடிய ரூபம் நிழலாடிக் கொண்டிருக்கிறது. ஒரு யுகப் பிரளயத்தின் கரு இங்கே இருக்கிறது.

மீண்டும் கட்டுரையின் தொடக்கத்தில் முன்வைத்த கருது கோளுக்கு வரலாம். கி. ரா. மூல நாட்டுப்புறக் கதைகளைக் கொண்டு, தம்முடைய கதைப் பிரதியை நிர்மாணித்து, அதனை இடம் பார்த்து மேலாதிக்கப் பண்பாட்டிற்குள் (இந்து - தமிழ் நுகர்வோர் பண்பாடு) அறிமுகம் செய்கிறபோது, மேலாதிக்கத்தின் பல்வேறு சொல்லாடல்களையே நியாயங்களாக முன் வைத்துள் ளார். இதன் காரணமாக, ஆட்பட்ட பண்பாட்டின் கூறுகள் பல வும் ஆதிக்கப் பண்பாட்டின் கபடமான ஏற்புக்குத் தயாரிக்கப் பட்டுள்ளன. இதன் விளைவாக மற்றொருவித மேலாதிக்கச் சொல் லாடலாக உருமாற்றம் பெறுகின்றன. ஆசிரியர் ஆங்காங்கே எழுத்துத் தமிழில் தந்துள்ள உபரிச் சொல்லாடல்களும் நடையி யல் பூச்சுகளும், சமாதானங்களும், நாவல் - புனைகதை வகை எடுத் துரைப்பும் இந்த உரு மாற்றத்திற்கு உதவி புரிந்துள்ளன. மக்கள் மொழியில் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும், அக்கறையும் கொண்ட கி. ரா. அம்மக்கள் மொழியை வேறு உத்தேசங்களுக்காக மொழி பெயர்க்காமல் பதிவு செய்வது கடமையாகும்.

**அடிக் குறிப்புகள்:**

1. Mikhail Bakhtin (1895- 1975), 'From the prehistory of novelistic discourse.' (Edr.) David Lodge, 'Modern Criticism And Theory- A Reader.' (London & NewYork: Longman, 1991) p. 137- 38.
2. Stuart H. Blackburn & A.K.Ramanujam, 'Another Harmony'. (Delhi OUP 1986) p. 8- 9.

---

## ஒரு முக்கிய திருத்தம்

சென்ற செப்டம்பர், '94 இதழில் வெளிவந்த "கவுச்சி ஆசை" என் னும் கதையை எழுதியவர் கரிகாலன் இல்லை. அவருடைய தம்பி

**இரத்தின. புகழேந்தி**

வாசகர்களிடம் மன்னிப்பு கோருகிறோம். **ஆசிரியர்.**

படிப்பகம்

www.padippakam.com

# தேவதைகள் விண்ணப்பிக்கலாம்

—கோபிகிருஷ்ணன்

இப்படி ஆகும் என்று நினைக்கவே இல்லை. ஏதோ படிப்படியாகவாவது முன்னேறிக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்த எனக்கு, ஒரு சாவ காச தினத்தன்று புரிந்தது நான் பெரும் கடனாளி ஆகி விட்டிருந்தேன் என்று.

அலுவலகத்தில் முதல் தேதி சம்பளத்தன்று கடன்களின் பிடுங்கல் போக, மீதி கைக்கு வந்தது நூறு ரூபாய்க்கும் குறைவாக இருந்தது. நான் இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். நண்பர்கள் ஓரளவு கடனுதவி செய்தாலும், இன்னும் ஒன்பது மாதங்களைப் பண நெருக்கடியிலிருந்து என்னைக் காத்துக் கொள்ள என் பங்குக்கு நான் ஏதாவது செய்தாக வேண்டும். பகுதி நேர வேலை பார்ப்பது ஒரு சிறு தீர்வாக அமையும் என்று தோன்றிற்று.

அலுவலக அறுவை நண்பர் ஒருவர் மூலம் ஒரு பகுதி நேர வேலை கிடைத்தது. நண்பர் பெரும் பணக்காரர். நாலரை லட்ச ரூபாய் கடன்காரர் என்றால் எவ்வளவு பெரிய செல்வந்தராக இருக்க வேண்டும்!

நண்பர் வாங்கிக் கொடுத்தது ஒரு ஜாப் டைப்பிங் நிலையத்தில் தட்டெழுத்தாளன் வேலை. அங்கு தொலைபேசியும் உண்டு. ஓர் அழைப்புக்கு ரூபாய் ஒன்று. மாலை ஆறரையிலிருந்து இரவு எட்டரைவரை வேலை. மாதம் ரூபாய் நானூறு சம்பளம்.

முதலாளி நல்ல நாள் பார்ப்பவர். புதன் கிழமையிலிருந்து வேலைக்கு வரச் சொன்னார். புதன் கிடைப்பது சிரமம்தானே? தவிர மயிர்நிறை பாபா படம் உள்ளேயும் பக்கவாட்டில் ஒரு பெரிய ஏழுமலையான் படமும் இருந்தன. பிடிக்காத சூழல் தான். ஆனாலும், பகவான்கள், மகானுபவர்கள் சூழலில் மாதம் நானூறு ரூபாய் கிடைப்பதென்றால் வேண்டாம் என்றா சொல்வார்கள்? போதாக்குறைக்கு வேலை வாங்கித் தந்த நண்பர் ஓர் ஆதிபராசக்தி அருள்வாக்கு பக்தர். சகல இழவுகளையும் சகித்துக் கொண்டு வேலையில் அமர்ந்து கொண்டேன். ஆப்ரகாம் கோவூரையும் நீட்சேயையும் நான் மறக்க வேண்டி வந்தது.

அழகான மாலைகள் தினமும் அந்தச் சிறு அறையில் விரயமாகும். என் இலக்கியப் படைப்பு, எழுத்து எல்லாவற்றையும் நான் மறக்க வேண்டும். மனம் மிகவும் சோர்ந்துதான் விட்டது. மாலை என்பதுதான் எவ்வளவு அற்புதமான பொழுது!

முதலாளி காசே குறியாக இருந்தார். காசு - குறி; குறி - காசு; முதலாளி - காசு; முதலா

படிப்பகம்

www.padippakam.com



ளியின் குறி?

அந்த அறையில் ஓர் இளம் பெண் முழு நேர வேலை பார்த்து வந்தாள். அவளுக்கு எண்ணூறு ரூபாய் சம்பளம். அழகான பெண். ரோஜா ஜாக் கெட்டெல்லாம் போட்டுக் கொண்டு பிரமாதமாக இருப் பாள். எப்பொழுதும் லைஃபாய் ப்ளஸ் புத்துணர்ச்சி. ப்ளஸ் டு வோ என்ன கண்ணராவி யையோ படித்துத் தொலைத்து விட்டு இங்கு வந்து வாழ்க் கையை வீணாக்கிக்கொண்டி ருந்தாள் போலும் என்று அவள் மேல் பச்சாதாபப் பட்டேன். அவள் பெயரை அறிந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு ஏனோ தோன்றவில்லை. நாற் பத்தொன்பது வயதில் இளசுகள் அவ்வளவாகக் கவருவதில்லை தானே? அந்தப் பெண் நன்றா கத்தான் வேலை செய்து கொண் டிருந்தாள் என்று தோன்றிற்று.

முதலாளியிடம் நான் ஒன் றும் பேசுவதில்லை. நான் உண்டு, என் குப்பைத் தொட் டித்தனமான வேலை உண்டு என்றிருந்தேன். ஒரு நாள் அதி சயமாக முதலாளி என்னைக் கூப்பிட்டார். அவருக்கு வயது 55 இருக்கலாம். முழு நேர வேலை பார்க்கும் பெண் மதியம் வேலை இல்லாத சமயத்தில் தூங்கிவிடுகிறாள் என்றார். எழுப்பினால் எழுந்து கொள் வாள், இதில் என்ன பெரும் பிரச்சினை என்று நினைத் தேன். சரிவரத் தொலைபேசிச் செய்தி எடுத்துக் கொள்வ தில்லை என்றார். அவளைப் பற்றி என்னிடம் ஏன் புகார் செய்கிறார் என்று புரியாத நிலையில் படியளக்கும் ஆண்ட வர் சொல்வதைத் தொழிலாளி கேட்க வேண்டும் என்பதால் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கடைசியில் அவர் விஷயத் துக்கு வந்தார். நல்ல அழகான பிராமணப் பெண், வயது பத் தொன்பதிலிருந்து இருபத்து இரண்டுக்குள், திருமணமாகா தவள் இருந்தால் சொல்லுங் கள் என்றார். நல்ல சூட்டிகை யாக இருக்க வேண்டும். குறிப் பாக லட்சுமிகரமாக இருக்க வேண்டும். ஆயிரம் தருவார். வயதான காலத்தில் கல்யாண ஆசையின் திரிபோ என்று நினைத்தேன். நான் தேடிப் பார்த்துச் சொல்கிறேன் என்று ஒப்புக் கொண்டேன். ஆனா லும் பாருங்கள், நான் லட்சு மியை நேரில் பார்த்ததில்லை.

நான் குடியிருக்கும் குறு அறையின் வீட்டுக்காரருக்கு ஓர் ஐதீகம். மாலை ஐந்தரையிலி ருந்து ஏழரை வரை எல்லாக் குடித்தனக்காரர்களின் வெளி விளக்குகளும் ஜக ஜோதியாக எரிய வேண்டும். முன் கதவு பாதி திறந்திருக்க வேண்டும். லட்சுமி வீட்டுக்கு வரும் நேரம். வீட்டுக்காரர் தினமும் லட்சுமி யைத் தரிசிப்பவர். அவரிடம் கேட்கலாம் என்றால் அவர் ஒரு கோபக்காரர். லட்சுமியைப் பார்த்த பக்தரோ - பக்தையோ எனக்குத் தகவல் தெரிவித்து உதவுமாறு கேட்டுக்கொள்கி றேன். என் முதலாளிக்கு ஒரு லட்சுமி அவசரமாகத் தேவைப் படுகிறாள். மேலும் எனக்கும் லட்சுமியைப் பார்க்க வேண்டும் என்ற சபலம் தட்டியிருக்கிறது. ஆனால் தேவதைகள் போய் தட்டச்சு செய்வார்களா என்ன?

படிப்பகம்

www.padippakam.com



# பட்டி சு. செங்குட்டுவன் கவிதைகள்

## 1. காலுக்குச் செருப்புமின்றி...

நிழலுக்கு ஒதுங்கினான் செந்திலு,
பதினாலு வயசிருக்கும்— பள்ளிக்கொடத்தில
நேற்று மத்தியானம்.

"வா, தம்பி!"

கூச்சப்பட்டு நுழைஞ்சான்.

"போகல?"

"ம்... கூம். போகுல... வந்துட்டேன்."

"ஏனாம்?"

"வந்துட்டேன்... ஒண்ணுமில்ல...
வயக்காட்டுக்கு ஓட்டுறேன்னு சொன்னேன்.
முடியாது. மேலக்காட்டுக்கு போகனுங்கிறாங்க."

"அங்க ஓட்டினா என்ன?"

"ஓட்டுனாத் தெரியும்...
சில கொல்லைல நெல்லு அறுத்தாச்சு.
பயிறு, உளுந்து காய்ப்புங்க...
கரும்புதான் அதிகம்... வெட்டாமலும் இருக்கு...
சின்ன ஒழுங்க... கொஞ்சம் எறங்கிட்டா
அவங் குடுக்கிற பாட்டு...
கண்ணுமுண்ணு தெரியாம அடிப்பானுங்க.
அந்தப் பக்கம் குடிக்கத் தண்ணியும் இருக்காது.
வயக்காட்டுல தண்ணியாச்சும் கெடைக்கும்.
மாடு பாத்துக்க பசங்களும் வருவாங்க."

"சொல்ல வேண்டியதுதான?"

"தெரியாதா?... பேரக்குட்டி எடுத்தவ்ளோட
கட்டிக்கப் போறவளுஞ் சேந்து அடிக்கிறாளுவ."

"சாப்டாச்சா?"

"சாணஞ்சவுதி அள்ளிப்புட்டு... சொன்னதுக்கே
அடிக்கிறாளுவ... எங்க சாப்ட. வந்துட்டேன்.
ஆனா அவுரு இருந்தா வுட்டுருக்க மாட்டாரு.
நேத்து அவுரு மவஞ் சின்னப் பய... என்ன

படிப்பகம்

www.padippakam.com



செருப்பால அடிப்பேன்னு சொல்லிட்டான்.
'டே... எஞ்செருப்பக் குடுத்து அவன வுட்டு
ஒன்ன அடிக்கச் சொல்வன்டா'ன்னாரு...
இப்ப அவுரு இல்ல. கொல்லைக்குப் பொயிட்டாரு."

"...எப்பிடி வூடு?"

"பணக்காரங்கதான்... ரெண்டு மோட்டரு.
பெரிய பய வாத்தியாரு ஆவப் போறானாம்."

"நீ ஏம்...?"

"அதாங்க... ரெண்டாவுது படிக்கிறப்போ
அப்பா மெட்ராசு கூட்டிப் போய்ட்டாரு பொழைக்க.
படிப்பு போச்சு."

"சம்பளம்?..."

"மாசம் பதனஞ்சுபடி நெல்லு. வருசம் ஆறு மூட்ட."

"இந்தா... போய் டீ சாப்டு."

"வேணாங்க. அம்மா இப்ப வந்துரும்."

## 2. அவர்கள்

தோழனே!
நம்மை வளர்ப்பதாய்ச் சொல்லும்
அந்த முதலாளிகள்
நம்மைப்பற்றி நம்மிடையே கூறினார்கள்,
உன் 'நான்' என் 'நான்'
இரண்டையும் உசுப்பியவாறு.

'இப்படியா பேசினான் 'இவன்'?'

பொங்கும் எரிச்சலோடு
மெல்லச் சிரித்து கை குலுக்கிக்கொண்டோம்.

கனவுகளோடு பறந்த 'நான்'களின் நாணை
இன்று அறுத்தெறிகிறோம்.

அவர்களின் அன்பு, சிலந்தியின் வலையழகு.

ஒன்றை அறிந்தோம் இப்போது:
என்றைக்கும் 'நான்' நிர்வாணப்படும்.
'நாம்' வெல்லும்.

படிப்பகம்

www.padippakam.com



## பாரிக்குப் பிறகு... ?

**விக்ரமாதித்யன்**

இவன்
இனக்குழு மக்கள் தலைவன்.

இப்படித்தான்
படரும் கொடிக்குத்
தன் தேர்விட்டுப் போவான்.

எனில்,
இவன் பெண்மக்கள் வாழ்வு?

இவனை
புரிந்துகொண்டதரல்தானே
இவ்வளவு பாடும்
ஔவைக்கும் கபிலர்க்கும்.

பெற்றபிள்ளைகள் மனசிலிருந்து
புறப்படும் கவிதைகள் யாருக்கு?

எந்த அதிகாரத்துக்கு
இவன் கட்டுப்பட்டான்?

பேரரசுக்கு
பெண் கொடுக்க மாட்டேனென்று
சாதித்துவிட்டான்.

தன்மானம், சுயமரியாதையெல்லாம்
இவனிடமிருந்து
படைகொண்டு வந்தாலும்
பயப்படுவானா?

பேரரசு பெரிதா?
இனக்குழு மக்கள் தலைமை பெரிதா?

இவன்
வழித்தோன்றல் நாங்கள்.

**( கோவைத் தமிழன் ஞானிக்கு )**

படிப்பகம்

www.padippakam.com

# அதிருத்ரம்

**நா. விச்வநாதன்**

வரகூர் சாஸ்திரிக்கு கனத்த சரீரம் என்று சொல்லிச் சிரிக்கறா எல்லாரும். கனமா இருப்பதிலே என்ன வேடிக்கை? ஆறேழு வருஷமா பாலக்கட்டையிலே உட்கார்ந்திருப்பதைப் பார்த்தா காவல் தெய்வம் மாதிரி இருக்காம். இன்னும் சிலபேர் எதையோ கேட்க தபஸ் பண்றார்டா என்றெல்லாம் கிண்டல் பண்றது காதில் விழாமல் இல்லை. எதை வேண்டி தபஸ்? வாலத்தையா? நாக்கைச் சுழட்டிப் பேசறதைத்தவிர வேறென்ன தொழில் இங்கே? எல்லாமே பழகிட்டுது. ஊர் முழுக்க விரோதம். வயசும் போச்சு. அரைப் பயித்தியம்னு பேரு வேறே.

வேதம் பொழப்புதான். சொன்னா எல்லார்க்கும் மூர்க்கமா கோபம். மடத்திலே உட்கார்ந்துண்டு சகல சௌபாக்யங்களும் சூழ இருக்கறவா வேணா சொல்லலாம், வேதம் நஸ்தி, வேதம் ஈஸ்வரன், வேதம் சர்வேஸ்வரன்னு. பொழப்புக்கு அதுதானே வசமான மொதல்? அய்யேயெஸ்களும் கவர்னர்களும் ஜனாதிபதிகளும் பெரிய தொழில் மொதலாளிகளும் கால்லே வந்து விழறா. கண்ணைசைப்பில் தங்கமா கொட்றா. வைரமாக் குவிக்கறா. அது ஒரு அரசாங்கம் மாதிரி. அவா வச்சதே சட்டம். அவா பேசினது தர்மம். யார் கேழ்க்க முடியும்?

''சரீர ஹிம்ஸை...ஸம்பத்து கொறச்சல்... ஸுகம்- ஸந்தோஷம் எல்லாமே கர்மபலன். விட்டுக் கொடுக்கற ம்ருதுவான ஸ்வபாவம். அஹங்கார மில்லாமலிருப்பதுதான் விநயம்''ன்னு அருளுரை சொல்றா. இதெல்லாம் ஆருக்குத் தெரியாது? பெரிய்ய தத்துவம் பாரு. முதல்லே அவா பேசறது என்ன பாஷைன்னு சொல்லட்டும். தமிழா, சமஸ்கிருதமா? என்ன நியாயமோ. வாயத் தொறந்தா அருளுரை. கைய அசைச்சா ஆசீர்வாதம். என்னய்யா கூத்து. இப்படியே சினிமாவிலே பண்றது மாதிரி விளம்பரம் பண்ணியே போனி பண்ணியாச்சு. ஜனங்க ஓடிப்போய் விழறாங்க. சந்நிதானத்தை வியாக்கியானம் பண்ணப்டாதாம். ஏன்னா அது அதுக்கு மேலேயாம். எலே, நாற்பது வருஷமா நானும் அதுக்குள்ளே உழன்றவன்தான். எது நிஜம், எது நாடகம்னு எனக்குத் தெரியும். நான் பயித்தியமாம். காலம் உங்களுக்கும் அவாளுக்கும் சேர்த்து பிச்சுண்டு ஓடறது. நடப்பப் பார்த்தா வெகு காலத்துக்கு ஓடும்னு தோணறது.

வேதத்த எப்படி வேணா வளச்சு அர்த்தம் சொல்லலாம். பலவானா இருக்கறவா இஷ்டத்துக்கு வளைக்கறா. பதினாலு வருஷம் திருப்புகலூர் பாடசாலையிலே புளிச்ச பழையதைச் சாப்பிட்டுட்டு படிச்ச படிப்பிலும், அம்பது வருஷ அனுபவத்திலும் புரிஞ்சுண்டது இதுதான்: நாலு வாழைக் கச்சல், கை துவரம் பருப்பு, காப்படி அரிசி, ரெண்டச்சு வெல்லம். கண்ட பலன் கர்மபலன்.

மூத்தவனுக்கு படிக்க ஆசைதான்; படிக்கவும் செய்தான். எல்லாத்திலேயும் பர்ஸ்ட். என்

படிப்பகம்

www.padippakam.com



அல்லாடலைப் பார்த்துட்டு ஹைஸ்கூல் வரை போதும்னு நிறுத்திட்டான். பரீட்சை குடுக்கலே. முடியலே. மூவாயிரம் வருஷமா நீங்களே படிப்பை குத்தகை எடுத்துண்டா எப்படின்னு ஒரு கோஷ்டி வரிஞ்சு கட்டிண்டு வந்தது. போங்கடா, உங்களுக்கு இனிமே படிப்பு கெடையாதுன்னு கதவச் சாத்திட்டா. ஞானத்தத் தடுக்கற தேசம் உருப்பட்டதாக சரித்திரம் இல்லே. யாரிட்ட முறையிடறது. ஆக மூடியாச்சு. சாட்டைய சொடுக்கியாச்சு. ஆனா அடி என்னவோ இந்த தர்பைக் கட்டு சாஸ்திரி, சிவராஜக்குருக்கள், அழுக்குப் பூணூலை மாட்டிண்டு அஞ்சுக்கும் பத்துக்கும் அலையற சுயம்பாகம் மணி, எங்கே பொணம் விழும்னு காத்திண்டிருக்கிற சவுண்டி பிராமணன் சுப்புராமன் உடம்பிலேன்னா பளீர்பளீர்னு விழறது. சதை பிச்சுக்கறது. மூத்தவன் சீதாராம விலாசிலே சரக்கு மாஸ்டராச் சேர்ந்தான். சின்னவன் டிராமா சினிமான்னு அப்பவே அலைவான். இப்ப மெட்றாஸிலே என்னவோ சின்ன சினிமா வேலைன்னு கேழ்வி. கடைசிலவன் கொஞ்சம் முன்கோபி. ஊரைவிட்டுப் போய் நாலு வருஷமாச்சு. அட்ரஸ் இல்லே. அப்புறம் சகதர்மினி வாலாம்பாள். புருஷன் கிட்ட என்ன தர்மம் இருக்கு; கூட இருந்து காப்பாத்தன்னு நெனச்சாளோ என்னவோ. முழுக் கதயச் சொன்னா ரசக் கொறவு. அக்ரகாரத்தவிட்டு தள்ளியிருக்கும்படியா ஆயிட்டுது. நியாயத்தச் சொல்றதுக்கு உரத்த கொரல் வேணும். எங்கிட்ட ஏது?

சேது, என்னடா பெரிய மனுஷன் நீ. வேஷம் போட்ற தாயோழி. விசேஷ நாட்கள்ளே பாரு. தழயத் தழய பஞ்சகச்சம். பட்டு உத்ரீயம், தாமிரச் சொம்பு, பட்டை பட்டையா விபூதி. ரெண்டு மாசத்துக் கொருதடவ காஞ்சீபுரத்துக்குப் போயி ஆசீர்வாதம் கொள்முதல்.

ஊரையே தன்னுதுன்னு கொண்டாடற அகங்காரம். 'எது ஒஸ்தியோ அதெல்லாம் என்னுது. சிறப்பா இருக்கற சகலமும் என்னுது. எல்லாம் என்னுது. ஏதாவது சொற்பம் சிந்தினா அது உங்களது. நான் மொதல் - நான் முன்னால்.'

“லே... ராமய்யா, துணி தோய்க்க இன்னிக்குத்தான் நாள் பார்த்தியா? பிராமணாளுக்கு இன்னிக்கு ஸ்ரவனம். ஒனக்கு என்ன புரியும். பூணூல் போட்டுக்கப் போறோம், ஆவணி யாவட்டம்.”

“அதுக்கு...?

அப்பாவியாய்த்தான் கேட்டுட்டான் ராமய்யா.

சேது முகம் சிவக்க “வந்திருக்கோம்லே” என்று பாய, “புதுக் கயிறு மாட்டிக்கப்போறீங்களா?” என்று கேழ்க்க,

“அடி செருப்பாலே. வாய்க் கொழுப்பு ஜாஸ்தியாயிட்டுது.”

“கோவிச்சுக்காதீங்க. வளக்கமா குளிக்கற இடம் தானேன்னு வந்தேனுங்க... நீங்க பூணூல் மாட்டிக்குங்க. ஒங்களுக்கு வேலயா வெட்டியா... பொளுதும் போவனும்லே.”

“யார் கேழ்க்கறது இவாளை?

படிப்பகம்

www.padippakam.com



சர்க்காரே இவா பக்கமாத்தான் நிக்கறது" என்று முணுமுணுத்துக் கொண்டே ராமய்யா புழங்கிய படித்துறையை தண்ணீர் விட்டுக் கழுவிவிடறான் சீனுவாசன். இதுக்கு என்ன சாஸ்திரம்னு தெரிலே.

"என்ன பண்ணி என்ன. நம்ம அசைக்க முடியுமா? சென்ரல் கவர்மெண்ட் சீப் செக்ரட்ரி நம்ம வெங்காச்சம் புள்ள சந்திரமௌலிதான். ஜனாதிபதியோட அட்வைசர் நம்ம மூக்கொழுகி ராமானுஜம். சீப்-ஜஸ்டிஸ் நம்ம நருசிம்ஹாச்சாரிதான். ஆடிட்டர் ஜென்ரல் கிடையாத்த மங்கலம் கேதாரத்தோட மருமான் சங்கரன். அட்வகேட் ஜென்ரல் நம்ம நாணாச்சு. ரிசர்வ் பாங்க் கவர்னர் ரங்கராஜன். எல்லா சீப்பும் நம்மளவாதான். நம்மளக் கேழ்க்காம எதுவும் நடக்காது. ஏன் இப்ப பத்திரிகையிலே கதை கட்டுரை காவ்யம்னு வெளுத்து வாங்கறானே ராஜூ, அவன் ஆருன்னு நெனச்சே. சீரங்கத்து சிங்கமய்யங்கார் பேரன்யா," என்று சேது கடகடவெனச் சிரிக்கிறான். "சரி சொல்லுங்கோ." வாத்தியார் அவசரப்படறார். "சீயாழி வேற போகனும்." நாலு எடம் போனாத்தானே ஏதோ அவருக்கும் பை நெறயும்...

காமோ கார்ஷீத் மன்யோ
கார்ஷீத் நமோ நமஹ:
கமோ கார்ஷீத் மன்யோ
கார்ஷீத் நமோன் நமஹ:

நூறு தப்ளை சேர்ந்து கத்தறது மாதிரி என்னடா கூச்சல். மந்திரத்திற்கே தீட்டு பட்டுடும். 'காமத்தைக் கொடுத்தான். காமத்தை அனுமதிச்சான். அவனுக்கு நமஸ்காரம்...' வில்லாய் வளச்சு அர்த்தம் சொல்லிப் பார்த்தா, இவனுகளுக்கு அதுவும் சேதுவுக்கு பொருத்தமா இருக்கும்.

சேது ஏழு வருஷமா என் பொண்டாட்டிய அபகரிச்சு வச்சுண்டிருக்கான். நூத்தம்பது வேலி நெலம். ஆள் அம்பு அதிகாரம் கொடுத்த தைரியம். இவளுக்கு எங்கே புத்தி போச்சு. அத்தனை பெரிய மனுஷன் கையப் புடிச்சு இழுக்கறப்ப மாட்டேன்னா சொல்ல முடியும். வாலம் சுபாவத்திலே பயந்தாங்குளி. "டாய் சேது"ன்னு கத்திண்டே கடசிலவன் அரிவாளைத் தூக்கிண்டு பாஞ்சு போனவன சக்கயா அடிச்சான்கள் மாபாவிங்க. குத்துயிராக் கெடந்தவன வேடிக்கை பார்த்துது ஊரே. பாப்பானைத் திட்ற திகமக - கக - சுக - காராளெல்லாம் சேதுவுக்கு 'சப்போர்ட். இவனுகளை நம்பித்தான் சுயமரியாதையே ஜீவிச்சுண்டிருக்காம். காசுள்ள பார்ப்பான் பூணூலத் தோச்சு போடுவான்கள். தரித்திரப் பார்ப்பான் பூணூல அறுப்பான்கள் தைரியசாலி மாதிரி ரெண்டு தரப்பும் போலி பம்மாத்து. இந்த இரண்டுபேர் இடுக்கிலும் மாட்டிண்டு சத்தியம் மூச்சு திணறிச் செத்துண்டிருக்கு. ஜாதிய ஒழிக்கறான்களாம். அதான் ஈரேழு லோகங்களுக்குள்ளும் பரவவிட்டு கெட்டியா வேர் பிடிக்க வச்சாச்சே. ஜெயிக்க முடியுமோ. ஜெயிக்கவே முடியாத ஜாதிடா. தண்ணீரிலே நடக்கத் தெரியும். தரையிலே நீஞ்சத் தெரியும். ஆகாசத்திலே உட்கார்ந்திருக்

படிப்பகம்

www.padippakam.com



கத் தெரியும். மண்டை முழுக்க விஷம். சதா கண் வழியா, காது வழியா, வாய் வழியா, இன்னும் சகல வழிகள்ளேருந்தும் பீச்சி யடிச்சிண்டிருக்கே. மூச்சு திணறிச் செத்துண்டுதாலே இருக்கீங்க. எங்களை மாதிரி ஏழைப் பட்டவாளை ஏமாத்த அட்டைக் கத்திய வச்சுண்டு ஓடிப்பிடிச்சு விளயாடறீங்க. மண்டை நிறைய விஷத்தச் கேகரிச்சுக்க முடியும்னா பாருங்க...ஜெயிக்கலாம்

ரங்கநாதபுரம் போயிருந்தப்ப ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தாள் வாலம். சேதுவுக்கு ஊருக்கு ஊர் பங்களா. முன்னைவிட இன்னும் பூரிப்பு - சிவப்பு. இப்பவும் மாத்து கொறயல. குத்த மனசு இல்லே. வெக்கம், கூச்சம் ஏதும் மொகத்திலே தென்படலே. நகை நட்டுன்னு ஏகமா பளிச்சிடறது. வேதம் படிச்ச சாஸ்திரிக்கு அழகான பொண்டாட்டி கூடாது தான். அப்ப நியாயம் தெரியல. பாவம் என்ன பண்ணுவ. தினம் வாழக்காய் கூட்டு- சாதம்- தேங்காத் துவையல். ஒரு சினிமா, டிராமா வேடிக்கை உண்டா? சட்னு முகத்த இழுத்துக்கறா. ஏழுநாள் தாடி புடிக்குமோ. நீர் காவியேறிய பஞ்சகச்சம் புடிக்குமோ. வெத்திலைக் காவியேறிய வாயும் கட்டுக் குடுமியும் புடிக்குமோ. புடிக்காமயா மூணு பெத்தே? புரியலே வாலம். என்ன பிரமாதமா அபிராமி அந்தாதி சொல்லுவே. மூஞ்சி கூட அந்த அபிராமி அம்பாள் மாதிரி சிவந்துடுமே சந்நதம் வந்த மாதிரி....

"சொல்லுங்கோ வாய்விட்டு. வருஷத்துக் கொருதடவ பண்ற கர்மா. சிரத்தயா சொல்லுங்கோ."

"அந்தர்தத் ருது பிரஹோ ராத்ரைச்ச ஸந்த்திபி அர்த்மா ... ... ... சொல்லுங்கோ. கொஞ்சம் சிரமமா இருக்கும். யன்மே மாதா ப்ரலு........"

"நீங்களே சொல்லிட்டு காரியத்த ஆச்சுன்னு பண்ணுங்கோ. பஞ்ச கச்சத்த அவுத்தெறிஞ்சுட்டு ஆபீசுக்கு ஓடனும். பிழப்பப் பாக்கனும். சாயங்காலம் பார்ட்டி வேற. வளர்த்தாதேள். ஏதோ இந்த மட்டும் பித்ரு காரியங்கள விடாம செஞ்சிண்டிருக்கோமே. அதுவே பெரிசு. நாழியாச்சி. நீங்க வேற தட்சிணையை உத்தேசித்து மந்திரத்தை நீட்றேள். தாத்தாகா ரூவா, அப்பா எட்டணா, நான் முப்பது தரேன். வந்தவுடனே காபி, திருப்தியா சாப்பாடு, வெத்திலை சீவல். அதக் கணக்கிலே சேர்க்கலே. போறாதுங்கறேளே. சாஸ்திரம் படிச்சவா இப்படிப் புடுங்கினா லோக க்ஷேமம் எங்கே வரும்"?

கில்லாடி ஜாதிடா இது. எங்க போனாலும் ஜெயிக்கற ஜாதி. இடத்துக்குத் தக்கபடி வேஷத்தசட்னுமாத்திக்கறஜாதி. யுகயுகமா பழக்கி வச்சுண்ட வித்த. ரகசியம். சூட்சமம். ராஜா வலுவாயிண்டுவரானா. எங்கே தன் செல்வாக்கு சரிஞ்சிடுமோன்னு திட்டம் போட்டுருவான். தர்மத்த காவந்து பண்ண யுத்தம் பண்ணுங்கடான்னு நாள் குறிச்சிக் கொடுத்து ராஜாக்களை மோதவிட்டு ரத்த ஆறு ஓடவச்சிடுவான். க்ஷத்திரியன் அத்தோட காலி. பின்னாலே இருக்கற வர்ணம் ஆடு

படிப்பகம்

www.padippakam.com



மாடுன்னு செல்வங்களைப்பெருக் கிண்டு வசதியா ஆயிண்டு வரது மாதிரி தெரியறதா. 'பண்ணுங் கடா யாகம். லோகத்துக்கு சீக்கி ரமே ஒரு கேடு சம்பவிக்கப்போ கிறது. தப்பிக்கனும்னா சொன் னதைச் செய்யுங்கோ'ன்னு கூப்பாடு போட்டு ஊர் ஊராக் குழிவெட்டி அக்னி வளர்க்க ஆரப்பிச்சுடுவான் ஆடு - மாடு களை மந்தை மந்தையாய் பலி போட்டு அக்னியேஸ்வாஹா... இந்திரன் திருப்தி யடையட்டும். அக்னியேஸ்வாஹா, வாயுதேவன் திருப்தியடையட்டும். போட்டுப் பொசுக்கு. நெத்திவேர்வை சிந் தச் சிந்த உழைச்சு உண்டுபண் ணிய தான்யங்களைக் குண்டத் திலே போட்டு எரி. உழைக்கற ஜனங்களையும் கீழே மல்லாத் திவிடு. அப்புறம் சுகத்துக்கென்ன கொறச்சல். இப்ப வேற மாதிரி, வேற ரூபத்தில... அதே சூழ்ச்சி, சூட்சமம், தந்திரம்.

லட்சம் வருஷமானாலும் முடியுமோ ஜெயிக்க? ஆருக்கு வரும் இந்த ஜாலம்? இங்லீஷ் காரன் ஆட்சியா. உடனே பைபிளை கரைச்சுக் குடிச்சுட்டு, அவன்களுக்கே புதிய வியாக்யா னம் சொல்லி, வாயப் பிளக்க வச்சுடுவன்கள். அப்புறம் உத் யோகம், பணம், பவிசு. துலுக் கன் ஆட்சியா. ப்ளேட் மாறும். ஓடிப்போய் ஈஷிண்டு, ஒரு அம் பது அறுபது உர்து வார்த்தைக ளைக் கத்துண்டு, அசல் துலுக் கன் கெட்டான் போங்க. என் னங்கடா வசிய மந்திரம் வச்சி ருக்கீங்க....

தலய வலிக்கறது மாதிரி இருக்கு. ரொம்ப யோசிச்சா மண்டய பிளக்கறது. இந்த மாதி ரியானா தவிட்டு ஒத்தடம் கொடுப்பா வாலம். கொஞ்சமா இதம்? வாலம்...

சேது நூறு கணபாடிகளை வச்சுண்டு மகா ருத்ர ஜபம் பண்றானாம் போலகத்திலே. இளையவா பிரசன்னமாயிருக்கா. ஆயிரத்தி ஒரு பிராமணாளுக்கு சாப்பாடு. எழுநூத்தம்பது ரூபா சம்பாவன சால்வை. ஒரு ஜோடி பத்தாறு. வெள்ளி டாலர். பாவம் வித்த தெரிஞ்ச மனுஷன். கிர கக் கோளாறு பாலக்கட்டையில ஒக்காந்துண்டு புலம்பும்படியா ஆயிட்டுது.

அலுக்கலே. கிழித்துக் கொண்டு போகும் நீரை தீவ்ர மாப் பார்ப்பது அலுக்கலே. பாலக்கட்டை சுகம். தவம் மாதி ரிதான் இருக்கு. கீழே இதமான வேகத்தோடு ஓட்டம். வால ஆட் டிடுண்டு ஏகமா மீன் பொடிசு கள். சின்னவன் யாரோ சினி மாக்காரிய கல்யாணம் பண் ணிண்டதா நாகசாமி சொன் னான். ஏன்டா அப்பனுக்குத் தெரிவிச்சுருக்கபடாதா. ரெண்டு அட்சதயத் தூவிட்டு வந்திருப் பேனே. "...நிவோ நவோ பவதி ஜாயமானோன்."

ரெண்டு பக்கமும் பசேல்னு வயல். சேற்றில் அளைந்து ஒரே சீராக நாத்து விட்டிண்டிருக்கா பொண்டுகள். கலங்கல்லே ஏதா வது கெடைக்குமான்னு ஆகா சத்திலே நாலு கழுகுகள். உள் ளங் கைய மட்டும் அவசர அவ சரமா அலம்பிண்டு வரப்பில் உட்கார்ந்து பழையத பிழிஞ்சு சாப்பிடும் ஒருவன். பசி... பசி ஒரு வரம்தான; ஓர் அழகு தான். கணுக்கால் தெரிய புட வையை சுருட்டிவிட்டுண்டு புரு

படிப்பகம்

www.padippakam.com



ஷன் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவனோட பெண்டாட்டி. அட வாலமா...? ம் ம்... வாலம் இன்னும் அழகு, இன்னும் சிவப்பு. அவளுக்கு சுடுண்டா!

"லே ஐயிருக்கு பளமும் பன்னும் வாங்கியாடா. பசி மாதிரி இருக்கு. பாவம் எப்படி இருந்த மனுஷன் எப்படி ஆயிட்டாரு. அய்யருமாருங்க பட்னி கெடக்கக் கூடாதுடா."

பாவிகளே இந்த அனுதாபம்தான்டா உங்களுக்கு எமன். என்னிக்கு இத விடப் போறீங்க. பிராமணன் பட்னி கெடந்தா என்ன உலகமா மூழ்கிடப் போறது. இப்படி பொய்ய நன்னா ஊனி வச்சாச்சு. துளியூண்டு குச்சிய வச்சுண்டு ஆனைக் கூட்டத்தயே பயமுறுத்தி வச்சாச்சு. நீங்களாவது கத்திய எடுக்கறதாவது. யுகம் பூரா இப்படியே கிடந்து சாகுங்க...

"வரகூர் சாஸ்திரிளே. சித்த அவசரமா தெக்குத் தெருவுக்கு வரனும். நான்தான் யக்ஞ ராமன். சித்த வாங்கோ."

"ம்...ம்......"

"அவசியம் வரனும். சுத்து வட்டார உபாத்தியாயரெல்லாம் கலவை போயிட்டாள். ஸ்ரீமடம் நாலு நாள் கேம்ப்..."

"ராமா... எல்லாருக்கும் தந்தி குடுத்தாச்சு. சாஸ்திரிகளை கையோட அழைச்சுண்டு வரச் சொல்லிட்டா......"

ஏன் இப்படி படபடக்கிறான்கள்?

"நெஞ்சு வலின்னு ஒரு நிமிஷம் மாரப் புடிச்சுண்டு துடிச்சார். வண்டி கட்டிண்டு வர ஓடினேன். ஒரு மிடறு தண்ணி இறங்கறதுக்குள்ளே பிராணன் போயிட்டுது.

"ஆரு?..."

"சேது. சேது சங்கர சர்மா."

"போங்க, வரேன்."

ஜெலத்தில் துள்ளிக்கொண்டிருந்த மீன்களை சற்று நேரம் வேடிக்கை பார்த்தார்.

'வாலம் அழுவாளோ.' ●


## 'முன்றில்' இலக்கிய மலர்

நகுலன், நீல. பத்மநாபன், தி. க. சி, தமிழவன், நாகார்ச்சுனன், ஜெயந்தன், கோணங்கி, எஸ். ராமகிருஷ்ணன், ரவிக்குமார், அ. மார்க்ஸ், சுரேஷ்குமார், இந்திரஜித், ஞானக்கூத்தன், கலாப்ரியா, ப.கிருஷ்ணசாமி, எம். டி. எம். கண்ணன், நீலமணி, பன்னீர்செல்வம், டாக்டர் கி. நாச்சிமுத்து, எஸ். வி. ராஜதுரை, வ. கீதா, இந்திரன், சாரு நிவேதிதா, யூமா. வாசுகி, கோபிகிருஷ்ணன், எஸ். தீனதயாளன், Dr. ருத்ரன், பெருமாள் முருகன், மற்றும் பலரின் படைப்புகளுடன் டிசம்பர், 1994இல் வெளிவருகிறது. விவரங்களுககு:

**முன்றில்,**

சாந்தி காம்ப்ளக்ஸ், இரண்டாம் மாடி

26, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600017.


படிப்பகம்

www.padippakam.com

# பிராமணர்கள்

இந்த பிராமணர் பிரமணரல்லாதார் பிரச்சினை ஓயாது போலிருக்கிறது. இது குறித்து ஒரு நேர்மையான சிந்தனை யாருக்கும் தோன்றவில்லை. முதலில் பிராமணர்களுக்கு தாய்மொழி சமஸ்கிருதமல்ல. தமிழை சற்று அன்னியமாகக் கருதுவது அறியாமையே. தமிழ்நாட்டு பிராமணர் பெரும்பாலோர் தம்மை ஆரிய வம்சத்தினர் என்று இன்னும் கருதிக் கொண்டிருப்பது உண்மையே. பூர்வ குடிமக்கள் குழுக்களோடு ஒப்பிடும் போது ஆரியர்கள் நாகரிகமற்றவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இடம் மாறிச் செல்லும் ஓர் இணையற்ற திறமையினால் மட்டுமே முக்கியத்துவம் பெற்றார்கள். பெரு நகரங்களின் பண்பாடுகளைத் தாக்கி சின்னா பின்னப் படுத்துவதில் ஈடு இணையற்றவர்களாவே இருந்தனர். தங்களுக்கு ஒத்துவரும் பண்பாட்டுக் கூறுகள் தென்பட்டால் அவற்றைத் தங்களுடையதாகக் கொண்டார்கள். ஆரியர்களின் தாக்குதல்களுக்கு எந்த நாகரிகமும் தப்பியதே இல்லை.

வேதங்களின் பொருள் பல இடங்களில் விளங்காததற்குக் காரணம் மொழி, இடம் மாற்றமே. வேதங்கள் வேறுவேறு இடங்களிலிருந்து வேறுவேறு காலங்களில் வேறுவேறு குழுக்களால் சொல்லப்பட்டவையே. இடம் பெயர்ந்து கொண்டே இருந்த காரணத்தால் வேதங்களின் தொகுப்பே முரண்பாடுகள் கொண்டதாக இருக்கின்றன. பைபிளின் பழைய ஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது வேதத்தின் வரலாற்று மதிப்பு சொற்பமே. பல்வேறு பைபிள் நிகழ்ச்சிகள் உறுதி செய்யப்பட்டுவிட்டன.

இன்றைய பிராமணர்கள் வேதத்தை தம்முடைய ஆசார நூலாகக் கொண்டாடுவதில் அறியாமையே நிறைந்திருக்கிறது. வேதம் படித்தல் என்பது மனப்பாடம் செய்தல் என்பதே. பிராமணர்களில் ஒரு சதவீதத்தினர்கூட வேதத்தை பூர்ணமாக அறிந்தவர்களல்ல. பிற நாகரிகத்தின் சிறந்த கூறுகளை தனதாக்கிக் கொள்ளும் ஆரியப் பண்பை பிராமணர்கள் மேற் கொண்டதால் ஆரியத்தை தமதாக்கிக் கொள்கிறார்கள். உடலுழைப்பை நம்பாத பிராமண சாதி நுண்கலைகளையும் அறிவியலையும் ஸ்வீகரித்துக் கொண்டதுகூட நிர்பந்தம் காரணமாகவே. எந்த இடத்தில் எந்த வழியில் எப்படி வெல்வது என்பதை நன்றாகவே அறிந்தனர். அரசர்களுக்குப் பக்கத்தில் நிற்கும் அருகதையையும் அடைந்தனர். பிராமணர்களின் வெற்றிக்கான காரணங்களை அறிந்து கொள்ளாமல் திட்டித் தீர்ப்பது தீர்வாகாது. அறிவியல், கலை, சங்கீதம் போன்றவை எல்லோருக்குமானதுதான். தொழிலடிப்படை சமூகம் தகர்ந்த இக்காலத்தில் பிராமணரல்லாதோர் அவற்றையும் வென்றெடுக்க வேண்டும். பிராமணர்களுக்கே என்றிருந்த சங்கீதத்தை சித்தூரார், மதுரை சோமு போன்றவர்களால் கைப்பற்ற முடிந்தது. இலக்கிய உலகத்தை பிராமணர்களிடமிருந்து புதுமைப்பித்தனும் கு. அழகிரிசாமியும் மீட்க முடிந்தது. சட்டத் துறையிலும்

படிப்பகம்

www.padippakam.com



பிராமணரை பிராமணரல்லாதோர் வெற்றி கொள்ள முடிந்திருக்கிறது. ஆனால் ஆட்சியதிகாரத்தை முழுமையாக ஏன் பிராமணரல்லாதார் கைப்பற்ற முடியவில்லை என்பதை யோசித்தல் அவசியம். எந்த ஆட்சியிலும் பிராமணர் பங்கு பிரதானமாக இருந்திருக்கிறது திராவிடர் ஆட்சி உட்பட. பெரியாரின் வரலாற்றில் ராஜாஜியின் பங்கு, பிராமணரல்லதார் முதல் முதலாக சென்னை மாகாண ஆட்சியைக் கைப்பற்றிய போது பெரியாரின் நம்புதலின் பேரில் சேதுரத்ன ஐயர் என்பவர் சூத்திரர் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்ததெல்லாம் ஆராயத் தக்கது.

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் பிராமணஜாதி மேன்மைகளும் சிறுமைகளும் கொண்ட முரண்பாடுகள் பெருகியுள்ள ஜாதியாகவே இருந்திருக்கிறது. பால்ய விவாகம், சதி போன்ற சமூகக் கொடுமைகளை நடைமுறைப் படுத்திய பிராமணர்கள்தான் பிற்காலத்தில் அவற்வை ஒழிக்க முழுமுச்சாக இறங்கினர். மகாத்மா காந்தியை வர்ணாசிரம தர்மத்திற்கு எதிரானவர் என்று சில பிராமணர்கள் எதிர்த்த போது, காந்தி பிற்போக்கானவர் என்று அறிவித்து, ஐரோப்பிய சோசலிச சிந்தனைகளை அதற்கு மாற்றாக இந்த மண்ணில் விதைத்தவர்களும் பிராமணர்களே. பிராமண கம்யூனிஸட் ராமமூர்த்தி பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டதும் சீர்த்திருத்த சிந்தனை கொண்ட திருச்சி T.S.S ராஜனை எதிர்த்து நின்ற வருணாசிரமக் கட்சிகாரரான ஜகநாதாச்சாரியாரை தேர்தலில் பெரியார் ஆதரித்ததும் நினைவு கூரத் தக்கது. சேரன் மகாதேவி குருகுலத்தில் பிரச்சினை ஏற்பட்டபோது, ஒரு தாழ்த்தப்பட்டவரை சமையல்காரராகப் போட்டுவிட்டால் பிரச்சினை தீரும் என்ற யோசனை வைக்கப்பட்டபோது கடுமையாக எதிர்த்தவர்கள் பிராமணரல்லாத நீதிக்கட்சியினரே.

கிருபானந்தவாரியார் கம்பராமாயணம் சொன்னால் பிராமணர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அனந்தராம தீட்சிதர் வால்மீகி ராமாயணம் சொன்னால் புரியாவிட்டாலும் உற்சாகமாகச் சென்ற பிராமணர்களை நிறைய பார்த்திருக்கிறேன். காரணம் போலியான ஒரு உயர்வு மனப்பான்மையே. இப்படிப் பலர் தமிழுக்கு விநோதமாக இருந்தாலும், உ. வே. சா. போன்ற பேரறிஞர்கள் தமிழுக்காகவே வாழ்ந்து, அப் பழியைத் தீர்த்திருக்கிறார்கள். உயர்வையே நாடிய இந்த பிராமணப் போக்கு தமிழில் பல மறுமலர்ச்சிகளை உருவாக்கியிருக்கிறது என்பதையும் நாம் மறுக்கக் கூடாது.

எதிரெதிர் வியூகங்கங்கள் வளர்ச்சிக்கு உதவாது. இன்னும் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதாக பிராமணர்களும், ஏதோ அதள பாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதாக பிராமணரல்லாதாரும் நினைப்பது பேதமையே. கடைசியாக ஒன்று: ஆர். எஸ். எஸ்., வி. ஹெச். பி. போன்ற மதவெறி ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதோர் எண்ணிக்கையே அதிகம்.

இதைப்போன்ற சர்ச்சைகள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவாது.

**அரசூர் நா. விச்வநாதன்**

படிப்பகம்

www.padippakam.com



# அஸ்ரப் முஸ்தபா கவிதைகள்

## 1. வதை

மல்லி சாயிபுக்கு
ஒரு கையும் ஒரு காலும் இழுத்துக்கொண்டன.
எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள்
அநியாய வட்டிக்கு
ஆண்டவனின் அபராதம் என்று.
உச்சிவெயில் தளர்ந்து போனது.
சாயிபு உள்ளறைக்கு அமுதுகொண்டார்.
அழகு மைனர் செயின்
சுருக்குக் கயிறாய் ஆனது.
கிழக்கு - மேற்குத் தென்னந் தோப்புகள்
அனாதைகள் ஆயின.
வேக்காட்டில் பெற்ற பத்திரங்கள்
குளிர்ந்துபோய்
கவனிப்பாரற்றுக் கிடந்தன மூலையில்.
கூடவே கணக்கு நோட்டுகளும்.
ஏனோ, இப்பொழுதெல்லாம்
சாயிபு மனைவி முக்காடு நழுவாமல்
பார்த்துக்கொள்கிறாள்.
வடக்குத் தெரு ஊமையனுக்கு
அடக்கமாட்டாமல் சிரிப்பு வருகிறது.

## 2. குடி

பாண்டி நிழலாய் நீண்டு கிடந்தான்,
தேவையில்லாத குப்பையாய்
சுத்த நாடி அடங்கிப்போய்.
உயிராய் நேசித்தது உயிரைக் கொண்டது.
உறவுகளின் முட்டி முட்டி மோதும் அழுகையை
அவன் கேட்க நியாயமில்லை.
அவன் ஆத்மா

படிப்பகம்

www.padippakam.com



இப்போது ஒதுங்கி நின்று உருகும்,
இதுதானா தான் வாழ்ந்த வாழ்க்கைக்கு
வெளிச்சமென்று.

மனைவி, குழந்தைகளின் பூமுகம் கண்டு
மேலும் உருகும்.

'நான் நானாக இருக்க ஏன் மறந்தேன்?
நான் கொடுத்த வாக்குகள் எல்லாம்
'குடி'யாய்ப் போச்சே.'

அவன் ஆத்மா
அதன் காலம் கரையும் வரை
இப்படித்தான் சித்ரவதை படும்.

## ஞானக் கூத்து

### ஷாராஜ்

வருமோவெனில் வராதுதான் நேற்று மீண்டும்.
'இறந்த' காலத்தில் புதைக்கப்பட்ட அது
எழுந்து வர சாத்தியமில்லை.
நினைவுப் பக்கத்தைப் புரட்டிப் பார்ப்பதில்
அச்சுக் கோர்ப்பு நேர்த்தியற்று இருக்கும்.
சிரித்து, பேசி, மகிழ்ந்து,
அழுது, அணைத்து, விலகியென
ஒழுங்கின்மையாய்ப் புரளும் ஞாபகங்கள்.
ஏக்கத்தோடு எத்தனை தடவை முயன்றும்
ஒன்று- தவறுதலாகிக் குறி தவறும்;
மற்றது- தலையிருக்க வாலாடும்.
சிலசமயம் நேற்றின் கழிவே உரமாகி
'இன்று' வளரும் செழிப்பாக.
மாறாக, கூடுதல் உரமே நஞ்சாகி
அழிக்கிற அபாயமும் உண்டு.
எனும்போது,
கட்டைகளே கிடக்கும் கரியாகி
நேற்றின் அடையாளமாக.

படிப்பகம்

www.padippakam.com



என்ற கட்டுரைத் தொகுப்பைக் கொண்டு வந்தது. இந்தியாவின் ஏழு முக்கிய நதிகள் குறித்து காலேல்கர் எழுதிய இனிய கட்டுரைகள் அவை. நதிகளை அவர் வெகுவாக நேசித்தார். அவற்றை தங்கை என்றும், தோழி என்றும், தாய் என்றும் பலவாறு உருவகித்து வியந்து போற்றி எழுதிய கட்டுரைகள். படித்து ரசிக்கப் பட வேண்டியவை.

பிற்காலத்தில், காலேல்கர் எழுதிய 'இந்திய நதிகள்' என்ற பெரிய புத்தகம் சாகித்ய அகடாமி வெளியீடாக வந்தது. காகா சாகேப்—காந்திஜியின் நண்பர்— நதிகளை எவ்வளவு நேசித்தார், இந்திய நதிகளை எப்படி அறிமுகம் செய்து கொண்டு அவற்றின் வியப்பராய் எவ்வாறு பலப்பல ஆறுகளையும் ரசித்து மகிழ்ந்தார் என்பதை இப்புத்தகத்தின் மூலம் அறியலாம். இந்திய நதிகள் பற்றியும் அதிகம் தெரிந்து கொள்ளலாம்.

மற்றும் இந்தி நாடகங்களும், வேறு பல ஆசிரியர்களின் நாவல்களும் கதைகளும் தமிழில் 'இறக்குமதி' செய்யப்பட்டன.

சரத் சந்திரர் நாவல்களுக்கு நிறைய வாசகர்கள் இருந்தார்கள். அ. கி. ஜயராமன், நாவல் பின் நாவலாக மொழி பெயர்த்துப் பல பதிப்பகங்கள் மூலமும் பிரசுரம் செய்தார். பிறகு அவரே 'ஜோதி நிலையம்' அமைத்து புத்தகங்களை வெளியிட்டார். சரத் சந்திரரின் நாவல்கள், குறுநாவல்கள், கதைகள் என்று அநேக புத்தகங்கள் வெளிவந்தன.

1940 களில் ஆர். சண்முகசுந்தரம் சரத் பாபுவின் நாவல்களை (ஜயராமன் மொழி பெயர்த்து வெளியிட்டவைகளையும் கூட) தமிழாக்கிப் பிரசுரம் செய்தார். சரத் சந்திரர் நாவல்களுக்கு மிகுந்த 'கிராக்கி' இருந்ததாலும், சண்முகசுந்தரத்துக்கு பணத் தேவை மிகுதியாக இருந்ததாலும் ஒரே நாவலை வேறு வேறு பெயரில், வெவ்வேறு பதிப்பகங்கள் மூலம் பிரசுரிப்பதில் வியாபர வெற்றி கண்டார். அவ்வளவுக்கு சரத் சந்திரர் நாவல்கள் பேரில் தமிழ் வாசகர்களுக்கு ஒரு லயிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த ஈடுபாடு ப்ரேம் சந்த் நாவல்கள் மீது ஏற்பட்டதே இல்லை.

இதற்கு காரணம் உண்டு. இந்தியாவின் முற்போக்கு இலக்கியத்தின் தந்தை என்று மதிக்கப்பட்ட ப்ரேம் சந்தின் நாவல்கள் சமூகப் பிரச்னைகளை, வறண்ட தன்மையில் எடுத்துச் சொல்லின. உதாரணமாக 'நிர்மலா' நாவலின் ஆரம்ப அத்தியாயங்கள் கிராமப்புற உழைக்கும் மக்களின் சுகாதாரமற்ற சூழ்நிலையையும் அங்கு காலரா நோய் பரவியதையும் மக்கள் கஷ்டப்படுவதையும் விரிவாகக் கூறும். பின்பு கதைச்சுவை வரும் என்றாலும் கூட, சரத் சந்திரர் எடுத்தாளும் விஷயங்களின் கதா சுவாரஸ்யமும், உணர்ச்சிச் சித்தரிப்புகளும், உளப் போரட்டங்களும் ப்ரேம் சந்

படிப்பகம்

www.padippakam.com



தின் நாவல்களில் காணப்படா. கொள்கைப் பிடிப்பும், லட்சிய நோக்கும் அவர் நாவல்களில் உண்டு.

ப்ரேம் சந்த் சமூகத்தையும் நாட்டையும் அடிப்படையாகக் கொண்டு யதார்த்த நாவல்களை எழுதினார். சரத் சந்திரர் குடும்பத்தைக் களமாக்கி, தனிநபர்களை முக்கியப்படுத்தி — விசேஷமாக, மனஉறுதியும் நிர்வாகத் திறமையும், செயலாக்கமும் கொண்ட, மனவலு இல்லாத ஆண்களுக்கு கூட நம்பிக்கையும் வாழ்க்கையில் பிடிப்பும் உண்டாக்கக் கூடிய சக்தியும் உடைய பெண் பாத்திரங்களை உயிரோடு உலவ விட்டிருக்கிறார் அவரது நாவல்களில். 'அசட்டு அபிமான உருக்கம்' ('சென்டிமென்டல் நான்சென்ஸ்') என்று சில விமர்சகர்கள் குறை கூறுகிற உணர்வுக் கிளர்ச்சிகளைத் திறமையாகக் கையாண்டு, படிப்பவர்களின் உள்ளத்தில் ஒரு நெகிழ்வு ஏற்படுத்தும் தன்மையில் கதைகளைப் படைத்திருக்கிறார் சரத் சந்திரர்.

இந்த விதத்தில் நாவல்கள் எழுதுகிற ஆசிரியர்களின் எழுத்துக்களையே தமிழ் வாசகர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். ஓடும் காலத்தின் ஒவ்வொரு கட்டமும் இந்த உண்மையை அறிவுறுத்தியிருக்கிறது.

சரத் சந்திரருக்குப் பிறகு தமிழ் வாசகர்களின் 'உள்ளத்தை கொள்ளை கொண்டவர்' வி. ஸ. காண்டேகர் என்ற மராட்டிய ஆசிரியர்.

இவருடைய 'வெறும் கோயில்' என்ற நாவல்தான் தமிழில் முதன் முதலில் அறிமுகமாயிற்று. பத்திரிகைகளில் அவரது கதைகள் அதற்குமுன் வந்திருந்தன எனினும், புத்தகமாக முதலில் வாசகர்களுக்கு கிடைத்தது 'வெறும் கோயில்'. கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழி பெயர்ப்பு,1940 களின் ஆரம்பத்தில் வந்தது.

அதன் 'இளமை, இனிமை, புதுமை' மற்றும் தனித்தன்மை காரணமாகத் தமிழ் நாட்டின் ரசிகர்களைக் கிறங்கடித்தது அது. அடுத்து 'சுகம் எங்கே?', 'எரி நட்சத்திரம்' என்று ஒன்றன்பின் ஒன்றாக வந்தது.

தொடர்ந்து வந்தது 'கருகிய மொட்டு'. காண்டேகரின் வெற்றியைத் தமிழ் நாட்டில் உறுதிப்படுத்திய நாவல்.

காண்டேகர் மராட்டி மொழியின் 'ஆகச் சிறந்த' இலக்கியப் படைப்பாளி இல்லை; அவரைவிடத் தேர்ந்த எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நாவல்கள், கதைகள் தமிழில் அறிமுகம் செய்யப்படவில்லை என்று அந்நாட்களில் ஒரு குறை கூறல் பத்திரிகைகளில் பலமுறை பதிவு செய்யப்பட்டது. சில பெயர்களும் உச்சரிக்கப்பட்டன. ஆயினும் வி. ஸ. காண்டேகர் தமிழில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துவிட்டார். அதற்கும் காரணங்கள் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

நூல் விமர்சனம்

# திராவிட இயக்கமும் வேளாளரும்

—மா. அரங்கநாதன்

இந்நூல் திராவிட இயக்கத்திற்கும் வேளாளர் அல்லது சைவருக்குமான உறவை ஆராயப் புகுந்ததாகச் சொல்லப்படுகிறது. அதன் முடிபாக, அந்த இயக்கத்தோடு முழுமையான அளவில் தங்களை இணைத்துக் கொண்ட சைவர் அல்லது வேளாளர் எவருமிலர் என்ற ஆய்வைப் பதிவு செய்கிறது. உடனடியாகத் தோன்றுகிற கேள்வி எந்தப் பிரிவு மக்கள்தாம் தங்களை ஓர் இயக்கத்தோடு முழுமையாக இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது.

இந்நூலில் அடிக்கடி குறிப்பிடும் வ. உ. சி. அவர்கள் தம்மை முழுமையாக 'காங்கிரஸ்' இயக்கத்தோடு இணைத்துக் கொண்டிருந்ததில்லை. நாடார் பிரிவு மக்களும் அம்மாதிரியே. வன்னியர் யாரும் பாட்டாளி மக்கள் கட்சியோடு முழுக்க முழுக்க இணைந்து கொண்டவரல்லர். கட்டாயமாகச் சொல்லப்பட வேண்டிய இன்னொன்று தமிழக பிராமணர் ஆர். எஸ். எஸ். இயக்கத்தோடு முழுமையாகத் தங்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை. எனவே இப்படியொரு முடிவிற்கு வர நூலின் உதவி தேவையில்லை என்றாகி விடுகிறது.

வெள்ளைக்காரரர் போலவே இந்தியருக்கும் பதவிகள் தரப்பட வேண்டுமென்ற கொள்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிக் கொள்கையுடன் இன்று எந்த காங்கிரஸ்காரரர் இருக்கமுடியும்?

"ஆங்கிலேயர் விதித்த சட்ட வரம்புகட்குட்பட்டே நாம் வாழ வேண்டும்." —பாரதியார் — இந்தியா 6 - 2 - 1909

"ஆங்கில சாம்ராஜ்யத்தை விட்டு விலக வேண்டுமென்ற யோசனை எங்களுக்கில்லை." —சுதேசமித்திரன் — 26 -12 - 1916.

இவ்வாறு எழுதிய பாரதியைப் பலரும் கேள்விப்பட்டுக்கூட இருக்க மாட்டார்கள். இதுதான் காங்கிரஸ் அல்லது வேறு கட்சியின் கொள்கையாக இருந்திருந்தால், அந்த இயக்கத்தில் முழுமையாக தம்மை இணைத்துக் கொள்பவர் யாராக இருக்க முடியும்?

இந்நூல் 1927 முதல் 1944 வரையிலான காலகட்டத்துற்குரியது என ஆசிரியர் கூறுகிறார். மேற்படி உறவை ஆராயப் புகுமுன், சைவர் - வேளாளர் யார் என்று வரையறுக்க முனைந்து இவ்விரண்டு பெயர்களுமே சமூக அடையாளங்களைச் சுட்டுவதற்கு போதுமானவையல்ல என்றும் சொல்லிவிடுகிறார். (பக்கம்- 15) ஆனாலும் நூலின் பெயர் மட்டும் வேளாளர் என்றுதான் இருக்குமாம். இருக்கட்டும்.

வேளாளர் — முதலியார் — செட்டியார் முதலான சாதிகள் என்று ஆசிரியர் கூறும்போது (பக்கம்- 16) முதலியார் என்பது

படிப்பகம்

www.padippakam.com



வேளாளரின் பட்டங்களில் ஒன்று என்பதை மறந்துவிடுகிறார். தொண்டை மண்டல வேளாளர் முதலியார் எனவும், சோழ—பாண்டியப் பகுதி வேளாளர் ‘பிள்ளை’ எனவும் கொங்கு நாட்டுப் பகுதி சார்ந்த வேளாளர், வேளாளக் கவுண்டர் எனவும் பட்டங்களைச் சூட்டிக்கொள்கின்றனர். எனவே முதலியார் என்பது பட்டப் பெயர்தானே தவிர சாதிப் பெயரல்ல. சாதிப் பட்டியலிலும் அம்மாதிரிப் பெயரை அரசு வெளியிடுவதில்லை. மேலும் இப்பட்டங்களை எல்லாப் பிரிவு மக்களும் பயன்படுத்துவதுண்டு. நாடார், ஆதிதிராவிடர், தேவர், இடையர், வன்னியர் ஆகியோரும் பிள்ளை என்ற பட்டத்தைப் போட்டுக்கொள்வதுண்டு. ஒருவேளை ‘பிள்ளை’ என்ற பட்டமே மற்றப் பிரிவினரிடமிருந்து வேளாளருக்கு வந்திருக்கவும் கூடும். சென்னை நகரில் பலகாலமாக வாழ்ந்துவரும் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட சிலரும் அவ்வாறே செய்துள்ளனர் என்பது பலருக்கு செய்தியாகவிருக்கும். சட்டமன்றத் தலைவராகவிருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் ஆதிதிராவிடர் என்பது தெரிந்த விஷயம்.

இந்த நூலில் பலதடவை குறிப்பிடப்பட்டவரும், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தொடர்புடையவருமான திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் குலாலர் பிரிவைச் சார்ந்தவராவர். இவர் சைவர் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. வேளாளர் என்று இவரை இந்நூலாசிரியர் கருதுகிறாரா?

ஒன்று சொல்ல முடியும். இந்த குலாலர் என்னும் குயவர் பிரிவு சங்க காலத்தில் ‘வேள்கோவர்’ என்றிருந்ததாகும். உழவுத் தொழிலுக்கும் மருத நில வாழ்க்கைக்கும் வேண்டிய பாத்திரங்களை இவர்கள் தந்து உதவியராவர். (பார்க்க: புறநானூற்றின் கலஞ்செய் கோவே பாடல்.) மருத நில வாழ்க்கை சம்பந்தப்பட்டவர் அனைவருமே ஏதாவது ஒருவகையில் வேளாளர் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இது தனியான ஆய்வுக்குரியது.

கி.அ.பெ. விஸ்வநாதம், சொ. முருகப்பா, மணி. திருநாவுக்கரசு போன்ற பெரியோரையெல்லாம் பற்றிக் கூறும்போது, வாழ்க்கை வரலாற்றோடு அவர்தம் இனப்பிரிவு வகையையும் சொல்லியிருக்கும் நூலாசிரியர் திரு.ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட தடவை கூறியிருந்துங்கூட அவருடைய சாதி பற்றி கூறாது விடுகின்றார். இந்நூலின் தலைப்பிற்கும் ஆசிரியர் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கும் அது பாதகமாக இருக்குமோ என்று அவர் கருதியிருக்கலாம்.

நிலஞ் சார்ந்த வேளாளருக்கு எந்தவித உதவியையும் வேலையையும் செய்யக் கூடாதென்ற கட்டுமானத்துடன், எந்தக் காரணத்தாலோ மலை வாழ் மக்கள் இருந்தபோது மருத நில வேளாளர்கள் தங்கள் பிரிவைச் சார்ந்த சிலரையே மரமேறுதல், முடி வெட்டுதல், துணி துவைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஆக்க, அவ்வாறு அந்தத் தொழில்களைக் கையாண்ட மாந்தர் பின்னாளில் வேளாண் நாடார், வேளாண் வண்ணார்,

படிப்பகம்

www.padippakam.com



## வா. மு. கோமு

## முகத்துக்கு முகம்

பக்கம் பார்த்துப் போ.
பேசித் தீர்வதில்லை பிரச்சினை.
பேசியன கிடக்கட்டும்,
பேசுவன கிடக்கின்றன.
கொடு முதுகை!
தின்று வெடிக்காதே;
படித்து வெடி.
சிரித்த பின் அழு;
அழுத பின் சிரி.
ஈக்வல் பாய்ண்ட்;
தட்ஈஸ் லைஃப்.
அருகிலிருப்பன அத்துபடி எனில்
அடுத்த கிளை தாவு.
மனதினுள் இருக்கு ஏகாந்தம்.
தேடலை முடி.
யோசனை சரிதான்;
யோசித்துப் பார்.
யோசித்தனவற்றை விட்டுவிடேன்.
ஆக்ரோஷம் மிருட்சியினால்.
கவிதைகளில் ஆடைகளை அழி;
சுதந்திரத்தைப் போடு.
மக்கள் உன் பக்கமா?
நம் பக்கமா?
அவரவர் பக்கம்.
அது அது அது அது பாட்டுக்கு.
வழக்கத்தை மாற்று;
பழையன கழியும்.
May be......
குடைகளின் கீழ் நிழல்!
முகத்துக்கு முகம்
ஸ்மைல் ப்ளீஸ்.

படிப்பகம்

www.padippakam.com



## சில்லுகள்

ஐ. கென்னடி

ஆண்டாண்டு காலமாய்
அமைதியாய் நடுவீட்டினுள் நின்றிருந்த
அழகுக் கண்ணாடி.

நாலு பக்கங்களும்
சித்திரப்பூ வேலைப்பாடுகளுடன் கூடிய-
பாட்டன் பாட்டி காலத்திலிருந்தே
பாதுகாத்து வந்த
பளபளப்பான கண்ணாடி.

அம்மா அப்பா ஜோடியாய்
முகம் பார்த்து மகிழ்ந்த கண்ணாடி.

அண்ணன், தங்கை, அக்கா என
எல்லோரும் முகம் பார்த்து
நேசித்திருந்த நிலைக்கண்ணாடி...

இன்று
அண்ணி துடைத்தபோது,
தரையில் விழுந்து
சில்லாய்ச் சிதறிப் போனது.

கண்ணாடி நின்றிருந்த இடம்
வெறுமனே காட்சியளிக்கிறது.

இப்போது—
கொல்லைப் பக்கம் அள்ளிக் கொட்டிச்
சிதறிப்போன சில்லுகளில்
தனித்தனியே தெரியும்
எங்கள் குடும்ப முகங்கள்...

## கொதி காற்று

மகுடேசுவரன்

கதிர் பிடித்த கழனியின்
புல்லடர்ந்த வரப்பில் நிற்க வைத்து
என்னைக் குருவி விரட்டப் பணியுங்கள்.
ஓடிஓடிச் செய்வேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஆட்டு மந்தை காட்டி
குளிப்பாட்டி வரச்சொல்லுங்கள்.
குட்டியொன்றைத் தோள் போட்டு
ஓடைக்கு ஓட்டிப் போவேன்.

எருமைகளடைக்கும்
கொட்டடிக்குக் கூட்டிப் போங்கள்.
கன்றுகளின் சம்மதத்தோடு
உங்கள் பாற்குடங்களை நிரப்பிவிட்டு
சாணியள்ளக் கூடையெடுப்பேன்.

அந்த மர நிழலில் கிடக்கும் கட்டைகளை
விறகுக்குடைக்க ஏவுங்கள்.
பிளந்து கட்டிடுவேன்.

சோடி எருதுகளும் கலப்பையும்
கொடுங்கள்.
அறுவடைக்குச் சொல்லியனுப்புவேன்.

அதை விடுத்தென்னை
கொதிகாற்றலையும் ஆலைக்கு
கூலிக்கு ஓடச் சொல்கிறீர்களே.

## பா. ராஜாராம்

சில மனிதர்கள்
மரங்களைப் போலவே இருக்கிறார்கள்.
சில மரங்கள்
மனிதர்களைப் போலவே இருக்கின்றன.
சில மனிதர்கள் இருக்கின்றன
எனவும்
சில மரங்கள் இருக்கிறார்கள்
எனவும்
இருக்கும்படிதான்
இருந்தும் விடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

தொடர் 16

# நினைவுத் தடங்கள்

## வல்லிக்கண்ணன்

இந்தி மொழி நாவல்களின் அறிமுகம் எனக்கு 1930 களில் ஆரம்பமாயிற்று.

பிரேம் சந்தின் இந்தி நாவல்கள், மற்றும் இந்தியின் வழியாக தமிழாக்கம் பெற்ற சரத் சந்திர சாட்டர்ஜி, பங்கிம் சந்திரர், தாரா சங்கர் பானர்ஜி, ரவீந்திரநாத் தாகூர் முதலியவர்களின் வங்க நாவல்களும், 1930 களிலும் அதற்குப் பின்னரும் தமிழ் நாட்டில் அதிகம் பிரசுரம் பெற்றன.

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டம் ஒரு தீவிர நிலையை அடைந்திருந்த காலகட்டம் அது. இந்திய ஒருமைப்பாட்டுக்காக ராஷ்ட்ர பாஷா - தேசீய மொழி - என்று இந்தி மொழி ஆர்வத்தோடு பரப்பப்பட்ட காலம்.

தமிழ் நாட்டின் நெடுகிலும் பலர் உற்சாகமாக இந்தி கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். 'ஆனந்த விகடன்' அப்போது புத்தக வடிவில் வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு வாரப் பத்திரிகை. இந்தி மொழிப் பயிற்சிப் பாடங்களை பல பக்கங்கள் வெளியிட்டு வந்தது.

ப்ரேம் சந்த் எழுதிய 'சேவாசதனம்' என்ற இந்தி நாவலை 'விகடன்' தொடர் கதையாக வெளியிட்டது. தமிழ் மொழி பெயர்ப்பாகத்தான்.

'கலை மகள்' மாதப் பத்திரிகை ப்ரேம் சந்தின் 'நிர்மலா' நாவலை தமிழ் தொடர் கதையாக்கிற்று. பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்', 'விஷவிருட்சம்', 'துர்கேச நந்தினி', 'தேவி சௌது ராணி' ஆகியவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு புத்தகங்களாக வெளிவந்து, நல்ல வரவேற்பைப் பெற்றன.

அதே சமயம் 'மணிக்கொடி' சிறுகதைப் பத்திரிகைக்காரர்கள் தொடங்கிய நவயுக பிரசுராலயம் சரத் சந்திரர் நாவல்களின் மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து பிரசுரிக்க முனைந்தது.

முதலில், 'அசலா அல்லது கிருகதாகம்' என்ற பெரிய நாவல் வந்தது. ரசிகர்கள் அதைப் பெரிதும் விரும்பினர். அடுத்து 'தேவதாஸ்' வெளியாயிற்று. இதற்கு ஏகப்பட்ட வாசகர்கள் கிட்டினர். (அசலா என்பது கிருகதாகம் நாவலின் கதாநாயகியின் பெயர்.)

நவயுகப் பிரசுராலயம், காகா காலேல்கரின் 'சப்த நதிகள்',

படிப்பகம்

www.padippakam.com



வேளாண் செட்டி, வேளாண் அம்பட்டர் போன்ற பெயர்களைப் பெற்றதுண்டு. இந்த நிலை கொங்கு நாட்டில் ஏற்பட்டதென்றா லும், தமிழகத்தில் பலவிடங்களில் அது போன்ற நிலையுண்டு என்பதை மறுப்பதற்கில்லை. (பார்க்க கே. கே. பிள்ளையின் தென் னிந்திய வரலாறு.) எனவே மருத நில மாந்தர் யாவருமே மண் சார்ந்த வேளாளர் என்று சொல்ல முடியும்.

சுயமரியாதை இயக்கத்துடன் ஒவ்வோர் இனத்துக்குள்ள மோதல் என்பது தனி ஆய்வுக்குரியது என்றும் ஆசிரியர் தெரிவிக் கிறார். சுயமரியாதை இயக்கமென்ன, எல்லா இயக்கங்களோடும் எல்லா பிரிவினருக்கும் மோதல் உண்டு.

சைவர்கள் ஒன்றுகூடி 1939 ஆம் ஆண்டு நடத்திய மாநாட் டில் தமிழ்த் திருமணம் வரையறுக்கப்பட்டது என்கிறார். (பக்கம் 56) அப்போது மறைமலையடிகளுக்கு வயது 56. வ. உ. சி. அவர்களோ காலமாகிவிட்டார். மறைமலையடிகளுக்கு எப்போது திருமணம் நடந்தது, எப்படி நடந்தது என்பது அடிகளாலேயே கூறப்பட்டி ருக்கிறது. (ஆசிரியர் மறைமலை நூல் நிலையத்தில் பணி புரிந்த வரெனத் தெரிகிறது.) தமிழ்த் திருமணங்கள் இவ்வாறுதான் வரை யறுக்கப்பட்டனவா?

அதற்கு முன்னர் அவை அறியப்படாதனவா? குருக்கள் ஒருவர் ஊரில் இருப்பதும், அவருக்கு ஊர் மக்கள் வீடொன்று அளித்துப் போற்றுவதும், அந்தக் குருக்கள் அல்லது தேசிகர் காலங்காலமாக நடத்தி வைத்தது எல்லாம் வேறு என்ன திருமணம்?

“ஓ வைவஸ்துவே — இந்தப் பெண் என்னைக் கொல்லாதிருப் பாளாக.”

மேற்படி ‘மங்கள’கரமான மந்திரத்தைச் சொல்லித்தான் சைவர்கள் முன்பு கல்யாணம் நடத்தி வைத்தார்களா? ஆசிரியர் வ. உ. சி. பற்றியும் நூல் எழுதியுள்ளார். அவரது திருமணம் எவ் வாறு எந்தச் சடங்கு மூலம் நடந்தேறியது என்பதை அறிந்திருக்க வேண்டும். அப்படி இதுவரை அறிந்திருக்க வில்லையென்றாலும் ஒன்றும் குடிமுழுகி விடவில்லை. இப்போது கூட விசாரித்து அறிந்து கொள்ள முடியும். வ. உ. சி., மாடசாமி போன்ற வர லாற்று மனிதர்களோடு பழகியவர்களின் பிள்ளைகளும் உறவின ரும் இன்னும் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் வயதாகி விட் டதே என்று கவலைப்பட வேண்டியதில்லை. வயதானாலும் மந்த மடையாதவர் உண்டு. சொல்லப்போனால் இந்நூலாசிரியர் தமது நூல்களில் தெரிவித்திருக்கும் நன்றிக்குரிய பலரும் அப்படியொன் றும் ‘குமரர்’ அல்லர். நன்கு பயன்படுத்தி பல விஷயங்களைச் சேகரிக்க முடியும். ‘சுதேசமித்திரன்’ திருப்பர் தந்த அந்தக் கால செய்தி அறிக்கை மாத்திரமே வரலாற்று உண்மைக்கு அடி கோலி விடாது.

சோழர் காலத்திலிருந்த வேளாளர் - பார்ப்பனர் இடையே நிலவி வந்த கூட்டு, பிரித்தானிய காலனியாட்சியின் போது

படிப்பகம்

www.padippakam.com



தளர்ந்து, இரு சக்திகளின் பங்காளிச் சண்டையே ஆரிய-திராவிடப் போராட்டம் என்ற வாதம் பற்றி மேலோட்டமாகக் கூறிவிட்டு (பக்கம் 14) இந்நூற்றாண்டுச் சங்கதிகளுக்கு வந்துவிடுவதுதான் இந் நூலின் குழப்பத்திற்கு காரணம் என்று சொல்லலாம். மேற்படி வாதம் மட்டுமல்ல, சோழர் காலத்தில் நிலவி வந்ததாகச் சொல் லப்படும் கூட்டு பற்றி விவரித்திருக்க வேண்டும். பார்ப்பனரும் வேளாளரும் கூட்டு ஏற்படுத்திக்கொண்டிருந்தால், யாருக்கெதிராக என்பது மிக முக்கியமான கேள்வி. அதன் அடிப்படைக்கே இந் நூலாசிரியர் செல்லவில்லை. இவர் எடுத்துக் கொண்ட விஷயத் திற்கும் மேற்படி 'கூட்டு' சம்பந்தமான வாதத்திற்குமுள்ள தொடர்பு மிக முக்கியமானதென்று சொல்லத் தேவையில்லை. தாழ்த்தப்பட்ட பிரிவினரிடமிருந்து தங்களைத் தனியாகக் காட்டிக் கொள்வதற்காகவா இந்தக் கூட்டு ஏற்பட்டது என்பது கேள்வி. தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களுக்கெதிராக, ஏதாவது புரட்சி செய் தார்களா என்றும் கேள்வி எழும். சொல்லப்போனால் வேளாளரும் சூத்ரர்தாம்- பார்ப்பனரைப் பொறுத்தவரை. வேளாளரும் மற்றப் பிரிவினரும் பார்ப்பனரை 'மிலேச்சர்' என்று கருதியிருப்பர் என் பதையும் கருத்திற் கொள்ளாமலிருக்க முடியாது. இந்து மதம் என்ற குடையின் கீழ் அனைவரும் ஒன்றாகவிருந்தனர் என்பதும் அப்படித்தான். அப்படி எந்த மதமும் நூறாண்டுகளுக்கு முன்னர் இங்கே தெரிந்திருந்ததாகக் கூறுவதற்கில்லை. ஆதிசங்கர் எல்லா ரையும் ஒன்றிணைத்து விட்டதாகச் சொல்வது கதைதான். அவர் இணைத்தார் எனில் எல்லாருமா சேர்ந்துவிட்டார்கள்? அக்பர்கூட 'தீன் இலாகி' என்றொரு மதத்தை ஏற்படுத்தினார். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. சங்கரரின் சண்மதம் பார்ப்ப னரை ஓரளவுக்கு ஒன்று படுத்தியது என்று சொல்ல முடியுமே தவிர தென்னாட்டுச் சித்தாந்தத்திற்கும் அவருக்கும் என்ன இருக்க முடியும்— என்ன சம்பந்தம் இருந்திருக்கிறது?

யூஜின் இர்ஷிக் எழுதிய நூல்தான் தொ. மு. சி. ரகுநாதன், தமிழவனின் வாதத்திற்கு ஆதி காரணம் என்று சொல்லும் போது அந்த நூல் பற்றிய ஆய்வு தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இந் நூலாசிரியரின் முடிவு சரியா - தவறா என்ற பிரச்னை கூட அல்ல இப்போது. அந்த முடிவிற்கு வரும் அவர் வழிதான் முக்கியமான ஒன்றாகக் கருதப்படும். அந்தக் காலத்து அரசர் இந்த இரண்டு பிரிவினருக்கும், அதாவது வேளாளர், பார்ப்பனர் இருவருக்கும் எதிராக இருந்திருந்தால் ஒரு வேளை இவர்கள் ஒன்று சேர வேண் டிய அவசியம் இருந்திருக்கும். உட்பகை எதுவும் கிடையாது. அதனால் கூட்டு இருந்ததென்றால், அதற்கு வேறு காரணம் அவசியம்.

தமிழ் நாட்டில் பக்தி இலக்கியமே வைதிக எதிர்ப்பு சக்திக ளில் ஒன்று என்பது மிகையல்ல. அவ்விலக்கியத்தில் எல்லாரும் பங்கு கொண்டனர். ஆண்டாள் கதை வடநாட்டில் மீரா கதையா னதும் காரைக்கால் அம்மையார் கதை கன்னட நாட்டில் வேறொரு

படிப்பகம்

www.padippakam.com



உருவில் தோன்றியதும் இலக்கிய வரலாறு. திருமுறைகள், திருவிளையாடற் புராணம் இவற்றிற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை அப்போதைய பார்ப்பனர்கள். (இப்போது அவ்விலக்கிய மாநாடுகள் நடந்தால், அவற்றில் எந்த ஒரு பார்ப்பனரையும் காண முடியாது என்பது வேறு விஷயம்.) தமிழின் புகழ் பாடும் இவ்வகை இலக்கியங்களை வரவேற்றாக வேண்டிய அவசியம் இருந்திருக்கிறது. பிரமதேயம், அகரம் முதலிய பெயர்களில் இருப்பிடங்களைத் தானமாகப் பெற்ற அவர்கள் நிரந்தரமான ஒரு நிலைக்கு வந்த போது, ஒரு வகை தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகியிருந்யினர். அதன் முக்கிய காரணம் மச்ச புராணம் போன்ற நூல்களிலும் அவற்றின் முன்னரேயுள்ள பிரம்மாணங்களிலும், நர்மதை நதிக்குத் தெற்கேயுள்ள பிராமணர் மூலம் சிராத்தம் போன்றவற்றைச் செய்யக் கூடாது, அவர்கள் பிராமணர் அல்லர் என்று சொல்லப்பட்டிருந்த பல விஷயங்களால்தான். பதினெண் புராணங்களின் காலம் ஏறக்குறைய கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை கூறுகிறார். அவ்வாறு கூறியிருப்பது ஒரு முக்கிய தகவல். பதினெண் புராணங்களில் ஒன்றான மச்ச புராணம் ஆந்திர வம்சத்தை குறிப்பிடுகிறது. காளிந்தர், புளிந்தர் போன்ற திரவிட மன்னர் ஆரியப் பெண்களை மணந்து கொண்ட விவரங்கள் மற்ற பிரம்மாணங்களிலிருந்து தெரியவரும். இவ்வாறு பிராமணர் இழிவு படுத்தப்பட்ட விஷயம் கல்வியறிவுள்ள சூத்தரர் என்று அவர்கள் எண்ணிக் கொண்ட தமிழக வேளாளருக்கே தெரிய வந்திருந்தது. யஜுர் வேதத்தில் கிருஷ்ண யஜுர் வேதம் திராவிட பிராமணருக்கும் சுக்ல யஜுர் வட நாட்டவருக்குமென பாகுபாடு வந்தது இதனால் இருக்க முடியும். எனவே துணை வேண்டி, வடவரை நம்ப முடியாத நிலையில் சூத்ரர்களாக தாங்கள் கருதினாலும் அவர்களில் நிலவுடைமைக்காரராகிய வேளாளரையும் அவர்தம் மொழியாகிய தமிழையும் போற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

''ஆரியம் நன்று தமிழ் தீதென உரைத்த ... ... ...செந்தமிழே தீர்க்க சுவேகா'' என்பது போன்ற பாடலும் அக்காலத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். மேற்படி பாடல் நக்கீர தேவ நாயனாரால் சொல்லப்பட்டது என்று கதையிருந்தாலும், தமிழுக்கு வட மொழி போன்ற அந்தஸ்தை தர, பார்ப்பனர் ஓர் உள்நோக்கத்தோடு ஒத்துழைத்தனர் என்று சொல்லலாம். இந்த உள்நோக்கத்தோடு கூடிய நடவடிக்கையை வேண்டுமானால் கூட்டு என்று ஏற்றுக் கொள்ள முடியும். பிரித்தானிய கால ஆதிக்கம் வரை இது தொடர்ந்தது. பின்னர் நடந்த விஷயம் தெரிந்ததே. அவர்கள் பயில ஆரம்பித்தது, இனி தமிழரின் உதவியோ தமிழின் உதவியோ தங்களுக்குத் தேவையிருக்காது என்ற நம்பிக்கையால்தான்.

மேற் கண்டவை திரு. யூஜின் இர்ஷிக் எழுதிய ஆய்வு நூலில் இல்லாதிருக்கலாம். ஆனால் திரு. வேங்கடாசலபதி எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு நெருங்கிய சம்பந்தமுடையவை.

படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்பு - மறைமுக எதிர்ப்பு - கூட்டு எல்லாவற்றையும் மீறித் தான் தமிழ் வாழ்ந்து கொண்டிருந்தது; வாழ்ந்து கொண்டிருக் கிறது. உலகில் ஒரு வேளை தமிழன் அழிந்து விட்டால் கூட, தமிழ் என்னும் பூர்வகால மொழி தனது சொற்கள் மூலம் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்று சொல்வது தாய்மொழிப் பற் றால் அல்ல.

இது ஒரு செய்தித் தொகுப்பு நூலாகவே அமைந்துவிட்டது வருந்தத் தக்கது. ஆசிரியருக்கு பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்புகள் அதிகம் இருந்திருக்கின்றன. செய்திகளே சிந் தனை வரலாறாக மாறிவிடாது. அதற்கு ஒருவரோ பலரோ தேவை.

கடுஞ்சைவர், நடுத்தர சைவர், சீர்திருத்த சைவர் என்று சைவர் களை இவர் பிரித்தாற் போல எல்லாப் பிரிவு மக்களையும் எல்லா இயக்கங்களில் பங்கு கொள்ளும் மாந்தரையும் பிரிக்கலாம். ஒரே குறிக்கோள் கொண்ட அன்பரிடையேகூட இப்பிரிவுகள் காலந் தோறும் கிடப்பது காட்சி.

''அரங்கின்றி வட்டாடல் முறையன்று,'' என்றெழுதிய ஓரன்ப ருக்கு ''அரங்கை வகுப்பவர் யார்?'' என்ற கேள்வியுடன் வ. உ. சி. அவர்கள் எழுதிய பதில் இன்றளவும் நம்மைப் பாதிப்படையச் செய் யும் அருமையான கட்டுரையாகத் திகழ்கிறது. அதை இந் நூலில் சேர்த்தமைக்கு இந் நூலாசிரியருக்கு நன்றி கூற வேண்டும்.

ஆனால் வ. உ. சி. அவர்களின் மேற்படி கேள்வியே இந் நூலா சிரியரைப் பார்த்துக் கேட்பது போலவும் தோன்றுகிறது.

நூல்: திராவிட இயக்கமும் வேளாளரும்
ஆசிரியர்: ஆ. இரா. வேங்கடாசலபதி
பக்கங்கள்: 128
விலை ரூ. 26.
வெளியீடு: சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2ஆம் சந்து, சென்னை - 600 002

படிப்பகம்

www.padippakam.com

தொடர்: 2

# நானும் நாடகமும்

ஜெயந்தன்

— அப்படி, நடிப்புதான் நாடகத்தின் ஜீன் (Gene) என்றாகி விடுகிறபோது, முழுக்க நடிப்பினாலேயே நிகழக்கூடிய Mime அல்லது Phantomime நிகழ்ச்கிகள் நாடகமாகி விடுமா?

—இல்லை. Mime அல்லது Phatomime நிகழ்ச்சிகள் அவைக ளின் அளவில் நிறைவான நிகழ்ச்சிகளாக அமைய முடியும் என் றாலும் அவை நாடகமல்ல. அவை Mime அல்லது Phantomime நிகழ்ச்சிகள் மட்டுமே.

— ஏன்?

— ஒவ்வொரு கலையோடும் ஏதாவதொரு 'இணைப்பு' வந்து சேர்ந்து கொள்கிறது. அந்த இணைப்பு இல்லாமல் அந்தக் கலை யால் தனியாக நீண்ட நேரம் அல்லது நீண்ட நாள் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. கலை கொடி என்றால் அந்த இணைப்பு கொம்பாக இருந்துவிடுகிறது. இங்கே இன்னொரு விஷயம் என்னவென்றால் இந்தக் கொடியோடு சேர்ந்து கொம்பும் செழுமையும் வளர்ச்சியும் பெறுவதுதான். இரண்டுமே ஒன்றையொன்று தழுவி புதிய பரிமா ணங்களும் பரிணாமமும் கொள்கின்றன.

— உதாரணமாக?

—உதாரணத்திற்கு இசைக் கலையை எடுத்துக் கொள்ளுங்கள். இசைக் கலையின் ஆதாரம், குரல் வளமும் செவிக்கினிமையும் தான். ஆனால் அது ராக ஆலாபனைகளோடு நின்று விடுவ தில்லை. நிற்கவும் முடியாது என்பது சாதாரணமாகவே தெரிகிறது. அது குரல் வளத்தோடும் சாகித்தியத்தோடும் கேட்பவனுக்கு ஏதை யாவது 'சொல்வதையும்' சேர்த்துக் கொள்கிறது.

நான் ஒரு தடவை ஒரு பட்டியல் பார்த்தேன். உலகத்தில் எந்தெந்த நாட்டு இசை எந்தெந்த விஷயத்தைப் பாடுபொருளாகக் கொண்டிருக்கிறது என்பது அதில் இருந்தது. இத்தாலி இசை 'காதலை'ப் பாடு பொருளாகக் கொண்டிருப்பதாக அதில் இருந் தது விசேஷமாக ஞாபகத்தில் இருக்கிறது. இங்கே நமது கர்நாடக சங்கீதம் பக்தியைப் பரப்புவதற்கென்றே பிறந்தது போல் இருப் பதை நீங்கள் அறிவீர்கள். பக்திக்கு அது இழைவதும் குழைவதும் போல மற்ற விஷயங்களுக்கு அது Flexible ஆக வருவதில்லை. ரொம்பவும் 'கஷ்டப்பட்டு' அமைத்த 'தாமரை பூத்த தடாகமடி' போன்ற ஒன்றிரண்டு பாடல்களைத்தவிர மற்ற பாடல்களில் இசை இசைந்து வருவதை நீங்கள் பார்க்க முடியாது.

இதோடு சம்பந்தப்பட்ட ஒரு சுவையான நிகழ்ச்சி கூட உண்டு. தமிழிசைக்காக கிளர்ச்சி எழுந்து அது ஒரு இயக்கமாக

படிப்பகம்

www.padippakam.com



உருவாகிக் கொண்டிருந்த நேரம். 'தமிழிசை' என்பதால் பெரியாரும் சேர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருந்தார். கர்நாடக இசையிலேயே தமிழ்ப் பாடல்கள் இயற்றப்பட்டன. எல்லாம் 'பக்தி'ப் பாடல்கள். அப்போதுதான்பெரியார் சொன்னார். 'அட, அவனாவது தெரியாத பாஷையில பாடிக்கிட்டு இருந்தான். இவன் தெரிஞ்ச பாஷையிலயே பாடி மேக்கொண்டும் பக்திய வளத்துடுவான் போல இருக்கு.'

இப்படி நீங்கள் எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும் அது ரசிகனோடு பேசுவதற்கு ஏதாவது ஒரு விஷயத்தைத் தேடிக் கொள்வதைப் பார்க்க முடியும்.

— சர்க்கஸ் கலை எதைப்பற்றிப் பேசுகிறது?

—சர்க்கஸ் கலையல்ல. அது சாகஸம். மரணத்தோடு சவால். ஒவ்வொரு அடுத்த கணமும் மரணத்தின் காலமாக இருக்கலாம் என்பது தெரிந்தும், மனிதன் அதைக் கடந்து செல்லும் வீர விளையாட்டு. அங்கே அவன் பேசுவது மரணத்தோடு. பார்க்க வந்திருப்பவரோடு பேச அவனுக்கு நேரமேது, நொடியேது?

— நல்லது ஒரு சுவாரஸ்யத்திற்காகக் கேட்டேன். சரி, கலைகளோடு இணைப்பு என்னும்போது நாடகக் கலையோடு சேர்ந்து கொள்ளும் இணைப்பு என்ன?

—இலக்கியம்.

— இலக்கியமா?

—ஆம். ஆனால் எழுதப்பட்டிருக்கிற, எழுதப்படுகிற எல்லா இலக்கியங்களும் அல்ல. இலக்கியங்கள் ஆக்கப்படுவதின் நோக்கங்கள் என்னவாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு, அதே சமயம் நடிப்புக் கலைக்கும், மேடைமொழிக்கும் ஈடு கொடுக்கிற இலக்கியம்.

— ம்... பாரதியாரின் 'குயில் பாட்டை' அப்படிப்பட்டதொரு இலக்கியமாகச் சொல்ல முடியுமா?

—நல்ல ஆள் நீங்கள். 'நடிப்புக் கலைக்கும் மேடை மொழிக்கும் ஈடு கொடுக்கிற' என்று நான் சொன்னால், நீங்கள் அந்த இரண்டிற்கும் ஒரு 'அடி' கூட வழிவிடாத ஒரு காவியத்தை எடுத்துக் கொண்டு வந்து கேட்கிறீர்கள்.

— அப்படியானால் 'குயில் பாட்டு' அவ்வளவு 'சுகமில்லாத' படைப்பு என்றா சொல்கிறீர்கள்?

—போச்சு. இப்படியொரு ஆபத்தும் இருக்கிறதா? நாடகமாக ஆக்க வசதி இல்லாத என்று சொன்னாலே அது 'சுகமில்லாத' இலக்கியமாக ஆகிவிடுமா என்ன? அப்போதும் ஒன்று அற்புதமான படைப்பாக இருக்க முடியும். நாம் நாடகக்காரர்கள் என்ற வகையில் நாடகம் செய்ய வாய்ப்பான இலக்கியப் படைப்புகளைத்

படிப்பகம்

www.padippakam.com



தேடும் போது நாடகம் பற்றிய சில கணக்குகளை மனதில் வைத்துக் கொள்கிறோம். அவ்வளவுதான். உங்கள் பையனின் உயரத்திற்கும் நிறத்திற்கும் தகுந்த மாதிரி ஒரு பெண் இல்லையென்றால் அவள் பெண்ணே இல்லையென்று அர்த்தமா என்ன? உங்கள் பையனைவிட இன்னும் உயரமான நிறமான இன்னொரு பையனுக்கு அவள் பொருத்தமாக இருந்துவிடலாம்.

— சாரி சார்.

—சரி. நீங்கள் தப்பாகக் குறிப்பட்டாலும் குயில் பாட்டைக் குறிப்பிட்டதற்காக உங்களுக்கு போனஸ் மார்க் உண்டு.

— எப்படி?

—பாரதியிலேயே, மையப்பகுதி அருமையான நாடகக் காட்சிகளை உள்ளடக்கிய 'பாஞ்சாலி சபதத்திற்கு' பக்கத்து காவியத்தை சொன்னீர்கள் அல்லவா?

— அப்படியா?

—ஆமாம். பாஞ்சாலி சபதத்தின் மையப்பகுதிகள் கிட்டதட்ட 'அப்படியே' நாடகங்கள்.

— அப்படியா?

—ஆம். எனக்குத் தெரிய நான்கு குழுக்களாவது அதை மேடையேற்றியிருக்கிறார்கள். காரணம் தெளிவாகவே தெரியும் அதன் நாடக மையம்தான். பேராசிரியர் ராமானுஜம் கூட அதை 'பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்ற தலைப்பில் மேடையேற்றியிருக்கிறார். ஆனால் இவையெல்லாம் எனக்கு செய்திகள்தான். எந்த நாடகத்தையும் நான் பார்த்ததில்லை. அதனால் நான் குறிப்பிடப் போகும் பகுதியை யாராவது எனது கண்ணோட்டத்தில் செய்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. இருக்காதென்கிற முரட்டுத் தைரியத்தில் நானதை உங்களுக்கு சொல்லப்போகிறேன்.

— என்ன அது?

—பாஞ்சாலி சபதத்தில் 'திரௌபதி சூதில் வசமானது பற்றி கௌரவர் கொண்ட மகிழ்ச்சி' என்ற தலைப்பின் கீழ் வரும் பகுதி அந்தப் பகுதியில் பாரதியிடம் ஒரு அற்புதமான நாடக, சினிமா டைரக்டரைப் பார்க்க முடியும்..

காவியத்தின் உச்சக் கட்டம்.( Climax. ) அடுத்த புள்ளியில் காவிய முரண் வெடிக்கப் போகிறது. என்ன ஆகும்? யார் பக்கம் இறுதி வெற்றி? சபையே மூச்சடக்கிப் பார்க்கிறது. ஒவ்வொரு நெற்றியிலும் சுருக்கமும் வியர்வையும்.

சகுனி மாமன் 'இரு பகடை போடு என்கிறான்.' பொய்மைக் காய்களும் இரு பகடை போட்டு நிற்கின்றன.

அடுத்து வரும் பாரதியின் 36 வரிகளும் காவியச் சுவையும் நாடகச் சுவையும் மெய்கூடி ஆடும் நர்த்தனம். அந்த 36 வரிகளுக்கு ஒரு Production Script போட்டிருக்கிறேன். பார்க்கிறீர்களா

படிப்பகம்

www.padippakam.com

| பகுதி | ஒளி | ஒலி | நிகழ்வு | வசனம் / பின்புலத்தில் கவிதை வரிகள் |
|---|---|---|---|---|
| 1 | ஒருமின்னல் மேடையைக் கிழிக்கிறது. | 1. இடியோசை 2. கிரிக்கெட் ஆட்டத்தில் பரபரப்பான ஹோம் டீம் சிக்சர் அடித்த ஆரவாரம். | ஒலி எண் 2உடன் இணைந்து கௌரவ சபையின் துரியோதனன் கட்சி ஆ! வென்று முகட்டை முட்டுவது போலத் துள்ளி எழுகிறது. | பின்புலத்திலிருந்து ஒலி ஆரவாரத்தையும் மீறி கனத்ததாகக் கவிதைக் குரல் கேட்கிறது.<br>"திக்குக் குலுங்கிடவே எழுந்தாடுமாம் தீயவர் கூட்டமெல்லாம்." |
| 2 | பக்கவாட்டில் ஒருபுறமிருந்து மட்டும். | இல்லை. | துள்ளி எழுந்த பலவித நிலைகளிலேயே கூட்டம் 'உறைந்து' விடுகிறது. (Freeze) | மேலே உள்ள கவிதை வரிகளே மீண்டும் இரண்டு முறை கேட்கிறது.<br>"திக்குக் குலுங்கிடவே......"<br>கவிதை:<br>"தக்கு தக்கென்றே அவர் குதித்தாடுவார்<br>தம்மிரு தோள் தட்டுவார்."<br>/ஆரவாரம் இசை வடிவம் கொள்கிறது./<br>இசை கொஞ்சம் தாழ மீண்டும் கவிதை.<br>"தக்கு தக்கென்றே......" |
| 3 | பொதுவாக இயல்பு ஒளி. ஆனால் பாத்திரங்கள் 1 முதல் 7 வரை பிரதானப்படும் போது மட்டும் அவர்கள் மேல் மேலிருந்து Spot light விழுகிறது. | பகுதி 1 இல் உள்ள கிரிக்கெட் மைதானத்தின் ஆரவாரம். | Freeze உடைந்து கூட்டம் குதிக்கிறது.<br>1. ஒருவன் விக்கெட் வீழ்த்திய மணீந்தர்சிங் போல ஓடி வருகிறான்.<br>2. ஒருவன் ஓடிவந்து விவியன் ரிட்சர்ட்ஸ் போலக் கையைச் சுழற்றுகிறான்.<br>3. ஒருவன் அமிர்தராஜ்போல.<br>4. இருவர் வெற்றிக்குப் பின் வெஸ்ட் இண்டீஸ் கையுயர்த்தி உள்ளங்கை தட்டுவது போல.<br>5. இருவர் கோலாட்டம் ஆடுவதாக. | |

படிப்பகம்

www.padippakam.com

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 6. ஒருவன் பீமன் முன் தோள் தட்ட.<br>7. ஒருவன்:<br>எல்லாரும்: | ஒக்கும் தருமனுக்கே இது ஓ! ஓ!<br>ஓ! ஓ!<br>மீண்டும் கிரிக்கெட் மைதான ஆரவாரம். கவிதை:<br>"ஒக்கும் தருமனுக்கே இஃதென்பார்<br>ஓ! ஓ!வென் றிறைந்திடுவார்." |
| | மேலிருந்து ஸ்பாட் லைட். | | 8. மீண்டும் இருவர் தவிர கூட்டம் உறைய, அவ்விருவரும் முன் வந்து சந்தோஷ உச்சத்தில் தோள்குலுங்கக் கக்கென்று சிரிக்கிறார்கள். | கவிதை:<br>கக்கு கக்கென்றே நகைப்பார்<br>துரியோதனா கட்டிக்கொள் எம்மை<br>யென்பார்." |
| 4 | " | | 1. Down-Stage Extreme leftஇல் நிற்கும் ஒருவன், உள்ளே, சகுனி நிற்குமிடம் பார்த்து கத்துகிறான்.<br>2. விச்சலன் தன் கழுத்திலிருந்த மாலையை சகுனியிடம் வீசுகிறான்.<br>3. அதேபோல் இன்னும் இருவர். | அவன்: சூர துச்சாதனா<br>தூக்கடா மாமனை!<br>விச்சலா, மாமன்மேல் வீசடா மாலை!<br><br>எல்லாரும்: ஓ! ஓ! |
| | | மீண்டும் மைதான ஆரவாரம் | 4. துச்சாதனன் சகுனியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொள்கிறான். ஆடுகிறான். | கவிதை:<br>"மாமனைத் தூக்காயென்பார். அந்த மாமன் மேல் மாலை பல வீசுவார்." |
| 5 | மேலிருந்து ஸ்பாட் லைட் அவன் செல்லுமிடமெல்லாம் நகர. | ஆரவாரம் மெல்லமெல்ல குறைகிற அமைப்பு. | 1. ஒருவன் மெல்லெ கிளம்பி ஒவ்வொரு இடமாய் நின்று, உதட்டில் விரல் வைத்து 'உஷ் உஷ்' என்று சொல்லி, எல்லா இடத்திலும் சத்தத்தைக் குறைத்து, முடிவில் சத் | அவன்:<br>சேமத் திரவியங்கள் பல நாடுகள்<br>சேர்த்ததில் ஒன்றுமில்லை.<br>இன்னொருவன்:<br>சேர்த்ததில் ஒன்றுமில்லை...? |

படிப்பகம்

www.padippakam.com

| பகுதி | ஒளி | ஒலி | நிகழ்வு | வசனம் / பின்புலத்தில் கவிதை வரிகள் |
|---|---|---|---|---|
| | | | தமே இல்லாமல் செய்து, சென்டர் ஸ்டேஜ் நடுவில் வந்து நின்று, நேரம் எடுத்து, எல்லாரையும் ஒரு முறை நிதானமாகச் சுற்றிப் பார்த்துவிட்டு,ஒரு ரகசியம் போன்ற குரலில் சொல்கிறான்.<br>2. துச்சாதனன் மீண்டும் சகுனியைத் தூக்குகிறான்.<br>ஆர்ப்பாட்டத்திற்கிடையே துச்சாதனன் சகுனியைக் கொண்டு வந்து விடுகிறான்.<br>/துரியோதனன்-பின்னால் வந்து கொண்டிருக்கிறான்./<br>துச்சாதனன் சகுனியைக் கீழே இறக்குகிறான். | அவன்:<br>சேமத் திரவியங்கள் பல நாடுகள்<br>சேர்த்ததில் ஒன்றுமில்லை;<br>காமத் திரவியமாம் இந்தப்பெண்ணை<br>கைவச மாகச்செய்தான். (யும்<br>/குபீர் சிரிப்புடன் மேலும் ஆரவாரம்./<br>ஒருவன்: சகுனி மாமன்!<br>எல்லாரும்: வாழ்க!<br>முதல் ஆள்: தெய்வம் சகுனிமாமன்<br>எல்லாரும்: வாழ்க! நமது தெய்வம்!<br><br>ஒருவன்: வணங்காமுடி துரியோதனன்<br>எல்லாரும்: வாழ்க!<br>/பின்புலத்திலிருந்து கவிதை/<br>"மாமனோர் தெய்வமென்பார்- துரி<br>யோதனன்வாழ்கவென்றார்த்திடுவார்." |
| 6 | இயல்பு | 1. பூஜை மணி ஓசை<br>2. ஜிங்ஜா ஒலி.<br>3.பஜனை பின்னணி | 1. ஒருவன் சகுனி முன் வந்து பூஜைமணி அடிப்பதுபோல் கையசைத்து பக்தி காட்டி வணங்க.<br>2. இன்னொருவன் கடா வெட்டுவது போல 'நடிக்க.'<br>கூட்டம் மீண்டும அதிரச் சிரிக்கிறது. | முதல் ஆள்: பூசை புரிவோமடா- உயிர்<br>பொங்கல் உனக்கிடுவோம். (மாமனே<br>( ஒலி 1 )<br>பின்புலத்திலிருந்து கவிதை.<br>"பூசை புரிவோமடா- உயிர் மாமனே<br>பொங்கல் உனக்கிடுவோம்."<br>( ஒலி 2 & 3 ) |

படிப்பகம்

1. துரியோதனன் வந்து மாமன்முன் நிற்கிறான். அவன் தோள்களில் கைவைத்து முகம் பார்க்கிறான். முகங்களில் புன்னகை, எக்களிப்பு. துரியோதனன் மாமனை நெஞ்சோடு கட்டிக்கொள்கிறான்.

சபை முழுக்க: ஆஹா! ஆஹா!
"நின்று துரியோதனன்- அந்த
நெஞ்சோடு சேரக்கட்டி" (மாமனை
சபை: ஓ!

2. துரியோதனன் மீண்டும் மாமன் முகம் பார்த்து

"என் துயர் தீர்த்தாயடா- உயிர் மாம
ஏளனந் தீர்த்துவிட்டாய். (னே
அன்று நகைத்தாளடா- உயிர் மாமனே
அவளைஎன் ஆளாக்கினாய்!"
—கூட்ட ஆர்ப்பரிப்பு.

3. துரியோதனனும் சகுனியும் மட்டும் 'உறைந்து விட' மீதிக் கூட்டம், பகுதி 3இல் கண்டதுபோல் அங்கு மிங்கும் ஓடி, நடனமாடுகிறது.

ஒளி நான்குபுறமிருந்தும் அவ்வப்போது மாறி மாறித் தேவைக்கேற்றபடி வீசுகிறது.

'உறைவு' உடைந்து, துரியோதனன் பேசியபடியே முன்னால் வருகிறான். கூட்டம் இடம் விட்டு தள்ளி நின்று வேடிக்கை பார்க்கிறது.
அவன் தன் வசனங்களுக்கேற்ற மெய்ப்பாடுகளோடு ஒரு மெல்

துரியோதனன்:
என்றும் மறவேனடா- உயிர்மாமனே
என்ன கைமாறு செய்வேன்?
ஆசை தணித்தாயடா- உயிர் மாமனே
ஆவியைக் காத்தாயடா!
பூசை புரிவோமடா- உயிர் மாமனே
பொங்கல் உனக்கிடுவோம்!

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

| குபதி | ஒளி | ஒலி | நிகழ்வு | வசனம் / பின்புலத்தில் கவிதை வரிகள் |
|---|---|---|---|---|
| | | | லிய நடன கதியை மேற்கொள்கிறான். அவன் முடிக்கும் தருவாயில் குதித்துக் குதித்து ஒரு ருத்ர தாண்டவ கதியை அடைந்திருக்கிறான். | நாசமடைந்ததடா- நெடு நாட்பகை<br>நாமினி வாழ்ந்தோமடா!<br>பேசவுந் தோன்றுதில்லை- உயிர் மாம<br>பேரின்பங் கூட்டிவிட்டாய்! (னே<br>/ பின்புலத்திலிருந்து கவிதை /<br>''என்று பல சொல்லுவான்- துரியோத<br>எண்ணியெண்ணிக் குதிப்பான். (னன்<br>குன்று குதிப்பதுபோல்- துரியோதனன்<br>கொட்டிக் குதித்திடுவான்.'' |
| | | | 5. சட்டென்று அவன் உறைந்து விட, கூட்டம் சகல ஆரவாரங்களோடும் ஆட்டங்களோடும் அவனைச் சுற்றிச் சுற்றி ஆடுகிறது. கவிதையின் குரல், ஆரவாரம், ஒலி, எல்லாம் மெல்ல மெல்ல அடங்கி முடிகின்றன. | கவிதை:<br>- அவர் யாரும்<br>வகைதொகை யொன்றுமின்றி<br>அன்றுபுரிந்ததெல்லாம்- என்றன் பாட்<br>ஆக்கல் எளிதாமோ? (டிலே<br>ஆக்கல் எளிதாமோ?<br>ஆக்கல் எளிதாமோ? |

படிப்பகம்

www.padippakam.com



— இந்த நாடகம் எவ்வளவு நேரம் போகும்?

—20, 25 நிமிஷங்கள் வரலாம்.

— இந்தக் கால அளவுக்குப் பொருந்தாமல் பெரிய செலவும் சிரமமும் வைக்கும் போலிருக்கிறதே? ஒரு பெரிய 'அரண் மனை செட்' போடுவதோடு நடிகர்களும் நாற்பது ஐம் பது பேர் வேண்டுமே.

உண்மைதான். ஆனால் தகுதியானவை என்றால் நாம் அதற் கான விலையைக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? நான் ஒரு தடவை கேரள கைவினைப் பொருட்கள் காட்சி அறையில் பார்த் தேன். ஒரு இரண்டங்குலத் தந்தச் சிற்பத்திற்கு ரூபாய் இரண்டா யிரம் என்று விலைச் சீட்டு தொங்க விட்டிருந்தார்கள்.

ஆனாலும் வசதி வாய்ப்புகள் என்பது இருக்கத்தான் செய் கின்றன. அதனால் இந்த வசதி வாய்ப்பு கிடைக்கும்வரை என்ப தோடுவிட 'கதைக்கு' இன்னொருவகையான ஸ்கிரிப்டும் இருக்கட் டுமே என்று வேறு ஒரு ஸ்கிரிப்டும் போட்டிருக்கிறேன். அதில் நடி கர்கள் இரண்டே பேர்தான்.

— 50 பேர் கொண்ட சபையை 2 நடிகர்கள் 'பிரதிநிதித்து வப் படுத்தி'விட முடியுமா?

—முடியும். Mime அவர்களுக்கு இதில் ஒரு வரமாக இருக் கும். யாராவது ஆர்வமுள்ள நடிகர்கள் கேட்டால் சொல்லுங்கள். ஸ்கிரிப்ட்டைத் தரலாம். அதிருக்கட்டும். இந்த ஸ்கிரிப்ட் எப்படி இருக்கிறது? அதன் கால அளவு பற்றிய சந்தேகம் மட்டும்தானா வந்தது உங்களுக்கு?

— அப்படியில்லை. நன்றாகவே இருக்கிறது.

—எதை வைத்து நன்றாக இருப்பதாகச் சொல்கிறீர்கள்?

— ரொம்ப ஆபத்தான கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது.

—மேடையில் நிகழ்த்திக் காட்ட வேண்டியதின் வரி வடிவம் இது. இதை வெறும் வரியாகவே படித்துவிட முடியாது. படிக்கும் போதே காட்சி ரூபங்களை மனதில் ஆக்கிக் கொண்டே போக வேண்டும். உதாரணமாக, எடுத்தவுடன் கௌரவர் சபை என்று வருகிற போதே, நீங்கள் அதை- அந்த 'கௌரவ சபையை' காட்சி ரூபமாக உள்கண்ணில் பார்த்துவிட வேண்டும். அப்போதுதான் அடுத்து அந்தச் சபை 'திக்குக் குலுங்கிட எழுந்தாடும்' காட்சி வசப்படும்.

உண்மையில் இது, நாடகத்தை வரிவடிவத்தில் படிக்கும் எந்த ரசிகனுக்கும் ஒரு கூடுதல் வேலைதான். ஒரு சிறுகதையைப் படிப்

படிப்பகம்

www.padippakam.com



பது போல எந்தச் சிரமமும் இல்லாது படித்துக் கொண்டே போய்விட முடியாது. சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கலாம். 'நான் நாடக மென்றால் படிப்பதே இல்லை. அந்தப் பக்கங்களை அப்படியே தள்ளிவிடுவேன்!' இது இந்த காட்சி ரூபங்களை கற்பனை செய்ய வேண்டிய சிரமத்தின் காரணமாகத்தான். ஆனால் இப்படிக் காட்சிப்படுத்திப் படித்துப் போவது ஒரு சுவை. அந்த சிரமத்திற்கு வெகுமதி உண்டு. அதற்குத் துணிந்தால்தான் நாடகத்தை, அதுவும் Production Script வடிவத்தில் பார்க்க முடியும்.

— உண்மைதான். சரி. நாடகக் கூறு உள்ள ஒரு காவியத்திலிருந்து எடுத்தாக்கப்பட்ட ஸ்கிரிப்டைக் கொடுத்தீர்கள். நாடகத்திற்கென்றே எழுதப்பட்ட நாடக இலக்கியம்.... கொஞ்சம் இருங்கள். அதற்கு முன் ஒரு கேள்வி. நாடகத்தின் இணைப்பு இலக்கியம்தான் என்பது உறுதியானால், இலக்கியமோ இலக்கிய ஆசிரியனோ இல்லாமல் நாடகம் இல்லையா? இலக்கியவாதிதான் பெரியவனா?

—உண்மையில் இதுதான் ஆபத்தான கேள்வி. கொஞ்சம் கவனம் தப்பினாலும் பற்றி எரிய ஆரம்பித்துவிடும்.

இதில் யார் பெரியவர், எழுத்தாளனா, இயக்குநனா, நடிகனா என்ற கேள்வியே இல்லை. ஒவ்வொருவரும் அவரவர் தளத்தில் செயல்படுகிறார்கள். ஒப்பிட்டுப் பார்க்க முடியாத களங்கள் அவை. அப்படிப் பெரியவர் சின்னவர் தரம் பார்த்தே ஆக வேண்டுமென்றால் அவரவர் தளத்திற்குள்ளேயேதான் பார்க்க வேண்டும், எழுத்தாளர்களுக்குள் இவரது இடம் எது? இயக்குநர்களுக்குள் இவரது எண் எது? நடிகர்களில் இவர் எத்தனை பேருக்கு முன்னால் இருக்கிறார் என்று.

இலக்கியமோ இலக்கியவாதியோ இல்லாமல் நாடகம் இல்லையா என்று கேட்டீர்கள். இல்லைதான். உடனே நீங்கள் கேட்கலாம், ஒரு இயக்குநரே தனது நாடகத்திற்கான பிரதியை எழுதிக் கொண்டால் என்ன சொல்வீர்கள் என்று. இங்கே இயக்குநரே இலக்கியவாதியாகவும் மாறிவிட்டதையும் இலக்கியம் செய்துவிட்டதையும் நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு இலக்கியவாதி தனது அல்லது பிறர் நாடகப் பிரதியொன்றை தானே மேடையேற்ற முன் வரும் போது அவன் இயக்குனராகவும் ஆகிவிடுவது போல.

பொதுவாக நாடகம், சினிமா என்று வரும் போது 'கதை'க்கு பெரும்பாலும் இலக்கியவாதியை நம்புகிறோம். காரணம், தொழில் நுட்பத்திற்கும் மேடைக் கலைக்கும் மேடை மொழிக்கும் ஒரு இயக்குநன் தனது வாழ்நாளை செலவிட்டுக் கொண்டிருப்பதைப் போல வாழ்வைப் பற்றிய அலசலுக்கும் தேடலுக்கும் உண்மையைக்

படிப்பகம்

www.padippakam.com



கண்டுணரும் வேட்கைக்கும் தனது வாழ்நாளை செலவிட்டுக் கொண்டிருப்பவன் இலக்கியவாதி. சிந்தனையின் தளத்தில் சொல்லப் போனால் ஆரம்பத்தில் சிந்திப்பது, பின்பு எழுதுவது என்ற நிலை முற்றி, பின்பு எழுதுவதே ஒரு சிந்திக்கும் process என்ற நிலையை அடைந்து விடுகிறவன் அவன். ஆகவே நல்ல இயக்குநனும் நல்ல எழுத்தாளனும் இணைவதில்தான் நாடகம் அல்லது சினிமாவின் வெற்றி கால்கொள்கிறது.

உலக அளவில் இதற்கான உதாரணங்களை பார்க்க முடியும். ஸ்டானிஸ்லாவ்ஸ்கியும் ஆன்டன் செகாவும் இணைந்து செயல் பட்டார்கள். ரியூநொசுகெ படைத்த இரண்டு சிறுகதைகளைத் தழுவித்தான் அகிரா குரோசாவா தனது பிரசித்தி பெற்ற ரஷோமான் சினிமாவை எடுத்தார். சத்யஜித் ரே, பிபூதி பூஷன் பானர்ஜியை தாகூரையும் எடுத்துக் கொண்டார். இதனால் எல்லாம் இந்த இயக்குனர்கள் தாழ்ந்து விடவில்லை. அவர்களும் சிகரங்களைத் தொட்டவர்களாகவே பெருமை பெற்றார்கள். ஏனென்றால் ஒரு வடிவத்தை இன்னொரு வடிவமாக வடித்தெடுப்பது என்பது (இங்கே இலக்கியத்தை நாடக மொழிக்கு மொழி பெயர்ப்பது) சாதாரண காரியமல்ல. அதற்கும்கூட ஞானமும் முயற்சியும் நெஞ்சில் ஒரு தீயும் சதா தேவைப் படுகின்றன.

— நல்லது. நான் ஒரு கிளைக் கேள்வியை முன் வைக்கப் போய், ரொம்ப தூரம் தள்ளி வந்துவிட்டோம் என்று நினைக்கிறேன். மீண்டும் மெயின் கேள்விக்கு வருகிறேன்.

—கேளுங்கள்.

— பாஞ்சாலி சபதம் மூலம் ஒரு இலக்கியம் நாடக வடிவாக்கம் பெறுவதை விளக்கினீர்கள். இப்போது நாடகமாகவே எழுதப்பட்ட நாடகப் பிரதியொன்று மேடையேறும் விதத்திற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள். அதில் நீங்கள் இதுவரை சொல்லி வந்த எல்லா நாடக இலக்கணங்களும் பொருந்தி வந்தால் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

—சொல்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



**பாரதிராமன்**

தெரிந்தவர்களுக்குத் தெரியும்
தெரியாதது என்னவென்று.
தெரியாதவர்களுக்குத் தெரியும்
தெரிந்தது என்னவென்று.
தெரிந்தவர்களும்
தெரியாதவர்களும்
தெரியாமலும்
தெரிந்தும்.

**ஜீவராம சுந்தர்**

மொட்டை மாடி.
வெட்ட வெளியில்
மெல்லிய காற்று
அரவணைத்திருக்க,
குழல் விளக்கொளியில்
எதிரெதிரில் அமர்ந்து
எழுதிக்கொண்டிருந்தோம்
உனக்கான நாடகத்தை நீயும்
நமக்கானவற்றை நானும்.

**ஸ்ரீமுஷ்ணம் சத்யன்**

அன்று உன்னோடு
கைகோர்த்துக்கொண்டு நடந்தபோது
இந்த மண்ணை நான் நினைக்கவில்லை.
இன்று நான் மட்டும்
நடக்கிறேன் நினைவுகளோடு.
ஒருநாள்
நானும் இங்கு இல்லாமல் போவேன்.
அப்போதும் இந்த மண் இருக்கும்;
மண் மட்டுமே இருக்கும்.

**நிஷா**

கம்பிக்குக் கீழே குனிந்து
காட்சிகள் பார்த்துக்கொண்டு வந்தேன்.
முதுகு வலித்தது.
காதோரம் குளிர்காற்று சில்லிட்டது.
கம்பியின் துருவேறிய பாகங்கள்
நெற்றியில் உரசி குறுகுறுத்தன.
அவசியங்கள் கருதி
சகிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன்.
கிட்டத்தட்ட
எல்லாம் முடிந்தபின்தான் தெரிந்தது
நிமிர்ந்து பார்த்தாலும்
காட்சிகள் தெரியும் என்பது.

படிப்பகம்

www.padippakam.com

22ஆம் பக்கத் தொடர்ச்சி:

வணி மதிப்பறிந்து, தலித்திலக்கியத்திற்கும் தங்களையே முன்னோடிகளாய் முத்திரை குத்திக் கொள்ளும் ஆசையில், 'தலித் தலித்' என ஓசைப்படுத்துகிறார்கள். படித்த, இலக்கியம் பேசுகிற தமிழர்களின் உள்ளே மட்டும் இன்னமும் அறிந்தோ அறியாமலோ தீட்டு பார்க்கும் கற்புக் கவசம்தான்.

பஞ்சமர்கள் வர்ணாசிரமப் பட்டியலுக்கு வெளியே விடப்பட்டவர்கள். அவர்கள் இந்துக்களாய் தீட்சை பெற்ற பின் வர்ணாசிரமப் பட்டியலில் அவர்களுக்குச் சூத்திரர்களாய் இருக்கவும் இயங்கவும் பதவி உயர்வு வழங்கப்பட்டதா என்று காஞ்சி சங்கர மடத்தைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலக்கிய விமர்சகர்களும் இந்தப் போக்கிற்கு அன்னியரல்லர். இலக்கியப் போக்குகளில் உடைபடும் மௌனங்கள், இவர்களிடம் இந்தியச் சூழலை உள்வாங்கிக் கொள்வதற்கான போதுமான கவனத்தையோ பாதிப்பையோ ஏற்படுத்தவில்லை. நமக்கு என்ன வேண்டும் என்பதை ஆய்ந்தறியும் முன்னோடுகிற பார்வை படைப்பாளிக்கு மட்டுமானதல்ல, தங்களுக்கும் உண்டு என்பதான புரிதல் இன்னும் வெளிப்படவில்லை. படைப்புகளில் சொற்களுக்கப்பால் செயல்படும் சிந்தனைப் போக்கைத் துருவி எடுக்கும் திறனும் தீவிரமும் வெளிப்படவில்லை. இவர்களுடைய மூன்றாவது கண்ணுக்குப் பார்வையைப் போலவே பாதையும் அர்த்தமுள்ளது என்பது தெளியப்படவில்லை. ஆனாலும் விமர்சிக்கும் சுகத்துக்காகவே விமர்சிக்கும் விமர்சகர்கள் நிறையவே உண்டு.

---

— இங்கு என்மீது வைத்த ஒரு விமர்சனம் பற்றி சிறு விளக்கம்: ஒரு சொல்லைச் சொல்லாகச் சொன்ன என்னை அச்சொல்லுக்கு வளர்த்துக்கொண்ட படிமங்களில் கொண்டு போய்ச் சொருகிப் பார்த்து சுகப்பட விரும்பும் விமர்சனம்.

எங்களுக்குத் துணையாக 'சைவ உணவுப் பழக்கமுள்ள' ஒரு சிறுவனைக் கேட்டிருந்தோம். மூத்த பெற்றோரின் நிராதரவைக் களைந்துகொள்வற்கான, உதவி கோரும் வேண்டுகோள். உதவ நினைத்தாரோ என்னவோ, உடனடியாக விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்டார் நண்பர் பொதியவெற்பன்.

'கவுச்சி சாப்பிடாத' சிறுவனைக் கேட்டிருந்திருக்கலாம். தோன்றவில்லை. பழகவில்லை. நான் ஏதோ "1. நெற்றியில் நீறு பூசிய, 2. திருவாசகம் பாடமுள்ள, 3. திருமந்திரம் பாடத் தெரிந்த, 4. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் படித்த, 5. அப்படியொரு வீட்டுப் பிள்ளையாய்"ப் பிறந்த ஒருவனைக் கேட்டதாக விமர்சனம். ஷா கூட சைவ உணவுப் பழக்கமுள்ளவன்தான். ஒரு சாதிக்குச் சொந்தமாகுமா? பொதியைத் தொடர்ந்து சிவா, சிவகுருநாதன் ஆகிய மேலும் இருவர். இப்போதைக்கு மூவர்தான். எதிர்காலத்தில் இன்னும் வரலாம். நீங்கள் விமர்சியுங்கள்; எவ்வளவு கடுமையாகவும். உங்கள் உரிமை அது. அத்துடன் நண்பராய் இருந்து, ஒரு நிராதரவான பிள்ளையைக் கொண்டு வந்து, "இவன் நீங்கள் உண்

www.padippakam.com

**Kavithaasaran, Oct. - Nov., 1994, Regd.No. TN/MSN 746**
**CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90**

—உள் பக்கத் தொடர்ச்சி

பதை உண்டு வளர்வான்,'' என்று சொல்லி இன்னமும்கூட உதவலாம். ஆயினும் விமர்சிப்பதில் உள்ள சுகம் உதவுவதில் இருக்காதுதான். இவ்வுதவியைக் கேட்டது எங்கள் பிழை.

முரண்படுகிற போதும் நண்பர்களாய் இருக்க ஆசை. இருப்போமே. 'சந்தாவை அனுப்புங்கள்' என்று எழுதக்கூட நேரமின்றி இயங்குகிறோம். எங்கள் ஒருமைக்கு உங்கள் நட்பு போதும். ஒவ்வொரு அடிக்குறிப்பும் இவ் உள்ளம் காட்டவே.

ஆக இலக்கியம் இவர்களை ஒன்றும் மாற்றிவிடவில்லை. அத வெறும் படிக்கும் சுகத்துக்காகத்தான்.

இங்கே கல்வி என்பது காலங்காலமாய் கற்றவர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொள்ளவும், மற்றவர்களைத் தங்கள் கட்டை விரலுக்கடியில் அழுத்தி வைக்கவுந்தான் பயன் பட்டிருக்கிறது. மனிதச் சீர்மை அற்றுப்போனதே முழுக்க முழுக்க கற்றவர்களின் கைங்கரியம்தானே. அவர்கள் படைக்கும் இலக்கியத்தின் அடியூற்றும் அப்படித்தான். உடனடியாக சமச்சீர்மையைப் பேசுவதோ போதிப்பதோ இல்லை. போதனை எந்த ரூபத்தில் இருந்தாலும் தான், அது தர நிர்ணயத் தராசுத் தட்டேறவே அருகதை அற்று விடுமே. இந்த சமுதாயத்தின் உடனடிப் பிரச்சினையே இந்தத் தர நிர்ணயம்தானோ? இவர்கள் செய்யும் இலக்கியத்துக்கு சமகால பலன்கள் இருக்கக்கூடாது; யாவும் நீண்ட காலப் பலன்கள்தாம்.

இந்தியக்கல்வியின் தன்மை இதுதான் எனில், அதை இன்று தலித்துகளும் பெறுகிறார்கள். இக்கல்வி அவர்களை மேலேற்றவு மற்றவர்களை கீழே தள்ளவும் உதவும்தானே.

அவன் தோள்கள் வலியன. சில பிணங்களைத் தாங்( பிணங்கள் புதைக்கப்பட்டபின் சிம்மாசனம் சும்மாவே கிடக்( நிரப்பப்படும். வலிய தோள்களால் நிரப்பப்படும். நம் சூ( அவனை நிரப்ப விடாது எனில், அவனுக்கும் அந்த சூழ்ச்சி கூடுந்தானே. அதோடு, 'ரௌத்திரம் பழகு' என்பது அவன் திரமாய் இருக்கும்.

நமக்குப் பிடிக்காத விஷயம்தான். ஆனால் 'பிடிக்கும் - ( காது' என்பதே பிழையில் நிர்மாணிக்கப் பட்டுள்ளதைப் புரி( கொண்டால் வருத்தம் வராது.

உலகம் நம் எல்லைக்கப்பாலும் விரிந்து கிடக்கிறது. அ( நம் காலடி மண்ணை நகர்த்திக் கொண்டிருக்கிறது. நாம் நக மறுத்தால், அகலும் மண்ணுக்கடியில் நமக்கொரு குழி நிச்சய இருக்கும். அதன் மேல் பின்னொருநாள் சாவகாசமாய் பூத்து சிரிக்கலாம்.

........................................................................

**Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras and Published at 580, T.H. Road, Madras-21 & Edited Kavithaasaran.**

படிப்பகம்